வாரப்பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்




மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

புத்தகம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 1991 வைகாசி திங்கள் 2-ம் நாள் (15—5—1960) ஞாயிற்றுக்கிழமை துல்கஃ 18 | இதழ் 45

# 'தமிழ் மக்கள் எப்படியும் திரண்டு எழுவார்கள்

## என்பதை முன் கூட்டியே அறிந்து கொண்டார் என் கணவர்

## அதனாலேயே தமிழரசுக் கட்சியுடன் அப்போதே ஒப்பந்தம் செய்தார்'

### கேள்விகள் கேட்டு குடைந்தவர்களுக்கு - திருமதி பண்டாரநாயகாவின் சூடான பதில்

(சுதந்திரன் விசேஷ நிருபர்)

"'என் கணவர் சாமானியப்பட்டவர் அல்லர். அவர் ஒரு தீர்க்க தரிசி. வரப்போகும் நிலைமையை முன் கூட்டியே உணர்ந்துதான் அவர் தமிழரசுக் கட்சியுடன் அன்றே ஒப்பந்தம் செய்து கொண்டார்"— என்று சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா கூறினார்.

தமிழரசுக் கட்சிக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் விவரங்கள் யாவை? அப்படித் தமிழரசுக் கட்சியுடன் பேச்சு வார்த்தை நடத்தியது சரியா?—இவ்வாறு கேள்விகள் எழுப்பிய சில பேர்வழிகளுக்குப் பதிலிறுக்கும் போதுதான் திருமதி பண்டாரநாயகா மேற் கூறியவாறு குறிப்பிட்டார்.

மத்திய மாகாணத்தையும், வட மத்திய மாகாணத்தையும் சேர்ந்த சிலர் திருமதி பண்டாரநாயகாவின் வீட்டிற்குச் சென்று தமிழரசுக் கட்சியும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் நடத்திய பேச்சு வார்த்தைகள் பற்றிச் சரமாரியாகக் கேள்விகள் கேட்டார்கள்.

#### நறுக்கான பதில்

யு என். பியின் கையாட்களான இந்தப் பேர்வழிகளை யு. என். பி. தலைவர்கள் தான் விசை கொடுத்து திருமதி பண்டாரநாயகாவிடம் ஏவி விட்டார்கள் என்று நம்பப்படுகிறது. கேட்கப்பட்ட அத்தனை கேள்விகளுக்கும் திருமதி பண்டாரநாயகா முகத்தில் அறைந்தாற்போல் 'நறுக் நறுக்'கென்று பதில் கொடுத்து வந்த வழியே அவர்களைத் திருப்பி அனுப்பி வைத்தார்.

ஒரு முக்கியமான கேள்விக்குப் பதிலிறுக்கும்போது திருமதி பண்டாரநாயகா ஆவேசத்தோடு பின்வருமாறு கூறினார்:

#### தீர்க்கதரிசி

"என் கணவர் சாமானியப் பட்டவர் அல்லர். அவர் ஒரு தீர்க்கதரிசி. தமிழ் மக்களிடையே ஏற்பட்டு வந்த எழுச்சியையும், விழிப்புணர்ச்சியையும், ஒற்றுமையையும் அன்றே அவர் கண்டு கொண்டார். அடுத்து ஒரு பொதுத் தேர்தல் வந்தால் தமிழரசுக் கட்சி இந்த நாட்டில் ஒரு மாபெரும் சக்தியாக உருப்பெற்றுவிடும் என்பதை அப்போதே அவர் உணர்ந்துகொண்டார்.

#### ஒப்பந்தம்

".அந்த சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையில் வேற்றுமைகளை வளர்த்துக்கொண்டு போவது நாட்டுக்கு நன்மை பயப்பதாகாது என்ற முடிவுக்கு வந்தார். அதனால் தான் அவர் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு செல்வநாயகத்துடன் ஒரு இடைக்கால ஒப்பந்தம் செய்துகொண்டார். படுபாவிகள் அந்த நல்லுறவு உடன்படிக்கையை முறியடித்தார்கள். பின் என் கணவரையும் பழிவாங்கி ஒழித்துக்கட்டினார்கள்.

#### அவரது இலட்சியம்

"இப்போது இரு சமூகத்துக்குமிடையே வகுப்பு சௌஜன்யத்தை வளர்க்கப் போகிறோம் என்று சிம்மாசனப் பிரசங்கம் தயாரிக்கிறார்கள். எப்படி வளர்க்கப் போகிறார்கள்? பிற்காலத்தில் என் கணவருடைய மனோநிலை எப்படியிருந்தது என்பது எனக்குத் தெரியும். அவருடைய இலட்சியங்களுக்கிணங்க நான் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியை வழி நடத்திச் செல்வேன்: அவருடைய இறுதிக்கால இலட்சியமே நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டும் என்பதை நான் அறிவேன். தனியாகவோ கூட்டாகவோ அடுத்த அரசாங்கத்தைச் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி அமைத்தே தீரும். ஜூலை 20ந் தேதி வரை இருந்து பாருங்கள்;"

இவ்வாறு திருமதி பண்டாரநாயகா கூறினார் என்று தெரிகிறது.

# டட்லி யு. என். பியின் சர்வாதிகாரியானார்

## விசேஷ தத்துவம்-தமிழ் தொகுதிகளில் ஆள்நிறுத்த

### கட்சி செயற் குழுக் கூட்டத்தில் தேர்தல் பற்றி இரகசிய தகவல்கள்

[சுதந்திரன் நிருபர்]

எதிர்வரும் பொதுத் தேர்தலைப் பொறுத்த வரையில் திரு. டட்லி சேனநாயகா யு. என். பி. கட்சியின் சர்வாதிகாரியாக்கப் பட்டிருக்கிறார். இப்படி அவர் சகல அதிகாரங்களையும் தம் கையில் எடுத்துக் கொண்டமைக்கு அந்தரங்க காரியங்கள் பல இருப்பதாக அறியப் படுகிறது.

மூன்று வாரங்களுக்கு முன்பு மூன்று தினங்களாக டெம்பிள் ட்ரீஸ் மாளிகையில் நடைபெற்ற அந்தரங்க கூட்டங்களைத் தொடர்ந்து யு என். பியின் தலைமை நிலையமான 'ஸ்ரீ கோத்தா'வில் யு என். பியின் செயற் குழுக் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது.

தேர்தல் நிலைமை பற்றியும், தேர்தல் சம்பந்தமாகத் தாம் செய்து கொண்டிருக்கும் பல இரகசிய ஏற்பாடுகள் பற்றியும் கூட்டத்துக்குத் தலைமை வகித்த திரு. டட்லி எடுத்துரைத்து மேலும் பல அந்தரங்க நடவடிக்கைகளை மேற் கொள்வதற்குத் தமக்கு விசேஷ அதிகாரம் வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

(9-ம் பக்கம் பார்க்க)

# அபேட்சகர் வேட்டையில் ஆலாய்ப் பறக்கும் ஜீ. ஜீ

## எத்திசையில் திரும்பினாலும் ஏமாற்றமே அடைகிறார்

### மட்டக்களப்பில் போட்டியிட ஒருவர் 60000 ரூபா கோரினார்

[சுதந்திரன் யாழ்ப்பாண நிருபர்]

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமது கட்சி சார்பில் போட்டியிட அபேட்சகர்களைத் தேடிப் பிடிப்பதில் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் இதுகாறும் செய்து கொண்ட முயற்சிகள் யாவும் படு ஏமாற்றமாக முடிந்து விட்டன என்று தெரிய வருகிறது.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது, தமது தமிழ் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து தமிழரசுக் கட்சியை எதிர்த்துப் போட்டியிடுமாறு திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் உள்ள ஒரு சில வழக்கறிஞர்களுக்கு தனிப்பட்ட கடிதங்கள் எழுதியிருந்தார். எந்த ஒரு கடிதத்துக்காவது சாதாரண பதில் கிடைக்கவில்லை யென்று தெரிகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

தொய்வு (ASTHMA) சங்காரி

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(RICHELET'S PECTORAL)

★ இடைவிடாத இருமல்
★ இளைப்பு
★ மூச்சுத் திணறல்
★ கிர்ர் புர்ர் சத்தம்
★ நெஞ்சுவலி
★ தொண்டை வலி






இவைகளை ஒழித்துக் கட்டுவதில் இணையற்றது. ஈனோ நோயினால் இன்னலுறுபவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். சில டோஸ் சாப்பிட்டதுமே நிம்மதியளிக்கக் கூடிய இவ்வற்புத சஞ்சீவி.

எங்கும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன்: 2885)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோவசியத்தால் ஊமைப் பெண்ணை பேச வைத்தார்- காக்கை வலியை குணப்படுத்தினர்

## டாக்டர் எலியாட்சனின் அரிய சாதனை

## உளநூல் துறையில் அழியா இடம் பெற்ற இவர் ஆரம்ப காலத்தில் வெறுத்து ஒதுக்கப்பட்டார்

அது லண்டன் பல்கலைக் கழக மருத்துவக் கல்லூரியின் சொற் பெருக்கு அவை. அவ்வவைவயில் மருத்துவர்கள், அறிஞர்கள், மருத்துவ மாணவர்கள், செல்வந்தர்கள் மற்றும் ஏனையோரும் எதையோ எதிர்பார்த்த வண்ணம் குழுமி இருந்தனர். ஒவ்வொருவரது வாயும் எதையோ முணு முணுத்தபடி இருந்தது. இதற்கெல்லாம் காரணம் அவர்கள் முன்னிலையிலே ஒரு புதுமையான காட்சி காட்டப்போவதே!

மருத்துவ வளர்ச்சியிலே டாக்டர் எலியாட்சன் புதுவித இரகசியம் ஒன்றைக் கண்டறிந்தார். மனோவசியத்தால் பல்வேறு நோய்களைக் குணப்படுத்த இயலும் என்பதை உணர்ந்தார். இதனை மற்ற மருத்துவர்களுக்கும் உணர்த்த விரும்பினர். மனோவசிய மருத்துவம் மருத்துவ உலகிற்கு இன்றியமையாதது என அவர் நம்பினர். எனவே தான் அவர் மனோவசிய சக்தியை மற்றவர்களும் அறியச் செய்ய வேண்டி மருத்துவக் கல்லூரி மண்டபத்தில் கூட்டம் கூடச் செய்தார்.

### ஊமை வாய் பேசினள்

மேடையில் தோன்றிய டாக்டர் எலியாட்சன், ஒரு 16 வயது இளம் பெண்ணையும் அழைத்துவந்திருந்தார். ஏதோ ஒரு காரணமாக இவள் ஈராண்டு காலமாக ஊமையாகி விட்டிருந்தாள். டாக்டர் எலியாட்சன் அப் பெண்ணை அழைத்துத் தன் முன்னே நிற்கச் செய்தார், தனது முன் விரலால் அவளது நெற்றியில் அழுத்தி, பார்வையை எல்லாம் ஒன்று திரட்டி அவளது கண்களில் செலுத்தினர். சில நொடிக்குள் அப்பெண் நித்திரையில் அயர்ந்து விட்டாள். நாழிகைகள் சில கழிந்ததும் மீண்டும் அவள் விழித்து வாய் பேச ஆரம்பித்து விட்டாள். கண்டவர்கள் யாவரும் வியந்தனர்—அவரைப் போற்றினர்.

### எலியாட்சன் எழுப்பிய கண்டனக்குரல்

இச் சிறு நிகழ்ச்சி எலியாட்சனின் புகழை உயர்தியது. இதனுல் இவர் 19ம் நூற்றுண்டின் தலைசிறந்த மருத்துவர் எனப் புகழ்பெற்றுர்.

டாக்டர் எலியாட்சன் லண்டனில் 1791ல் மருந்து வியாபாரிக்குப் பிறந்தவர். மருத்துவத்திலே நாட்டம் கொண்ட இவர், மருத்துவத்திற்கே புகழ்பெற்ற எடின்பரோ பல்கலைக் கழகத்தில் பயின்றுர். செயின்ற் தாமஸ் மருத்துவ மனையில் தலைமைப் பதவி வகித்துக்கொண்டே பல கட்டுரைகள் எழுத ஆரம்பித்தார். அவரது எழுத்திலே புரட்சிக் கருத்துக்கள் புகுந்து விளையாடின. டாக்டர்கள் செய்யும் தவறுகளை வன்மையாகக் கண்டித்தார். அறுவைச் சிகிச்சை செய்யும் சில டாக்டர்கள் கை நகங்களில் மண்டிக்கிடக்கும் அழுக்கைச் சுத்தம் செய்யாமலே சிகிச்சை செய்கிறுர்கள் எனப் பகிரங்கமாக எழுதினர்.

### கழகத்தின் மீது குற்றச் சாட்டு

லண்டனில் 'ராயல் காலேஜ் ஆப் சர்ஜன்' என்ற ஒரு கழகம் உண்டு. இது அறுவைச் சிகிச்சையைப் பற்றி ஆராய்ந்து வரக் கூடியது. இக் கழகத்தின் பிழைகளை டாக்டர் எலியாட்சன் ஒவ்வோர் அங்கத்திலருக்கும் எடுத்துக் காட்டினர். இதனுல் கழக அங்கத்தினர்கள் வெகுண்டெழுந்தனர். டாக்டர் எலியாட்சனுக்கு எச்சரிக்கை விடுத்தனர். இதனுல் அவர் வேலையும் பறிபோனது.

### ஆராய்ச்சியும் கண்டுபிடிப்பும்

மனோவசியத்தைப் பற்றி ஆராய வேண்டுமென்று அவாக் கொண்ட எலியாட்சன் 1837-ல் தத்துவ, மெஸ்மரிச தந்தையான அன்டோன் மெஸ்மர் என்பவரின் தத்துவங்களைக் கற்றுத் தெளிந்தார். டாக்டர் எலியாட்சன் மனோவசியம் மூலம் நோயால் அவதியுறும் நோயாளியின் வேதனையைக் குணப்படுத்த முடியும் என்பதைக் கண்டார். எலியாட்சன் மனோவசிய தத்துவத்தைப் பல கோணங்களில் வளப்படுத்தினர்.

### சிகிச்சை

அன்றி 1838-ல் காக்கை வலி நோயால் வேதனையுற்ற இரு சிறுமிகளை டாக்டர் எலியாட்சன் மனோவசியத்தால் குணம் பெறச் செய்தார். 'வட லண்டன் சிறுக்கர் இல்லம்' என்ற இடத்தில் எலியாட்சன் தனது மனோவசியத் திறமையைக் காட்டினர். மலபேதத்தால் துன்புற்ற ஆறு பெண்களை மீண்டும் சுய நினைவு வரச் செய்தார்.

எலியாட்சன் மன சிகிச்சையிலே வல்லமை பெற்றவர் என்று கேள்வியுற்ற மக்கள் மன நோய் தீர்க்க அவரிடம் சென்றனர். மனநோய் வரும் காரணங்களை எலியாட்சன் விரிவுபடுத்தி அவர்களிடம் விளக்கினர். அவரது காரணங்கள் லண்டன் மருத்துவக் கமிட்டியை ஆத்திரத்திற்குள்ளாக்கின. அதோடு அவரது குருட்டுக் காரணங்களை நிறுத்தும்படி ஆக்ஞை பிறப்பித்தது.

### உளநோய் நூல்

எழுத்திலே விளக்க எண்ணிய எலியாட்சன் உள நோயைப் பற்றி ஒரு நூல் எழுதினர். இந்நூலில் மன நோயை எவ்வாறு மனோவசியம் கொண்டு குணப்படுத்த இயலும் என்பதைத் தெள்ளென விளக்கினர்.

வட லண்டன் மருத்துவ மனையிலே நோயாளிகள் வேதனையால் துன்புற்றனர். இது கண்ட எலியாட்சன் தனது வழக்கமான சிகிச்சையை ஆரம்பித்தார். தனது சகோதரி ஜேனிடம் ஒரு சிலிங்கைக் கொடுத்து ஒவ்வொரு நோயாளியின் கையிலும் வைத்து அழுத்தும்படி கோரினர். அதன்படி செய்யப்பட்டது. பிறகு டாக்டர் ஏதோ முணுமுணுத்தார். நோயாளிகள் அனைவரும் உறங்க ஆரம்பித்தனர். சில நாழிகைகள் கழித்து எழும்பிய நோயாளிகள் வேதனை மறந்திருக்கக் கண்டனர். அவர்கள் நிம்மதி பெற்று டாக்டர் எலியாட்சனை வாழ்த்தினர்.

### எலியாட்சனுக்கு எதிர்ப்பு

சில டாக்டர்கள் எலியாட்சனின் மருத்துவ சிகிச்சையைப் பற்றி ஆட்சேபக் கருத்துக்கள் எழுப்பினர். இருப்பினும் இவரது சிகிச்சையை ஆராய்வதற்கு விசேஷக் கமிட்டி ஒன்று நிறுவப்பட்டது. இவரது கருத்தை எதிர்த்த 'லேன்செட்' என்னும் பத்திரிகை ஆசிரியர் எலியாட்சனின் கட்டுரைகளை அவரது பத்திரிகையில் வெளியிட மறுத்து விட்டார். மனோவசிய சிகிச்சை தீங்கிழைக்கக் கூடியது. ஆகவே அதனை விட்டு விடும்படி எலியாட்சனுக்குக் கோரிக்கை அனுப்பப்பட்டது. அதற்கு எலியாட்சன் 'நான் மறைந்து கிடக்கும் உண்மையை அறிவதற்கே செய்கிறேன்' எனக் கூறி விட்டார். இதனுல் 'யுனிவர்சிட்டி காலேஜ் சர்ஜன்' கழகத்திலிருந்து இவர் விலக்கப்பட்டார். இதனுல் கழக அங்கத்தினர்களுக்குள் பரபரப்பு ஏற்பட்டது. இறுதிவரை அக் கழகத்தில் அவர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

### பாராட்டும் புகழும்

எலியாட்சன் சுயமாகவே ஒரு பத்திரிகை வெளியிட்டார். அவரது திறமையால் அப்பத்திரிகை புகழேணியில் ஏறியது.

எலியாட்சன் மனோவசியத்தால் ஏறக்குறைய 70 பேருக்கு அறுவை சிகிச்சை செய்திருக்கிறுர். இவரது ஆற்றல் கண்டு எழுத்தாளர் தேக்கரே 'பெண்டனிஸ்' என்னும் நூலை அவருக்குச் சமர்ப்பணம் செய்தார். எழுத்தாளி மார்டினியா, அவரைத் திறமையாளர் எனப் புகழ்ந்தாள்.

டாக்டர் எலியாட்சன் 1868-ல் திடீர் மரணம் எய்தினர். அவர் தனது கொள்கையில் வெற்றி யடையாவிட்டாலும் மனோவசியத்தின் (Hypnotism) சிறப்பை உலகிற்கு வேண்டிய மட்டும் விளக்கியிருக்கிறுர். அதனை நன்கு ஆராய்ந்து மெய்மை உணர்த்தியிருக்கிறுர்.

# மனித இனத்தின் ஆரம்ப காலம்

## 1 கோடி 20 லட்சம் ஆண்டுகளுக்கு முந்தியது —ஆராய்ச்சி வலியுறுத்துகிறது

## இத்தாலியில் எலும்புக் கூடு கண்டு பிடிப்பு

மனித உடலின் தன்மைகள் உள்ள விலங்கினம் தோன்றி எவ்வளவு காலம் இருக்கலாம் என்பது ஓர் ஆராய்ச்சி. அத்துறையில் ஜோஹானஸ் ஹர்ஸெலா என்னும் சுவிட்சர்லாந்து நாட்டு விஞ்ஞானி மூன்று ஆண்டுகளுக்கு முன் புதுமையான கருத்து ஒன்றைத் தெரிவித்தார். மனித உடல் இயல்கள் திட்டமாக உள்ள விலங்கினம் குறைந்தது ஒரு கோடியே இருபது லட்சம் ஆண்டுகளுக்கு முன் இத்தாலியில் இருந்ததாக அவர் கூறினர்.

### எலும்புக் கூடுகள் கண்டெடுப்பு

1956-ம் ஆண்டு முதல் இவ்வகை விலங்குகளின் எலும்புகள் மத்திய இத்தாலியில் டஸ்கனியிலுள்ள மென்மையான நிலக்கரிப் பாளங்களில் எடுக்கப்பட்டன. அறுபதுக்கும் அதிகமான எலும்புக் கூடுகள் கிடைத்துள்ளன. 1958 ஆகஸ்ட் 2-ம் தேதி கிட்டத்தட்ட முழு எலும்புக்கூடு என்று சொல்லக் கூடிய எலும்புக்கூடு கிடைத்தது.

இந்தப் பழங்காலத்து எலும்புகளெல்லாம் சுவிட்சர்லாந்தில் பேசல் என்னும் இடத்திலுள்ள [illegible] வைக்கப்பட்டன. அங்கு டாக்டர் ஹாசெலரும் மற்ற விஞ்ஞானிகளும் அவற்றைக் கருத்துடன் ஆராய்ந்தார்கள்.

வில்லியம் எல். ஸ்டிராஸ் (ஜூனியர்) என்னும் அமெரிக்கர் மூன்று ஆண்டுகள் ஐரோப்பாவில் தங்கி, முழு எலும்புக் கூட்டை ஆராய்ச்சி செய்து, அண்மையில் அமெரிக்கா திரும்பி வந்துள்ளார். மனித இன வரலாற்று நூலில் புலமை மிக்கவர் அவர்.

### புதிய கருத்து

புதிதாகக் கண்டு பிடிக்கப் பட்ட எலும்புக் கூடாகவும் இருக்க முடியாது. மனிதக் குரங்கின் எலும்புக் கூடாகவும் இருக்க முடியாது என்பது அவரது கருத்து. அந்த எலும்புக் கூட்டின் பல், மண்டையோடு, உறுப்புக்கள் முதலியவை அது மனித இனத்தின் மூல வகையைச் சேர்ந்ததாக இருத்தல் வேண்டும் என்று காட்டுகின்றன என அவர் கூறுகிறுர்.

மனித இயல்புகள் உள்ளதாக விளங்கிய மிகப் பழங்காலத்து விலங்கு இன்றைக்கு $7\frac{1}{2}$ லட்சம் ஆண்டுகளுக்கு உட்பட்ட காலத்தில் தான் இருந்திருத்தல் வேண்டுமென்று இதுகாறும் கருதப்பட்டது. அக்கருத்தை மாற்றி விட்டது, சில ஆண்டுகளுக்கு முன் இத்தாலியில் கண்டு பிடிக்கப்பட்ட புதிய எலும்புக் கூடு.

அந்த எலும்புக் கூட்டை ஆராய்ந்த டாக்டர் ஸ்டிராஸ் பல கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். அந்த எலும்புக் கூட்டில் வாழ்ந்த விலங்கு நான்கு அடி உயரம் உள்ளதாக இருந்திருத்தல் வேண்டும்; அதன் எடை 100 ருத்தலுக்குச் சிறிது குறைவாக இருந்திருத்தல் வேண்டும் என்பது அவரது கருத்து.

அந்த விலங்குக்கு "ஓரியோபிதிக்கஸ்" என்று பெயர் வைத்திருக்கிறுர்கள். அது மனித இனம் தோன்றுவதற்குக் காரணமாயுள்ள விலங்கு என்றே ஹர்ஸெலரும் கருதுகிறுர்.

டாக்டர் ஸ்டிராஸ் அவ்வளவு திட்டமாகச் சொல்லாவிட்டாலும், மனித இனத்தின் முன்னேருக்கு இருந்த இயல்கள் பேரன்றவை அந்த விலங்குக்கு இருந்திருக்கின்றன என்று சொல்கிறுர்.

### மனித இனம் தோன்றிய காலம்

இந்த எலும்புக் கூட்டால் தெரியவரும் ஓர் உண்மையை அவர் வலியுறுத்தும் போது ஒரு கோடியே இருபது லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே மனித இயல்கள் உள்ள விலங்குகள் தோன்றியிருக்கக் கூடிய காலம் என்று இதுவரை எண்ணிய காலத்துக்கு இது ஒரு கோடியே பத்து லட்சம் ஆண்டுகளுக்கும் அதிகம்.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, களுக்களில் வலி, அஜீரணம், பலவீனம், பித்த வாய்வு, புளிவேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, கிரந்தி, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எஸ். கே. பூபதிராசா, முந்தல்

கே: இலங்கை அரசியல் வாதிகளில் தங்களைக் கவர்ந்தவர்கள் யார்?

ப: என் மதிப்புக்குரியவர் எஸ். ஜே. வி. என் ரசிப்புக்குரியவர் காலித் தஹா, என் நகைப்புக்குரியவர் மாஜி வவனியா சுன், என் வெறுப்புக்குரியவர் கே. எம். பி, என் புகழுக்குரியவர் டாக்டர் என். எம்; இகழுக்குரியவர் ஜீ. ஜீ. இவர்களைவிட என்னைக் கவர்ந்தவர்கள் இருவர். ஒருவர் டாக்டர் நாகநாதன், மற்றவர் பீட்டர் கெனமன்.

கே: உங்கள் வாழ்க்கையில் ஏதும் மறக்க முடியாத சம்பவம் நடந்திருக்கிறதா குயுக்தியாரே?

ப: ஒன்றல்ல இரண்டு நடைபெற்றிருக்கின்றன. ஒன்றின் பயனாக ஒரு பையனும் மற்றொன்றின் பயனாக ஒரு பெண்ணும் என்னை எப்பொழுதும் தங்கள் நினைவாகவே வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஃ

ச. தவநாதன், திக்கம் அல்வாய்

கே: குயுக்தியாரே, தாங்கள் வாழ விரும்புவது ஏன்?

ப: பிறர் வாழ ஏதாவது செய்யலாமே என்ற ஆசை தான் என்னை வாழ வைக்கிறது. சாவதற்கு முன்பாவது பட்ட கடன்களையெல்லாம் தீர்த்துவிட வேண்டுமே என்ற கவலையும் என்னை வாழ வைக்கிறது.

கே: தாங்கள் சுதந்திரனில் கேள்வி பதில் எழுதுவதற்கு என்ன சம்பளம் வாங்குகிறீர்கள்?

ப: லக்ஷம் ரூபாய் பெறுகிறேன் என்ன திகைக்கிறீர்களா? வாசகர்களிடமிருந்து பெறும் அன்பும் அபிமானமும் லக்ஷமென்ன லக்ஷம்? கோடி பெறுமே!

ஃ

சண்முகலிங்கம், கல்வியங்காடு

கே: இலக்கிய வரலாற்றுக்கும் சரித்திர வர்ணனைக்கும் வித்தியாசம் என்ன?

ப: உதாரணமாக, பல்வர் சாம்ராஜ்யத்தைப் பற்றிப் பேராசிரியர் நீலகண்டசாஸ்திரி எழுதினால் அது சரித்திர வர்ணனையாக முடியும். பேராசிரியர் கல்கி எழுதினால் இலக்கிய வரலாறாக அமையும். இதுதான் வித்தியாசம்.

ஃ

வி. கணபதிப்பிள்ளை, பருத்தித்துறை

கே: வெற்றிலைப் பிரியர்களுக்குத் தாங்கள் கூறக்கூடியது என்ன?

ப: 'ஐயன்மீர், அம்மையீர்! முற்றத்தைப் பழுதாக்காதிருப்பீராக' என்பதேயாம்.

ஃ

மு. சடாட்சரம், கல்முனை

கே: மனிதன் எதற்காகப் பிறக்கிறான்?

ப: மனிதன் இரண்டு காரியத்துக்காகப் பிறக்கிறான். தனக்காக வாழவும் பிறக்கிறான். பிறர்க்காக வாழவும் பிறக்கிறான். தனக்காக வாழ்பவனை அவனைத் தவிர வேறு யாரும் நினைப்பதில்லை. பிறர்க்காக வாழ்பவனை அவன் இறந்த பின்னரும் உலகம் நினைக்கிறது.

கே: மக்கள் திருமணம் செய்துகொள்வது எதற்காக?

ப: பூரணத்துவம் அடைவதற்காக. திருமணம் செய்துகொள்ளாத ஆணோ, பெண்ணோ வாழ்க்கையின் அரைவட்டத்தில்தான் சஞ்சரிக்கிறார்கள். திருமணம் செய்துகொள்ளாதவர் எவரும் மரணமாவதன் முன் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் 'அடடா நான் உரிய காலத்தில் திருமணம் செய்யத் தவறிவிட்டேனே' என்று கவலைப்படாமல் சாவைத் தழுவ முடியாது.

கே: வாழ்க்கை என்பது என்ன?

ப: இருபுறமும் கூர் தீட்டப்பட்ட ஒரு கட்டாரியைக் கையிலெடுத்துத் தன் கழுத்தைச் சீவிக்கொள்ளாதவாறு பிறர் கழுத்தைச் சீவிக்கொண்டு உயிர்வாழும் விசித்திர சாதனையின் பெயர்தான் வாழ்க்கை என்று கூறுகிறது ஒரு சீனப் பழமொழி.

> திருவாளர் குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்.
> த. பெட்டி 1183,
> கொழும்பு-12.

ஃ

எல். எம். முகம்மது, கிண்ணியா

கே: எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமது கதி என்ன ஆகுமோ என்று மூதூர் அலி மிகவும் துன்பப்படுகிறாரமே?

ப: ஆமாம். அலிகளுக்கு இன்பமேது?

ஃ

ந சண்முகம், காங்கேசன்துறை

கே: யாழ்ப்பாணத்தில் பலர் "பொலிடோல்" என்ற விஷம் குடித்துத் தற்கொலை செய்துகொள்வதால் அரசாங்கம் "பொலிடோலை"த் தடை செய்ய வேண்டும் என்று சிலர் ஆலோசனை கூறுகிறார்களே, உங்கள் அபிப்பிராயம் என்ன குயுக்தியாரே?

ப: தற்கொலை செய்து கொள்வதற்கு காரணம் என்ன என்பதைக் கண்டறிந்து அதைத் தடுக்க வேண்டும். பலர் வறுமையினால் தற்கொலை செய்துகொள்கிறார்கள். பலர் கடன் தொல்லையினால், சிலர் மானபங்கத்தினால் தற்கொலை செய்துகொள்ளுகிறார்கள். இவற்றை ஆராய்ந்து மாற்றுத் தேட அரசாங்கம் முற்பட வேண்டும் ரயில் தண்டவாளத்தில் விழுந்து யாராவது தற்கொலை செய்துகொண்டால் ரயிலைத் தடை செய்ய வேண்டும் என்று ஆலோசனை கூறுவது பொருந்துமா? ராஜாவின் குழந்தை பால் விக்கி இறந்ததனால் தன் ராஜ்யத்திலுள்ள எந்தத் தாயும் தன் குழந்தைக்குப் பால் கொடுக்கக் கூடாது என்று கட்டளை போட்டானும் அந்த முட்டாள் ராஜா!

ஃ

ஆர். கே. பசுபதி, ஊர்காவற்றுறை.

கே: 1960 ஜூலை மாதத்தில் வரவிருக்கும் பொதுத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியோ பரிபூரண பெரும்பான்மை பெற்று விட்டால் தமிழரசுக் கட்சி என்ன செய்யும்?

ப: 1960 மார்ச் மாதத்தில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் மேற்கூறிய இரண்டு கட்சிகளிலும் ஏதாவது ஒன்று பரிபூரண பெரும்பான்மை பெற்றிருந்தால் தமிழரசுக் கட்சி என்ன செய்திருக்குமோ அதையே தவறாமல் இப்போதும் செய்யும்.

ஃ

த. இராசரத்தினம், இணுவில்

கே: எதிர்வரும் பொதுத் தேர்தலில் வடகிழக்கு மாகாணங்களில் சமசமாஜிஸ்டுகளும், கொம்யூனிஸ்டுகளும் போட்டிபோடுவார்களா? அல்லது கடந்த பொதுத் தேர்தல் கற்பித்த பாடத்தைக் கருத்திற்கொள்வார்களா?

ப: எதை வேண்டுமானாலும் செய்யட்டும். நமக்குக் கவலையில்லை. புத்திசாலித்தனமாக அவர்கள் தமிழ்ப் பகுதிகளில் போட்டியிலிருந்து விலகிக்கொண்டால் சிங்களப் பகுதிகளிலுள்ள தமிழ் வாக்குகள் அவர்களுக்கு மொத்தமாக கிடைக்கும். இல்லாவிட்டால் அங்கும் அரோகராதான்.

ஃ

த. விநாயகமூர்த்தி, இணுவில்

கே: கடந்த பொதுத் தேர்தலில் தமது பாராளுமன்றக் கதிரையைப் பறிகொடுத்துவிட்ட திருவாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் இப்போது என்ன செய்கிறார்?

ப: அடுத்துவரும் பொதுத் தேர்தலிலும் அந்தக் கதிரை கதிரைவேற்பிள்ளையைப் போய் சேரப்போகிறதே என்பதை அறிந்துகொண்ட அவர் ஒரு மேஜையையாவது பெற்றுவிடுவோமென்று 'வட்டமேஜைவட்டமேஜை' யென்று கூப்பாடு போடுகிறார்.

ஃ

குழல்வேந்தன், களுதாவளை

கே: எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் எத்தனை அபேட்சகர்கள் போட்டியிடுவார்கள்?

ப: நிச்சயமாக 20க்குமேற்பட்ட அபேட்சகர்கள் நியமனப் பத்திரம் தாக்கல் செய்வார்கள் ஆனால் அநேகர் போட்டியிடமாட்டார்கள். ஏனென்றால் அவர்களுக்குப் போட்டியே இராது.

ஃ

வணங்காமுடி, மந்துவில்

கே: சிம்மாசனப் பிரசங்கத்தையொட்டி நடைபெற்ற விவாதத்தில் முக்கால் பங்கு பேச்சுக்கள் சிங்களத்தில் நடைபெற்றிருக்கின்றன. தமிழரசுக் கட்சியினர் ஒருவர்கூடத் தமிழ்மொழியில் பேசவில்லை. இவர்கள் தமிழ்மொழி உரிமைக்காகப் போராடும் இலட்சணம் இதுதானா?

ப: சபாஷ். சரியான கேள்வி. பாராட்டுகிறேன் உங்களை சிங்களவர்களுக்கு விளங்குவதற்காக ஆங்கிலத்தில் பேசினோம் என்று நொண்டிச்சாட்டுக் கூறுவார்கள். அப்படியானால் ஆங்கிலம் தெரியாத சிங்களவர்களுக்கும் விளங்குவதற்காக [illegible] லத்தில் பேச வேண்டியது அவசியம் எனக் கண்டால் முதலில் தமிழில் பேசிவிட்டுப் பின்னர் ஆங்கிலத்திலும் பேசியிருக்கலாம். அல்லது பேசியவர்களில் பாதிப் பேர் ஆங்கிலத்திலும் பாதிப் பேர் தமிழிலும் பேசியிருக்கலாம். பாராளுமன்றத்தில் நாமே தமிழை வளர்க்காவிட்டால் சிங்களவர்களா வளர்க்கப் போகிறார்கள்? மன்னிக்க முடியாத குற்றம். தலைவர்கள் மன்னிப்புக் கேட்க வேண்டிய குற்றம். தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் கோஷ்டித் தலைவர் யார் யார் எந்த மொழியில் பேசுவது என்பதை முன்கூட்டியே ஏற்பாடு செய்து வைக்காதது பெருங் குற்றம்.

ஃ

க சுப்பிரமணியம், களபூமி

கே: பண்டாரநாயகா—செல்லநாயகம் உடன்படிக்கையைக் கிழித்தெறியும்படி ஏககாலத்தில் பிரசாரம் செய்த திரு டட்லியும் திரு ஜீ ஜீ பொன்னம்பலமும் இப்போது வட்ட மேஜை மகாநாட்டைப்பற்றி ஒன்றாக ஒப்பாரி வைப்பதன் மர்மம் என்ன?

ப: 'மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில் காக்கை உகக்கும் பிணம்'

## நிறத்திமிர் ஒழியட்டும்!

அநியாயம், கொடுமை, வெறி, திமிர், அகந்தை,
அக்ரமமென் றெத்தனைதான் அடுக்கிப் பார்த்தும்,
இனுமிதனை நன்குணர்த்தத் தமிழ்ச் சொல் வேறொன்
றிலையேயென் றேங்குதுளம்! நவயு கத்தில்,
சனநாய கப்புவியில், முடிக ளெல்லாம்
தகர்ந்தழிந்து குடியரசு தழைக்கும் நாளில்
இனவெறியால், நிறத்திமிரால், சிலர்பல் லோரை
இழித்துவதைப் பதையுணர்த்த ஏது சொற்கள்?

வார்த்தெடுத்த சிலைகளைப்போல் ஒருநி றத்தில்
வளர்ந்துவரும் மனுக்குலத்தை மதிக்கொ ணாதோ?
கூர்த்தமதி வெள்ளையர்க்கு விழியை மட்டும்
குருடாக்கி மறைத்ததெது? நிறக் கொழுப்போ?
மாத்தந்தை நாட்டவர்க்குச் சிட் டெதற்காம்?
மறுத்ததற்கா, நாய்களைப்போல் வழி மறித்துப்
பாய்த்தவெடி யாற்கொன்று குவிப்ப(து)? அந்தோ,
படுகொலைகள்! நினைப்பதன் முன் பதைக்கும் நெஞ்சம்!

அந்நியராய்த் தமைநாடி வந்தோர் கட்கு,
ஆவியுடல் அத்தனையும் அர்ப்ப ணித்து,
உண்ணுதற்கும் உறங்குதற்கும், சுகபோ கத்தின்
உச்சியிலே திளைப்பதற்கும் உழைத்த மக்கள்,
தந்நாட்டில், தம்வீட்டில், நடப்ப தற்கும்
தகுதியிலை யெனக்கொன்று குவிக்கும் செய்தி
எந்நாட்டில் எங்குண்டு? தென்னாப் ரிக்க
இழிவெள்ளை யாட்சியிலே யன்றி யேது?

ஆயிரமா யிரமாண்டின் முன்பு தோன்றி,
அருங்கிளைவிட் டெழுந்தபரம் பரையை, இந்நாள்
நாய்போல், எச் சில்இலைக்குப் புகுந்தோர், அன்னார்
நடுத்தெருவில் கடித்திரத்தம் குடித்தல் கண்டும்,
வாய்பேசா மூங்கயராய்ப் பார்த்தி ருத்தல்
மாண்புலகே! நினக்கழகோ? இன வெறிக்குத்
தூயமனு தர்மத்தைப் பலியிட் டிட்டால்,
தொல்புவிக்கு நிலையேது? வாழ்வும் ஏது?

கறுப்பரென்ற காரணத்தால், பார தத்தின்
கண்மணிகட் கின்னல்பல கடிந் திழைத்தும்,
மறுத்தெதிர்த்த காந்திமகான் தனையே வாட்டி
வதைத்துவவர்ந் திட்டபின்பும், தின வடங்கா
நிறத்திமிர்,தம் இனக்குழுவே வெறுக்கச் சொந்த
நிலத்தினிற் சுதேசியரை ஒழிப்பதென்றால்,
பொறுப்பதெனல் அறிவுலகே, இனியும் உண்டோ?
பொங்கியெழு! நின்வலியைப் புலப் படுத்து!

ஞாலத்தான் அருளுணர்த்திச் சென்ற மேலோர்
நல்வழியே வாழ்வுக்கு நலமென் றெண்ணும்,
ஈழத்தீர்! தமிழகத்தீர்! பார தத்தீர்!
எழில்ஆசி யாநாட்டீர்! உலகத் தீரே!
சீலத்தால் ஒன்றுபட்டுத் திரண் டெதிர்த்துத்
தீயநிறத் திமிராட்சி யொழிக்க வாரீர்!!
நீளுலகின் எதிர்ப்பிற்குத் தலை வணங்கா
நிற்குமொரு திறன் எந்த வலிமைக் குண்டு?

வாய்பேசாச் செயலாற்று நலமொன் றெண்ணா,
வகுத்துணரும் பகுத்தறிவில் லாத, அற்ப
நாய், பூனை, பறவைகளை மடியில் வைத்து
நனிகொஞ்சும் நாகரிக நாட்டீர்! அன்பால்
தூயபெரு நல்லுணர்வால், அறிவால், பேச்சால்,
தொடர்ந்துதவும் பேருழைப்பால் உய்மைக் காக்கும்
தாய்போன்ற ஓர்மனித இனத்தைத் தீண்டத்
தகாதவரென் றுதைத்திடுதல் தானோ நீதி?

கன்னத்தில் அறைந்தோர்க்கும் மறுகன் னத்தைக்
காட்டுகென்ற ஏசுபிரான் கருணைப் போதம்
மின்னவளர்த் திடுபவரென் றுலகோர் நம்ப
வெளிவேடம் வளர்த்துவரும் வெள்ளைத் தோலீர்!
புண்ணியனின் திருப்பெயருக் கிழுக் கிழைத்த
புலையாட்சி தனையினியும் ஒழித்தி லீரேல்,
கண்ணியமும் நன்மதிப்பும் இழந்து, பார்முன்
கற்பிழந்தா ளெனத்தலைநீர், கவிழ்தல் திண்ணம்!

"ஏழைகளாய்க் கறுப்பர்களாய்ப் பிறந்த தாலே,
எவருக்கும் உலகினி லெவர்க்கும் அடிமை யில்லை!
வாழுரிமை நீணிலத்தெவ் வுயிர்க்கும் உண்டு!
மறுக்குமொரு தனியுரிமை எவர்க்கும் இல்லை!
கோழைகளாய், மோழைகளாய் வாழ்த லிற்றும்
குலமானம் காப்பதற்காய்ச் சாதல் நன்று" என்று
ஆழியெனப் பொங்கியெழுந் தார்,ஆப் ரிக்கர்!
அசம்பாவக் கோட்டையினி அழிதல் திண்ணம்!

வெய்யகொடுஞ் சாதிமத நிறபே தங்கள்,
வீழ்ந்தொழிந்து வரும்இந்நாள், மேலோரென்று
வையத்தோ ரினம்,மற்றோர் இனத்தைத் தாழ்த்தி
வதைத்தபெருங் கொடுமையெல்லாம் மலையே றிற்று!
நைவுற்ற மாந்தரினம் ஒன்று பட்டு,
நன்குவிழித் தெழுந்துரிமைப் போர்கைக் கொண்டார்!
ஐயமிலை, விடுதலைநாள் அண்மிற்(று), அதோ,
அரியசுதந் திரசூர்யன் அலர்தல் காண்பீர்!

"பரமஹம்ஸ தாசன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரது வீடுகளில் சிங்களவர்கள் அத்து மீறிப் பிரவேசம்!

## இருந்தவர்களைத் துரத்தி விட்டுத் தாம் அங்கு குந்திக் கொள்ளும் காலித்தனம்

### கந்தளாய் குடியேற்றப் பகுதியில் நடை பெற்றுவருவதாகப் புகார்

கந்தளாய் குடியேற்றப் பகுதியில் குடியேறியிருக்கும் தமிழ்க் குடியேற்றவாசிகளின் வீடுகளை சிங்களவர்கள் வலோற்காரமாகத் தமதாக்கிக் கொள்ளும் விசித்திரம் தினமும் நடந்து வருவதாக அறியப்படுகிறது.

தமிழ்க் குடியேற்றவாசிகள் தற்காலிகமாக குடியேற்ற வீடுகளை விட்டு தமது பிறந்த இடத்துக்கு செல்லும் சமயம் பார்த்து மேற்படி குடியேற்றத் திட்டத்தில் நீர்ப்பாய்ச்சல் மற்றும வேலைப் பிரிவுகளில் உபரியாக இருந்து வேலைபார்க்கும் சிங்களத் தொழிலாளிகள் தமிழ்க் குடியேற்றவாசிகளின் வீடுகளில் அத்துமீறிப் பிரவேசித்து அவற்றில் நிலைகொண்டு விடுவதாகத் தெரிகிறது இப்படியான அட்டூழியத்துக்கு கந்தளாய் 85ம் கட்டைக் குடியேற்றத்தில் 105 தமிழ்க் குடும்பத்தினா ஆளாகித் தவிப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

கந்தளாய்க்கு அணிமையில் உள்ள எண்பத்தைந்தாம் கட்டைக் குடியேற்றத்தில் சுமார் 105 தமிழ் பேசும் குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. சிங்களக் குடியேற்றவாசிகள் அல்லாத, நீர்ப்பாசனத் திட்டங்களிலும் இதர வேலைத் தலங்களிலும் தொழில் புரியும் சிங்களவர்களின் தொகை அதிகமாகும். எனவே இவர்கள் தமிழ் பேசும் குடியேற்றவாசிகள் முக்கிய அலுவல்கள் நிமித்தம் குடும்பத்துடன் வெளியேறும் சமயம் பார்த்து அந்த வீடுகளைப் பலவந்தமாக ஆக்கிரமித்துக்கொள்கின்றனர்: இதனால் மனமுடைந்து குடியேற்றத்தைவிட்டு அப்புறப்பட்டவர்கள் போக மீதமுள்ள குடியேற்றவாசிகள் தங்களுக்கு நேர்ந்துள்ள கஷ்டங்களை விளக்கி குடியேற்ற அதிகாரிகள், திருமலை அரசாங்க அதிபர் மூதூர் முன்னாள் எம். பி. ஜனாப் முகமதலி போன்ற

(12-ம் பக்கம் பார்க்க)

# ஜூன் 8-ல் வைகாசி அனுடத்தில் வள்ளுவர் விழா

## வழமைபோல் எங்கும் கொண்டாட தமிழ் மறைக் கழகம் வேண்டுகோள்

வள்ளுவன் பெயர் வாழ, அவன் வாய்மொழி எங்கும் என்றும் வழங்க பல்லாண்டுகளாக அரும் பணி ஆற்றி வரும் அகில இலங்கைத் தமிழ் மறைக் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம இவ்வாண்டு வள்ளுவர் திருநாளை யொட்டி வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், தமிழ் கூறும் நல்லுலகம் எதிர் வரும் ஜூன் 8-ந் தேதி அதாவது வைகாசி அனுடத்தில் திருவள்ளுவர் திருநாளை வழமை போல் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று வேண்கோள் விடுத்திருக்கிறர்.

"சென்ற பல ஆண்டுகளாக வைகாசி அனுடத்தை வள்ளுவர் திருநாளாகத் தமிழகூறு நல்லுலகெங்கும் கொண்டாடச் செய்துள்ளோம். இந்தியா, இலங்கை, மலாயா, சிங்கப்பூா, பர்மா, பியூச்சி, மொறிஷஸ், தென் ஆபிரிக்கா முதலிய நாடுகளில் மட்டுமன்றி மாஸ்கோ, லண்டன் முதல்ய இடங்களிலுங் கொண்டாடச் செய்து வருகிறேம். பல பத்திரிகைகளும் வானெலி நிலையங்களும் எமது முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றன. இவ்வாண்டுத் திருவள்ளுவர் திருநாள் ஜூன் 8 புதன்கிழமையாகும். இந்த நாளை ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வோர் வீட்டிலுங் கொண்டாடுமாறு தமிழ் பேசும் மக்களைக் கேட்டுக் கொள்ளுகிறேம்" இவ்வாறு தமிழ் மறைக் கழகத் தலைவர் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில குறிப்பிட்டிருக்கிறர்.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது—

### வள்ளுவர் விழா ஏன்?

உலகம் முழுவதும் ஒன்றுபட்டு சமயம், சாதி, நிறம் பணம் முதலியவற்ருல் உண்டாகும் வேற்றுமைகளை அகற்றி வாழ்ந்தாலன்றி இவ்வுலகில் அமைதியும் இன்பமும் நிலைக்காவென்பதை இப்பொழுது அறிஞர்கள் உணர்கின்றனர். உலக ஒற்றுமைக்கு அடிப்படை இன ஒற்றுமை. உலகெங்கும் வாழும் தமிழினம் ஒன்றுபட்டால் தான் உயர்ந்த வாழ்வு கைக்கூடும். தமிழினத்தின் ஒற்றுமைக்கும் உலக ஒற்றுமைக்கும் வழி வகுப்பது திருக்குறளேயாகும். இன்று திருக்குறளை அறியாத தமிழர்கள் இவ்வுலகில் இல்லை எனலாம். எனினும் எல்லாத் தமிழர்களும் திருக்குறளைப் போற்றி அது காட்டும் வழியில் வாழுகிறார்கள் என்று கூறல் முடியாது. எல்லாத் தமிழரையும் ஒன்றுபடுத்தவும் திருக்குறளின்வழிப் படுத்தவுமே திருவள்ளுவர் திருநாளை எங்கும் கொண்டாடுமாறு எமது தமிழ் மறைக் கழகம் வற்புறுத்தி வருகிறது.

### வேண்டுகோள்


திருவள்ளுவர் திருநாளை உம்முடைய வீட்டில் மட்டுமன்றி உம்மோடு தொடர்புடைய எல்லோர் வீட்டிலுங் கொண்டாடச் செய்க.

(13-ம் பக்கம் பார்க்க)

### தன்னியக்க அண்ட வெளிக் கப்பல்

"தன்னியக்க அண்டவெளிக் கப்பலின் முதலாவது குறிக்கோள் சந்திரனாகவே இருக்க முடியும் என்பது வெளிப்படை" என்று தொழில் நுட்ப விஞ்ஞான அறிஞர் போரிஸ் டானிலின் 'ஆசிரியர் கெஜட்டி'லே எழுதியுள்ளார்.

இந்த அண்டவெளிக் கப்பல் முதலில் சந்திரனின் பரப்பின்மீது சுற்றிவர முடியாமல் போனாலும் கூட, அரிய வானாராய்ச்சித் தகவல்களை அதனால் சேகரித்து அனுப்ப முடியும். 'விண்கோள்களின்' பிரதிபிம்பங்களைப் பதிவு செய்து பூமிக்கு அனுப்பவல்ல தன்னியக்க வானாராய்ச்சி நிலையம் ஒன்றை சந்திரனில் அமைப்பது, தற்பொழுது முற்றிலும் சாத்தியமானதே என்றும் டானிலின் குறிப்பிட்டுள்ளார்.

## நீங்கள் இல்லாவிட்டால்?

கூட்டுறவு இன்சூரன்ஸ் இலாகா,

CWE

103, சதாம் வீதி, கொழும்பு 1.
போன்: 5266, 5267.

ஒரு சாதாரண வருமானமுள்ள மனிதனின் கவலைக்கு முக்கிய காரணம் பணத் தட்டுப்பாடுதான். நீங்கள் இல்லாத காலத்தில் உங்கள் குழந்தைகளின் கல்வியை யார் கவனிப்பார்கள், உங்கள் குடும்பம் எப்படிக் காலந் தள்ளும்—என்னும் கேள்விகள் உங்களுக்கு மனக் கவலையாக இருக்கும். அந்தப் பாதுகாப்பும், மன நிம்மதியும். கூட்டுறவு இன்சூரன்ஸ் பொலிசியை எடுத்தவுடன் உங்களுக்குக் கிடைத்துவிடும்.

மோட்டார், பொது விபத்துகள்.

கூட்டுறவு இன்சூரன்ஸ் உலக சேவை புரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தியோக மொழி இலாகாவில் தமிழ் ஒழிப்பு

## வேலையில் புது உத்வேகம்

### தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து போதனாசிரியர்களுக்கு சீட்டுக் கிழிக்க சதி

### மொழிபெயர்ப்பாளரை மாற்றத் திட்டம்

### எட்டப்பன் கூட்டத்தின் ஒத்துழைப்போடு

### தமிழ் பகுதியை சிதைத்து சாகடித்து புதைக்க சிங்கள வகுப்புவாத மேலதிகாரிகள் முயற்சி

### தமிழரசு தந்தை பிரதமருக்கு ஆட்சேபக் கடிதம்

உத்தியோக மொழி இலாகா தொடர்ந்து நடத்தி வரும் தமிழ் ஒழிப்பு வேலைகளில் இப்போது புதிய உத்வேகம் காணப்படுகிறது. துரிதகதியில் அந்த நாசகார வேலை நடைபெற்று வருகிறது. தமிழ் பகுதியை தலையெடுக்க விடாமல் சிதைத்து, சாகடித்து, புதைக்க சிங்கள இனவெறிகொண்ட மேலதிகாரிகள் மும்முரமாக முயற்சி செய்து வருகிறார்கள்.

இம்முயற்சியின் ஓர் அங்கமாக தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்து போதனாசிரியர்களுக்கு சீட்டுக் கிழிக்கப்பட இருப்பதாகவும் அப்பகுதிக்கு மூடு விழா நடத்தி மகிழ உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் அறிய வருகிறது. முன்னர் அப்பகுதியிலிருந்து மாற்றப்பட்ட உதவி ஆராய்ச்சியாளர் போக, இன்னும் அப்பகுதியில் பிரச்னைக்கு உரியவராக இருந்து மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவரையும் வேறு இலாகாவுக்கு மாற்ற தில்லுமுல்லுகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

உத்தியோக மொழி இலாகாவிலுள்ள சிங்கள வகுப்புவாதத் திமிர்கொண்ட மேலதிகாரிகள் சிலர் அவ்விலாகாவிலுள்ள தமிழ்ப் பிரிவை ஒழித்துக்கட்டச் செய்த சூழ்ச்சிகளையும் அவர்களின் கையாள்களாக இருந்து எட்டப்பன் கூட்டத்து இரண்டொரு தமிழ் உத்தியோகத்தர்கள் செய்துவரும் துரோகச் செயல்களையும் சுதந்திரன் பல முறைகளில் அம்பலப்படுத்தி யிருக்கிறது தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் திரு சுந்தரலிங்கமும் இந்த இலாகாவின் ஊழல்களையும் இங்கு தமிழுக்கும் தமிழருக்கும் மாறாகச் செய்யப்படும் சூழ்ச்சிகளையும் பலமுறை பாராளுமன்றத்திலேயே பகிரங்கப் படுத்தியிருக்கிறார்கள்.

#### மாற்றம்

தமிழ் பகுதியிற் போதிய வேலையில்லை என்று போலிக் காரணம் காட்டி ஆராய்ச்சி உதவியாளர் திரு மு. கணபதிப்பிள்ளைக்கும் மொழிபெயர்ப்பாளர் திருமதி ம. பாலகிருஷ்ணனுக்கும் முன்னர் வேலைநீக்க அறிவித்தல் கொடுக்கப்பட்டதும், தமிழரசுக் கட்சியினரின் தலையீட்டினால் அந்த அறிவித்தல் மீட்கப்பட்டதும், சில மாதங்களின் பின்னர் திரு மு. கணபதிப்பிள்ளை வேறு இலாகாவுக்கு மாற்றப்பட்டதும் தெரிந்ததே. திருமதி பாலகிருஷ்ணனையும் மாற்றுவதற்கு இப்பொழுது இரகசியமாக முயற்சிகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. அனேகமாக அடுத்த மாதத்தில் இவர் மாற்றப்படலாம் என்று நம்பக்கூடியதாக இருக்கிறது.

#### சீட்டுக் கிழிப்பு

சில மாதங்களாக நிலையான அரசாங்கம் இல்லாமையைப் பயன்படுத்தி உத்தியோகமொழி இலாகாவில் உள்ள தமிழ்ச் சுருக்கெழுத்துப் போதனாசிரியரையும் தமிழ்த் தட்டெழுத்துப் போதனாசிரியர்கள் இருவரையும் வேலைநீக்கம் செய்வதற்கும் முயற்சிகள் நடக்கின்றன. இந்த மூன்று பதவிகளையும் ஒழித்துவிட வேண்டும் என்று திறைசேரிக்கு எழுதப்பட்டுள்ளதாக அறிய வருகிறது.

#### தந்தை கடிதம்

இதை ஆட்சேபித்து தமிழரசுத் தந்தை திரு செல்வநாயகம் பிரதமர் திரு டட்லி சேனநாயகாவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில், "அரசாங்கம் தமிழருடன் தமிழிற் கடிதப்போக்குவரத்தை நடத்த வேண்டுமெனில் தமிழ் உத்தியோகத்தர்கள் தமிழ் தட்டெழுத்துச் சுருக்கெழுத்துக்களில் பயிற்சி பெறல் வேண்டும். தமிழ்தட்டெழுத்தில் இதுவரை 500 அரசாங்க உத்தியோகத்தர்கள்தான் பயிற்சி பெற்றிருக்கின்றனர். இன்னும் 2000 பேர்வரையில பயிற்சி பெற வேண்டியிருக்கிறது. அன்றியும் வெளியார் பலரையும் பயிற்றலும் வேண்டும்" என்று வற்புறுத்தியிருக்கிறார்.

#### குறைபாடு

சுதந்திரன் இரண்டொரு மாதங்களுக்குமுன் சுட்டிக்காட்டிய குறையினையும் உடனே கவனிக்குமாறு திரு செல்வநாயகம் பிரதம மந்திரியைக் கேட்டுள்ளார். "இலங்கையிலுள்ள மாணவர்கள் தம் தாய்மொழிமூலமே கல்வி கற்க வேண்டுமென்பதே முன்னைய அரசாங்கத்தினதும் இப்பொழுதுள்ள அரசாங்கத்தினதும் கொள்கையாகும். எனவே சிங்கள மாணவர்களுக்காக மொழிபெயர்க்கப்படும் நூல்கள் யாவும் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டியதே முறைமையும் நீதியுமாகும். இதனைக்கூட உத்தியோக மொழி இலாகா செவ்வையாகச் செய்யவில்லை" என்றும்—

"சிங்களத்திலே வைத்தியச் சொற்கோவையும் சட்டச் சொற்கோவைகளும் வெளியிடப்பட்டுள, தமிழிலே இன்னும் ஒன்றும் வெளியிடப்படவில்லை. இத்துறையில் தமிழில் எவ்வித வேலையும் நடைபெறவில்லை. மூன்று மருத்துவ நூல்களின் சிங்கள மொழி பெயர்ப்புக்கள் வெளிவந்து விட்டன. இன்னும் பல நூல்கள் மொழி பெயர்க்கப்படுகின்றன. தமிழில் ஒரு நூலைத்தானும் மொழிபெயர்க்கவில்லை" என்றும் திரு செல்வநாயகம் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

#### தாதிமார் பாட நூல்கள் இல்லை

அணிமையில் யாழ்ப்பாணத்திலே தொடக்கப்பட்ட தமிழ்த் தாதிமார் பயிற்சிப் பாடசாலை மாணவிகள் படிப்பதற்குத் தமிழ் நூல்களின்றி [illegible] இவர்களுக்கு வேண்டிய நூல்களை மொழி பெயர்த்து வெளியிட்டிருக்க வேண்டியது உத்தியோக மொழி இலாகாவின் கடமையாகும். சிங்களத் தாதிமார் படிப்பதற்கு வேண்டிய நூல்கள் சிங்களத்திலே மொழி பெயர்க்கப்பட்டுள. இதைப் பற்றி அமரரான தமிழ்ச் சிங்கம் திரு வன்னியசிங்கம் பாராளுமன்றத்திலே பிரதம மந்திரியாரிடங் கேட்ட பொழுது பிரதமமந்திரி, "உடனே ஆவன செய்யப்படும்" என்று கூறினார். ஆனால் இதுவரையும் ஒன்றும் நடைபெறவில்லை. சிங்களப் பகுதியில் ஒரு டாக்டரும் ஐந்தாறு உத்தியோகத்தர்களும் இப்பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்பிரிவு ஒரு தனிப் பிரிவாக இயங்குகிறது. தமிழ்ப் பகுதியில் இவ்வேலையைச் செய்ய ஒருவருமே இல்லை,

#### உத்தியோகத்தர் பற்றுக் குறை

மற்றும் பாடங்களிலும் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள பல நூல்கள் இன்னும் தமிழில் மொழி பெயர்க்கப்படவில்லை. இதற்கு ஒரு காரணம் தமிழ்ப் பகுதியில் போதிய உத்தியோகத்தர்கள் இல்லாமையேயாகும். இதனைக் காலஞ்சென்ற கோப்பாய்க் கோமகன் திரு வன்னியசிங்கம் பாராளுமன்றத்திற்றும் சபையிற்றும் நிகழ்த்திய உரையிலே எடுத்துக் காட்டிப் பிரதமர் திரு பண்டாரநாயகாவையே மறுமொழி கூறமுடியாது திணறச் செய்தார்.

#### தமிழ் அதிகாரி வேண்டும்

இப்பகுதிக்குப் போதிய உத்தியோகத்தரில்லாதிருக்கும் பொழுது இப்பிரிவில் போதிய தமிழ் உத்தியோகத்தர்களை நியமிக்காதது ஏன்? அரசகரும மொழிப் பகுதியிலிருந்து பாடநூல் வெளியீட்டுப் பிரிவாகிய இதற்கு மாற்றப்பட்ட திரு மு கணபதிப்பிள்ளையை உத்தியோக மொழி இலாகாவிலிருந்து வேறு இலாகாவுக்கு

(13-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் குரல்

### போட்டியின்றி தெரிவு செய்க

சென்ற மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் மக்களின் நல்லாதரவு பெற்று வெற்றி வாகை சூடியது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மொழி பேசும் இனங்களின் மொழி உரிமையும் நாடற்றவர்களின் பிரஜாஉரிமையும், கிடைக்க வேண்டுமாயின் அது நமது ஒப்பற்ற தலைவரும், இலங்கையின் காந்திஜியுமான திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களின் தலைமையில் இயங்கும் தமிழரசுக் கட்சியில்தான் தங்கிக்கிடக்கின்றது என்பதை தெளிவுபடுத்திவிட்டார்கள்,

ஆணிப் பொன் சிம்மாசனப் பிரசங்கம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் மற்றும் கட்சிகளுக்குப் போதிய சந்தர்ப்பம் கொடுக்கப்படாமலே பாராளுமன்றம் கலைக்கப்பட்டது வருந்தத்தக்கதாகும். யூ. என். பி. ஆட்சியாளர் நினைப்பதுபோல் தமிழரசுக் கட்சி புதிய தேர்தலில் பயந்தும், பதுங்கியும் ஒளிந்து கொள்ளாது.

தமிழரசுக் கட்சிக்கு எதிராக யாராவது, போட்டியிட முன்வந்தால், ஊரார்கள் கூடி அவர்களைத் தடுக்கப்போவதாக 1-5-60ல் வெளியான சுதந்திரனில் செய்தி படித்து இன்பமடைந்தேன். இப்படி மக்கள் செய்வார்களாயின், போட்டியிட வருபவர்களின் நாடி நின்றுவிடும். நல்லது செய்தவர்களாவார்கள் அவர்கள்.

பண்டையத் தமிழர்கள் அரசோச்சி வந்த காலத்தில் அவ்வரசர்கள் ஏதும் பிழை செய்தால், மக்கள் ஒன்றுகூடி எதிர்ப்பது தமிழர்களின் பண்பு. இந் நடைமுறை இலங்கையிலுள்ள தமிழர்களிடையும் காணப்படுவது மிகவும் மெச்சத்தக்கது.

அ[illegible]
வி. எம். [illegible]
கொழும்பு


## வாழ்வு ஒரு மாயம்!

எதிர்பாராதது நடந்து விடுகிறது. எனவே எதற்கும் எப்பொழுதும் பாதுகாப்பு அவசியம். கஷ்டகாலத்தில் கடன் வசதி - மரணகாலச் செலவுக்கு நிதி உதவி ஆகியவற்றோடு பரிபூரண ஆயுள் பாதுகாப்பை அளிப்பது த நொர்தேன் லைப் அன்ட் ஜெனறல் இன்ஸ்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட். தமிழ் மக்களால் தமிழ் மக்களுக்காக தமிழ்ப் பகுதிகளை வளம்படுத்தித் தமிழர் தம் பொருளாதாரத்தை வளர்க்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு திறமையாக பலகாலம் நடைபெற்று வரும் ஒரேயொரு ஸ்தாபனம் இதுவே.

ஆயுள் பொலிசிகள் தமிழ் மொழியில் வழங்கப்படுகின்றன. இன்றே விவரங்களுக்கு எழுதுங்கள்.

எங்கும் ஏஜண்டுகளும், பிரதிநிதிகளும் தேவை.

**The Northern Life & General Insurance Co., Ltd.**
18 1/6, State Bank Building,
COLOMBO — 1.






தமிழ் உலகில் ஆசிரியர்களிடையேயும் மாணவர்களிடையேயும் பெரும் கிளர்ச்சியை உண்டு பண்ணியுள்ள எமது நவீன கட்டுரைப் புத்தகத்தை இதுவரை நீங்கள் பெறவில்லையா?

- ★ ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை
- ★ பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை
- ★ குமஸ்தா பரீட்சைகள்
- ★ எச். எஸ். சி. பரீட்சை
- ★ மற்றும் அரசாங்க உயர்தரப் பரீட்சைகளுக்கு வரக்கூடிய அத்தனை வியாசங்களையும் தன்னகத்தே கொண்டது.

விலை ரூ. 5-00 மட்டுமே
தபாற் செலவு 55 சதம்

வி. பி. பி. ஓடர்கள், ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**அற்லஸ் ஹோல்**
723, மருதானைறோட்,
கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# துவேஷப் பிராது

## Malicious Prosecution

துவேஷம் (Malice) என்பது யாது? ஒருவர் ஒரு செயலை எதிர்பாராத முறையில் (Accidentally) செய்யலாம்; அல்லது அதை அசண்டையாக (Negligently) செய்யலாம்; அல்லது அதை துவேஷத்துடன் (Maliciously) செய்யலாம். வேண்டுமென்று ஒரு செயலின் விளைவை (Consequence) யறிந்து அதைத் தன் எரிச்சல் காரணம்பற்றிச் செய்வதே துவேஷமெனப்படும்.

### பிராது என்றுல் என்ன?

பிராது என்பது ஒருவர் மீது இன்னொருவர் தண்டனைக் குற்றத்தை (Crime) சாட்டி அவர்மீது வழக்குத் தொடர்வதற்கு ஏதுவாயிருத்தல். இன்னொருவர் மீது ஒருவர் நஷ்டஈடு குற்றங்கள் அல்லது உரிமை பற்றிய வழக்குகள் (Civil Actions) வைத்தல் பிராது என்னும் கருத்தில் வராது இத்துவேஷபபிராது என்னும் குற்றம் தண்டனைக் குற்றத்துக்கும் ஆளாக்கும்; நஷ்டஈட்டுக் குற்றத்துக்கும் ஆளாக்கும். இங்கு நஷ்டஈட்டுக் குற்றத்தின் அம்சங்களையே விரிவாக ஆராய்வோம்.

இத்துவேஷப் பிராது நஷ்டஈட்டுக் குற்றத்துக்கு ஐந்து அம்சங்கள் உண்டு. அவையாவன;

### ஐந்து அம்சங்கள்

(அ) பிரதிவாதியே தண்டனைக் குற்றச்சாட்டுக்கு ஏதுவாயிருந்தாரெனல்

(ஆ) அவர் அக்குற்றச் சாட்டை துவேஷத்துடன் சாட்டினுரெனல்

(இ) அக்குற்றச்சாட்டை பிரதிவாதி ஒருவித நியாயமான காரணமுமின்றிச்சாட்டினுரெனல்

(ஈ) அக்குற்றச்சாட்டினின்றும் வழக்காளி நிரபராதியெனத் தீர்க்கப்பட்டாரென நிரூபித்தல்

(உ) அக்குற்றச்சாட்டினுல் வழக்காளிக்கு அவமானம் ஏற்பட்டதெனல்.

இவ்வைந்து அம்சங்களில் ஒரு அம்சத்தைத் தானும் வழக்காளி நிரூபிக்கத் தவறினுல் பிரதிவாதி துவேஷப் பிராது நஷ்டஈட்டுக் குற்றத்துக்கு ஆளாகமாட்டான். இனி ஒவ்வொரு அம்சத்தையும் விரிவாக ஆராய்வோம்

### நிரூபிக்க வேண்டும்

(அ) இவ்வழக்கில் பிரதிவாதியே வழக்காளி மேல் தண்டனைக் குற்றச்சாட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தாரென்றுகுதல் அல்லது தாக்கல் செய்வதற்கு ஏதுவாயிருந்தாரென்றுகுதல் நிரூபிக்க வேண்டும். ஒரு வழக்கில் கிராம விதானை மணியகாரனுக்கும் நாடு பாதுகாவல் பரிசோதகருக்கும் (Police Inspector) வழக்காளி செய்த குற்றத்தைப் பற்றிய விபரம் கொடுத்தார். அதன்பிரகாரம் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இங்கு கிராம விதானை வழக்குத் தொடர்வதற்கு ஏதுவானவர் அல்லர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

### வழக்கில் தீர்ப்பு

இவ்வம்சத்தின் கொள்கையையொட்டி எத்தனையோ தீர்ப்புகள் வழங்கப்பட்டன. அவைகளின் சாராம்சம் யாதெனில் பிரதிவாதி தானுகவே குற்ற வழக்கை (Criminal Case) வைத்திருக்க வேண்டும்; அல்லது வைப்பதற்கு நேரான காரணகர்த்தாவாயிருக்க வேண்டும். அதாவது வழக்கு வைப்பதற்கு நேராகத் தூண்டியிருக்க வேண்டும் அல்லது விண்ணப்பித்திருக்க வேண்டும். ஒருவர் சொல்லும் சாட்சியத்தின் ஆதரவு கொண்டு வேறு பிற விசாரணையின் பலனுக வழக்கு வைக்கக் கடமைப்பட்டுள்ள அதிகாரிகள் வழக்கை வைத்தால் அதற்கு முதல்முதல் சாட்சியம் சொன்னவர் அல்லது புலன் கொடுத்தவர் பாத்திரவாளியாகமாட்டார்.

ஒரு சந்தர்ப்பத்தில் பிரதிவாதியாகியவர் புலன் விசாரணைப்பொழுது சாட்சி சொன்னதுமன்றிக் கிராம விதானையையும் வேறு சில சாட்சிகளையும் சாட்சியம் சொல்லத் தூண்டினதுமன்றிக் கிராமவிதானையை நகர காவல் நிலையத்துக்கு (Police Station) கூட்டிச்சென்றமையும் நிரூபிக்கப்பட்டது. ஆகையால் அவர்

### துவேஷத் தன்மை

வழக்கு வைப்பதற்கு ஏதுவாயிருந்தாரெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

(ஆ) இரண்டாம் அம்சமாகிய துவேஷத்தன்மையை ஆராய்வோம். சாதாரண பாஷையில் துவேஷம் என்றுல் எரிச்சல், பகை, வெறுப்பு எனப்படும். ஆனுல் சட்ட பாஷையிலே எவ்வித தகாத அல்லது நியாயமற்ற நோக்கமும் துவேஷமெனப்படும். இவ்விஷயத்தில் எங்கள் சட்டமும் ஆங்கிலச் சட்டத்தைத் தழுவியே துவேஷத்துக்குக் கருத்துக்கொடுத்திருக்கிறது. இன்னொருவர் தண்டனைக்குற்றம் செய்தாரென ஒருவர் அபிப்பிராயப்பட்டால் முன்னையவரைத் தண்டிப்பதற்காக மேலதிகாரிகளுக்கு விண்ணப்பிக்கவோ அல்லது அவர்களுக்குத் தகவல் கொடுக்கவோ ஒருவருக்கு முழு உரித்துண்டு. ஆகையால் அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர் அதை நந்நம்பிக்கையுடன் தான் (Bonafides) செய்தார் என்றே நீதிமன்றம் கொள்ளும். ஆகையால் இவ்வகை வழக்குகளில் வழக்காளி தன்னை குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கியவர் விஷமத்துக்கு தீய நோக்கத்துடன் செய்தார் என்று நிரூபிக்க வேண்டும்.

### நியாயமான காரணமின்மை

குற்றச்சாட்டு வழக்கில் தான் நிரபராதியெனத் தீர்க்கப்பட்டதென்னும் ஒரு நியாயம்பற்றி துவேஷமிருந்தது என்றும் சொல்ல முடியாது. இல்லையேல் நீதி செலுத்துவதற்கு ஒருவரும் முன்வரமாட்டார்கள். நியாயமான காரணமின்மையென்பதும் துவேஷமாகாது. அதுவும் இவ்வகை நஷ்டஈட்டு வழக்குக்கு வேண்டிய அம்சம்தான். ஆனுல் அதையும் துவேஷத்தையும் கலக்கக் கூடாது. நியாயமான காரணமின்மை துவேஷத்துக்குச் சான்றுயிருக்கலாம். ஆனுல் இரண்டும் வித்தியாசமான அம்சங்கள் என்பதைக் கூர்மையாகக் கவனிக்க வேண்டும்.

### தகவல் மறைத்தல்

ஒருவர் தமக்குத் தெரிந்த ஒரு பிரதான விஷயத்தை மறைத்துத் தகவல் கொடுத்தால் அதைத் துவேஷத்தன்மையெனலாம். ஒருவர் தம் மனதிலேயே குற்றஞ் சாட்டப்பட்டவர் குற்றவாளியல்லர் என்னும் அபிப்பிராயம் தோன்றியும் அதற்கு மாருகக் குற்றம் சாட்ட முற்பட்டால் அது துவேஷத்தன்மையெனக் கருதப்படும். அல்லது ஒரு நியாயமுள்ள சதாரண நபர் குற்றமில்லையென அறியக்கூடிய இடத்திலும் குற்றச் சாட்டை கொணர்தல் துவேஷத்தால் தானென நீதி மன்றம் கருத இடமுண்டு ஒருவர் தன்னயமே பிரதானமெனக் கருதி மற்றவருடைய உரிமைகளையும மற்றவரின் தனி மனித சுதந்திரத்தையும் (Personal Liberty) அசண்டை பண்ணி அவர் மேல் குற்றம் சாட்டுதலுக்கு ஏதுவாயிருத்தலும் துவேஷத்தன்மையே.

திரு. எஸ். சபாபதிப்பிள்ளை
M. A., LL. B. (Lond) F. R. A. S., Bar-at-Law
இலங்கை சட்டக்கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்
வருமானவரி பரிசீலனைக்குழு சட்ட ஆலோசகர்

### காரணம் வேண்டும்

(இ) வழக்கு வைப்பதற்கு நியாயமான அல்லது சம்பாவிதமான (Probable) காரணமும் இருந்திருக்க வேண்டும். துவேஷத்தை அத்தாட்சிப்படுத்திய போதிலும் இவ்வம்சத்தையும் நிரூபிக்கும் பொறுப்பு நஷ்டஈடு வழக்கு வைக்கும் வழக்காளிக்கே (அதாவது முதல் குற்றம் சாட்டப்பட்டவருக்கே). ஆனுல் இப்பொறுப்பு அதிகம் கடினமானதல்ல; ஏனெனில் சூழ்நிலையால் அல்லது சாட்சியம் மூலம் குற்றம் சாட்டியவர் தன் மனதிலேயே குற்றத்துக்கு ஒரு ஆதாரமுமில்லையெனவும் தன் பிராதுவில் (Prosecution) ஒரு நீதியுமில்லையென உணர்ந்திருப்பாரென நிரூபித்தால் போதுமானது. உதாரணமாக ஒருவர் நன்நம்பிக்கையுடன் குற்றத்தைச் சாட்டிய போதிலும் அவர் தீர யோசித்து உண்மையை அலசி ஆராய்ந்திருந்தால் அக்குற்றம் சாட்டியிருக்க மாட்டாரெனும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் அவர் அதைச் சம்பாவிதமான காரணமின்றிச் செய்தாரென்பதே கொள்கை.

### சம்பாவிதமான காரணங்கள்

நியாயமானதும் சம்பாவிதமான காரணமுண்டென்பதும் சூழ்நிலையைப் பொறுத்துள்ள ஒரு சுத்தத்துவப் பிரச்னை (Question of fact) கீழ்வரும் சந்தர்ப்பங்களில் குற்றம் சாட்டியவர் நியாயமான சம்பாவிதமான காரணம் கொண்டு (Probable Cause) செய்தாரெனக்கருதப்படும். (1) விஷயத்தின் உண்மைகளை யறிவதற்கேற்ற நியாயமான பிரயாசமெடுத்தல் (2) பிழையாயிருந்த போதிலும் நேர்மையுடனும் நந்நம்பிக்கையுடனும் (Bona Fide) குற்றச் சாட்டில் நம்பிகையை வைத்திருந்தாரெனல் (3) விஷயம் உண்மையாயிருந்தால் குற்றச் சாட்டுக்கு ஆதாரமிருத்தல்.

### நிரபராதியெனத் தீர்ப்பு

(ஈ) நாலாம் அம்சம்: வழக்காளிமேல் வைத்த குற்ற வழக்கு அவர் சார்பில் தீர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பதாகும். தான் நிரபராதி யெனத் தீர்க்கப்பட்டதென வழக்காளி நிரூபிக்கத் தேவையில்லை. குற்றச்சாட்டை வாபஸ் பண்ணினுலும் சரி அல்லது குற்றச் சாட்டு தள்ளுபடியானதென (Discharge) நிரூபித்தாலும் சரி போதுமானது. ஆனுல் முடி (Crown) யால வழக்கு வாபஸ் பண்ணப்பட்டால் அது நியாயம் பற்றி தம் சார்பில் தீர்ப்புக் கொடுக்கப்பட்டதென்பதும் சான்றல்ல. ஆனுல் தீர்ப்பு அவர் சார்பிலிருந்த போதிலும் தான் மனச் சாட்சியுடனும் நந்நம்பிக்கையுடனும் வழக்குத் தொடர்ந்ததாக நிரூபித்து மேற்கூறிய மூன்றும் அம்சத்தை பிரதிவாதி தகர்க்கலாம்.

### அவமானம் ஏற்படுதல்

(உ) குற்றஞ்சாட்டப்பட்டவர் தமக்கு அக் குற்றச் சாட்டினுல் அவமானம் நேர்ந்ததெனவும் அதனுலே தாம் மனவேதனை, சங்கை நஷ்டத்துக்காளானுரெனவும் நிரூபித்தால்தான் இந்த நஷ்டஈட்டுக் குற்றத்தை ஸ்தா

(13-ம் பக்கம் பார்க்க)


## அன்பர்களே

நீங்கள் எவ்வளவு நல்ல உணவுகள் சாப்பிட்டாலும் உடல் மெலிந்துகொண்டே போகிறதா? பசியின்மை பல் ஈறு கரைதல், கை கால் நோவு, சோம்பல், சிறுநீருடன் சக்தி போகுதல் என்பன போன்ற வியாதிகளால் கஷ்டப்படுகிறீர்களா? அப்படியானுல் மூன்று விதமான சிகிச்சைகள் தேவை;

உள் சுத்தி, புறச் சுத்தி, இரண சிகிச்சைகள் இச் சிகிச்சைகளுக்கு ஒரே வார்த்தையில் பதில்

**ஸ்பேமடோன் கொம்பவுண்ட்**

**( Spermatone Compound )**

**ஒரு பிரபல ஜெர்மன் டாக்டரின்** மருந்து சீட்டிலிருந்து தயார் செய்த ஒரு அற்புத சக்திவாய்ந்த மருந்தாகும்.

8 அவுன்ஸ் பாட்டில் மருந்தின் விலை ரூ. 3/25
வி. பி. பி. தனி.
விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,
டாக்டர்

**'மோடர்ன் கிலினிக்'**

(MODERN CLINIC)
255, காலி ரோட், கொழும்பு-4.
பம்பலப்பிட்டிய கன்வண்ட் எதிரில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய இனம் என்ருல் என்ன? மொழி, நிலம் பண்பாடு, சரித்திரம் தனியாக உள்ளதுதான் அந்தத் தகுதிக்கு உரியது

## தமிழ் பேசும் இனத்துக்கு எல்லாம் உண்டு

### பாராளுமன்றத்தில் டாக்டர் நாகநாதன்

(1-5-60 தொடர்ச்சி)

எந்த மக்கள்மீதும் எமக்குக் கோபம் கிடையாது. எமது இலட்சியம் ஒன்றேயொன்றுதான். தமிழ் பேசும் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை அளிக்கும் இணைப்பாட்சி அரசமைப்பு இலங்கையில் ஏற்பட வேண்டும். நகைப்பவர்கள் நகைக்கட்டும். ஆனுல் இலங்கை மக்கள் என்பது ஒரேயொரு தேசிய இனம் என்பதை நாம் முற்றிலும் மறுக்கிருேம். தமிழ் பேசும் இனம், சிங்கள இனம் என, இலங்கையில் இரண்டு தேசிய இனங்களிருக்கின்றன என்று நாம் உரிமை கோரிப் பிரசாரம் செய்கிருேம்.

ஒரு தேசிய இனம் என்ருல் என்ன? எதிர்ப்பக்கத்து முன் வாங்குகளிலிருக்கும் கனவான்களுக்கு "தேசிய இனம்" என்ருல் என்ன என்று ஒரு பிரசங்கம் செய்யப் போகிறேன்.

சபாநாயகர்:—பிரசங்கத்தை எனக்குச் செய்யுங்கள்!

டாக்டர் நாகநாதன்:—தேசிய இனம் என்ருல் 4 முக்கிய வரைவிலக்கணங்களைக் கொண்டிருக்க வேண்டும். முதலாவதாக ஒரு தேசிய இனத்திற்கு திறமாக வளம் பெற்ற ஒரு மொழி வேண்டும். பிரெஞ்சு மொழியில்லாவிட்டால், பிரெஞ்சு இனம் இல்லை. ஜேர்மன் மொழி இல்லாவிட்டால் ஜேர்மன் இனம் இல்லை. பிரெஞ்சு அல்லது ஜேர்மன் இனத்தை அழிக்க வேண்டுமானுல் பிரெஞ்சு அல்லது ஜேர்மன் மொழியைப் பறித்தால் போதும்.

தேசிய இனத்துக்கு அடுத்துத் தேவையானது குடிநிலம். சொந்த நாடு இல்லாவிட்டால் ஒரு தேசிய இனம் வாழமுடியாது.

கௌரவ ஜே. ஆர். ஜயவர்தன:- இந்தியாவைப் பற்றி என்ன கூறுகிறீர்? இந்தியா ஒரு தேசிய இனமா?

டாக்டர் நாகநாதன்:— ஒரு தேசிய இனம் ஜேர்மனியைப் போலத் தனித் தேசிய இனமாயிருக்கலாம். அல்லது பல சமுதாயங்களைக் கொண்ட ஒரு தேசிய இனமாயிருக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களைக் கொண்டதாயிருந்தால், அந்தச் சமுதாயத்தில் சமஷ்டி ஆட்சி செயல்பட வேண்டும். இந்தியாவில் அத்தகைய அரசியல் அமைப்பை காணலாம்.

நான் முன்னர் கூறியது போல ஒரு தேசிய இனத்திற்குத் தனிப்பட்ட ஒரு பிரதேசம் வேண்டும். பிரான்ஸ் என்ற நாடு இல்லாவிட்டால், பிரெஞ்சு இனம் இல்லை. ஒரு பூமி நடுக்கத்தாலோ, ஜலவாயுக் குண்டினுலோ ஜேர்மனி அழிக்கப்படுமானுல் ஜேர்மன் தேசிய இனம் என்று ஒன்று எப்படி இருக்க முடியும்? அல்லது ஜேர்மனிக்குள் ருஷ்யர் பெருவாரியாக வந்து குடியேறி, ஜேர்மன் மக்களைச் சிறுபான்மையினராக்கி விட்டால், ஜேர்மனியர் என்ற தேசிய இனம் இருக்க முடியாது. ஒன்றில் நாட்டை அபகரிப்பதினுல் ஒரு தேசிய இனத்தை அழிக்கலாம். அல்லது அந்நாட்டிலே அத்தேசிய இனத்தை நிர்மூலமாக்கலாம். எனவே ஒரு தேசிய இனத்துக்கு இரண்டாவதாக அவசியமானது நாடு.

மூன்ருவதாகத் தேவைப்படுவது சரித்திரம். ஒரு குறிப்பிட்ட நாட்டில் வாழ்ந்த பழமை இருக்க வேண்டும். ஒரு தேசிய இனத்தின் மூதாதையோர் அந்நாட்டில் வாழ்ந்து ஒரு சரித்திரத்தை உண்டாக்கியிருத்தல் வேண்டும். தேசிய இனத்தைச் சேர்ந்த மக்கள் "பரம்பரையான எமது தாயகம் இது" என்று பெருமை கூறக் கூடியதாயிருக்க வேண்டும்.

இலங்கையிலிருக்கும் தமிழ் பேசும் மக்களாகிய எமக்குப் பண்பாடு நிறைந்த பெருமை மிக்க ஒரு மொழி உண்டு. இந்நாட்டின் சரித்திரம் ஆரம்பமாகும் காலந் தொடங்கிப் பழமை கொண்ட ஒரு சரித்திரம் உண்டு இன்னும் 'தமிழ் நாடு' என்றழைக்கப்படும் பிரதேசமும் ஒன்றுண்டு. எனவே இலங்கைத் தமிழ் பேசும் மக்களாகிய நாம் ஒரு தனித் தேசிய இனமாவோம்.

இந்நாட்டில் நடந்து கொண்டிருக்கும் இன ஒழிப்பைப்பற்றி இப்பொழுது கூறுகிறேன். நான் கூறுவனவற்றை மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன்தான் கூறுகிறேன். 1948 தொடக்கம் அதாவது ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரத்துக்கு வந்த நாட் தொடக்கம் திட்டமிட்டு நடந்து வரும் சதி பற்றி உங்களைப்போன்ற நல்லவர்கள் (சிங்களவர்களுள்) உணர முடியாது. ஏனெனில் அச்சதியின் சுமையை நீங்கள் அனுபவிக்கவில்லை. இன்றைய பிரதமரின் தந்தை பிரதமராயிருந்த காலந் தொட்டு தமிழ் பேசும் மக்களின் இனவொழிப்புச் சதி இரகசியமாக நடந்து வந்திருக்கிறது.

"சிங்களம் மட்டுமே" என்பது ஒரு தேசிய இனத்தையே நிர்மூலமாக்கும் திட்டம். இச்சதியை நாம் எதிர்த்தபடியால் நாட்டில் இரத்தக் களறி ஏற்பட்டது. உலகமும் இவ்வநீதியை அறிந்துகொண்டது. வெளியில் தலைகாட்ட முடியாது, வெட்கத்தில் உலகத்தின் கண்களில் மண்ணைத் தூவும் முகமாக "நியாயமான தமிழ் உபயோகம்" மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளைச் சிறையில் பூட்டி வைத்தபின்னர்தான் இம்மசோதா வெளிவந்தது.

இம்மசோதா கூறுவது என்ன? இது ஒரு ஒத்தாசை புரியும் மசோதா. தமிழ் பேசும் மக்கள் தமது தாய் மொழியை உபயோகிப்பதற்கு உதவி, [illegible] கிறது இம்மசோதா. ஒரு மந்திரி சில சட்டங்களை வகுத்து தமிழ் பேசும் மக்கள் தம் தாய்மொழியில் பேச உதவி செய்கிற சட்டமிது! இதன் கருத்தே இன்னதென்று எனக்கு விளங்கவில்லை.

சபாநாயகர் அவர்களே! 'சிங்களத்தின் நியாயமான அளவு உபயோகம்" என்ருல் என்ன கருத்தாக இருக்கும்? இது எப்படியானுலும் இந்த மசோதா நடைமுறையில் வரும்பொருட்டு இதன்கீழ் ஒரு சட்டமாவது இயற்றப்பட்டது கிடையாது. இதனுல் இம்மசோதா அழிந்தொழிந்தே விட்டது. "சிங்களம் மட்டும்" மசோதா படிப்படியாக நடைமுறையில் வர, நாளுக்குநாள் சட்டமியற்றப்படும் பொழுது, உலகத்தின் கண்களில் மண் தூவ இயற்றப்பட்ட தமிழ் உபயோக மசோதா தூக்கிலிடப்படுகிறது. அத்துடன் இந்தத் தூக்குத்தண்டனையை துணிகரமாக நிறைவேற்ற உங்கள் ஆட்சி மொழி அலுவலகத்தில் பல வழியாலும் ஏற்ற ஒரு கொலைஞனையும் இருத்தி வைத்திருக்கிறீர்கள்.

## 'நியாயமான தமிழ் உபயோக மசோதா' ஒரு கேலிக் கூத்து

### அது கூடத் தூக்கிலிடப்படுகிறது

தமிழ் பேசும் மக்களை ஒழித்துக்கட்டும் இன ஒழிப்பு நடவடிக்கையில் இன்னெருதுறை தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசத்தையொட்டியது. மக்கள் வாழ்வதற்கு அடிப்படையில் தேவையானது குடியிருப்பு நிலம். வனவிலங்குகளுக்கு மாத்திரமல்ல பறவைகள் முதலியவற்றிற்குமே "பாதுகாப்புப் பிரதேசங்கள்" (Game Sanctuaries) வனங்களுக்கு மத்தியிலே ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இப்பிரதேசங்களில் யாரும் நுழைந்து மிருகங்களையோ பறவைகளையோ சுட முடியாதபடி சட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. சில குறிப்பிட்ட (குட்டியீனும்) காலங்களில் குறிப்பிட்ட மிருகங்களையும் பறவைகளையும் இலங்கையில் எந்தக் காடுகளிலுமே சுட முடியாது. இவ்வகைகளினுல் இலங்கையின் சட்ட திட்டங்கள் பலம் குறைந்த மிருகங்களை அழிவிலிருந்து காப்பாற்றுகின்றன.

ஒரு நாட்டிலுள்ள பலம் குறைந்த சிறுபான்மையினங்கள் அழிந்தொழிந்து போகாதபடி ஐக்கிய நாடுகளின் சாசனம் வழிவகுத்திருக்கிறது. இனவாரியில் சனத்தொகை விகிதாசாரம் மாறுபடக்கூடிய வகையில், சிறுபான்மையரின் பாரம்பரிய பிரதேசங்களில் குடியேற்றம் நடைபெறுவதை இச்சாசனம் தடை செய்கிறது. இத்தகைய குடியேற்றத்தினுல்.........

கல்வி மந்திரி அலுவிஹாரை: கண்டிப் பகுதிகள் பற்றிய நிலைமை என்ன?

டாக்டர் நாகநாதன்: ......குடி [illegible] ரின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் [illegible] யேற்றத்தைத்தான் நாம் குறிப்பாக எதிர்க்கிருேம்; அதுவும், எமது பிரதேசத்தில் எமது மக்களைச் சிறுபான்மையினராக்கும் வகையில், இன்னேரினத்தவர்களை இராக்ஷஸ தொகையில் எமது பிரதேசங்களில் குவித்துக் குடியேற்றுவதையே நாம் எதிர்க்கிருேம். இன விகிதாசாரத்தையே மாற்றியமைக்கும் பிரமாண்டமான அரசாங்கக் குடியேற்றத் திட்டங்களையே நாம் கண்டிக்கிருேம். பாராளுமன்றத்தில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவம் குறையா

## பலே ஐக்கிய தேசியக் கட்சி!

### அப்பா டி. எஸ். காலந்தொட்டு ஒரே ஆசை வார்த்தையும் சதியும்

தாரம், வர்த்தகம், மொழி, தொடர்ந்த ஜீவியம் ஆகியவற்றிற்கு ஆபத்து ஏற்படாதவாறு பாதுகாப்பிருக்கிறது. ஆனுல் இந்த நாட்டில் நடப்பதென்ன? 1948ல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி ஆரம்பமாகிய காலந் தொட்டு இந்தக் குடியேற்றமும், பிரதேச சுவீகரிப்பும் திட்டமிட்டு நடத்தி வைக்கப்பட்டு வந்திருக்கின்றன.

ஒரு குரல்: கள்ளக் குடியேற்றம்பற்றி என்ன?

டாக்டர் நாகநாதன்: திட்டமிட்ட குடியேற்றம்பற்றிக் கூறும்போது சில நண்பர்களுக்கு நாம் பேசுவது புரிவதாயில்லை. சிங்களவராயினும் சரி, வேறெவராயினும் சரி எங்கள் பிரதேசங்களுக்கு வருவதையோ, நண்பர்களாக இங்கே குடியேறி வாழ்வதையோ நாம் எதிர்க்கவில்லை. ஆனுல் அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டு, அரசாங்கச் செலவில், அரசாங்க ஆதரவுடன் அரசாங்கத்தால் நடத்தப்படும் குடியேற்றப்படும் இந்தச் சதியையே நாம் வெறுக்கிருேம். கல்லோயா பள்ளத்தாக்குப்பற்றிக் கவனியுங்கள்.

(குரல் கரகரப்பதுபற்றிச் சபையில் அமளி)

தொண்டை சுகயீனமாயிருப்பதுபற்றி வருத்தப்படுகிறேன். கல்லோயாத் திட்டம் ஆரம்பமாகியபொழுது இன்றைய பிரதமர் விவசாய மந்திரியாக இருந்தார். அப்பொழுது நான் செனட் சபை அங்கத்தவனுக இருந்தேன். இவர் செனட் சபைக்கு ஒருமுறை வந்தபொழுது சொன்னுர், "நாகே! கல்லோயாத் திட்டம்பற்றிய பூர்வாங்க விவரங்களை முதல்முதல் கண்டது நீங்கள்தான். இதோ பாருங்கள்! உங்கள் பிரதேசத்தில், உங்கள் மக்களுக்காக, உங்கள் நில அபிவிருத்திக்காக இதோ கோடிக்கணக்கில் செலவிடப் போகிருேம். இருந்தும் நீங்கள் எங்களுக்குக் கெதிராகவே இருக்கிறீர்களே!" என்று. நான் சொன்னேன்,' "சரி, சரி, பொறுத்திருந்து பார்ப்போமே!"

இதன் பின்னர் அப்பகுதியிலுள்ள முஸ்லிம் பிரதிநிதிகள் இம் மந்திரிக்குப் பெரியதொரு வரவேற்பளித்தார்கள். அப்பொழுது "இத்திட்டம் முஸ்லிம் மக்களுக்கு என்ன செழிப்பைக் கொண்டு வரப்போகிறது பாருங்கள்!" என்று முஸ்லிம் மக்களுக்கு ஆசை வார்த்தை காட்டினுர் மந்திரியார்.

ஆனுல் ஆசை வார்த்தை கூறி, ஈற்றில அவர்கள் செய்தது என்ன? அம்பாரை இப்பொழுது முற்றிலும் தனிச் சிங்களப் பிரதேசம்! (சபையில் குழப்பம்) தமிழ்ப் பிரதேசம் நன்ருக அபிவிருத்தி செய்யப்பட்டு, அம்பாறை என்ற பெயரில் சிங்களவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது தமிழ் பகுதியைச் "சிங்கள மாத்திரம்" என்ற பிரதேசமாக்கக் கோடிக்கணக்கில் செலவழிக்கப்பட்டது. குடியேற்றத்தில் தான் "சிங்கள மாத்திரம்" அல்ல; அப்பிரதேசத்துக்குரிய பாராளுமன்றப் பிரதிநிதித்

(11-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது

உஷா தையல் மெஷின்களே




சோல் ஏஜண்டுகள்:
ரெய்முசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1960 மே மாதம் 15-ந் தேதி

194ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12

தொலைபேசி எண் 3411. த.பெ. 1183


## பொறுப்பும் பாரமும்

பொதுத் தேர்தல் வருகிறது. பொதுத் தேர்தல் என்றதும் பலவிதமான போக்கும், பலவிதமான இலட்சியமும் உடைய அபேட்சகர்கள் அரங்கில் குதிப்பது வழக்கம். அப்படிக் குதிப்பவர்கள் அனைவரும் இரண்டு பெரும் பிரிவில் அடங்குவர்.

ஒருசாரார் தங்களிடமுள்ள பணப் பலத்தையும், குடும்ப செல்வாக்கையும், லௌகீக அந்தஸ்தையும் நம்பி தேர்தலில் இறங்குபவர்கள். மற்றொரு சாரார் தம்மிடமுள்ள சேவை மனப்பான்மையையும், பொதுநல நோக்கையும், தாம் சார்ந்து நிற்கும் கொள்கைகளையும் முன்வைத்து தேர்தலில் ஈடுபடுபவர்கள்.

முன்னவர்கள் பணத்தைச் செலவிட்டு, ஆளடிமைகளைக் கூலிக்கு அமர்த்தி, மதுவை வாரியிறைத்து சுயநலமே குறிக்கோளாகப் போட்டியிடுபவர்கள். பதவி கிடைத்தால் செலவிட்ட பணத்தை வட்டியும் குட்டியுமாகப் பெருக்கிக்கொள்ள பலவித வாய்ப்புக் கிடைக்குமே என்ற அங்கலாய்ப்பை அடிமனதில் மறைத்து வைத்துக்கொண்டு, பொதுநல ஊழியர்களாக வேஷம் போடுபவர்கள் இவர்கள்!

பின்னவர்கள் தங்கள் சொந்த நலத்தை மறந்து, தொழிலை மறந்து, குடும்பத்தை மறந்து, வருமானத்தை இழந்து, வாழ்வை அர்ப்பணித்து இலட்சியத்தை அடைவதற்காக, பொது மக்கள் நலவுரிமைகளைப் பாதுகாப்பதற்காகப் பாராளுமன்றத்தைப் பயன்படுத்தாமல் விடக்கூடாது என்ற தத்துவத்தின் மீது போட்டியிடுபவர்கள்.

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில், மேலே கூறப்பட்ட இலட்சியவாதிகள் பலரை அபேட்சகர்களாகக்கொண்ட ஒரே ஒரு ஸ்தாபனமாக விளங்குகிறது இலங்கைத் தமிழரசுக் கட்சி.

இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சார்ந்தவர்கள் சுயநலவாதிகளாகவும், சந்தர்ப்பவாதிகளாகவும் இருந்திருந்தால் அவர்கள் யு. என். பி. அரசாங்கத்தைக் கவிழ்த்திருக்க வேண்டியதில்லை. சுயதேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு ஏற்பட்ட அரிய வாய்ப்பினை அவர்கள் பயன்படுத்தியிருக்கலாம். பல முழு மந்திரிப் பதவிகளையும், அரை மந்திரிப் பதவிகளையும் சம்பாதித்துக்கொண்டு தமிழ் பேசும் மக்களை நட்டாற்றில் கைகழுவி விட்டிருக்கலாம். ஐந்து வருடங்கள் 'ஜாம் ஜாம்' என்று பாராளுமன்றத்து நாற்காலிகளில் பசை ஒட்டாக ஒட்டிக்கொண்டு இருந்திருக்கலாம்!

மேற்கண்டவாறு அவர்கள் செய்ய ஒருப்படாததால் ஒரு தேர்தல் நடந்து சில மாதங்களுக்குள்ளேயே மறுதேர்தலுக்கு அவர்கள் நிற்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியிருக்கிறார்கள்.

இந்தவகையில் அவர்கள் செய்த தன்னல மறுப்பையும், தியாகத்தையும் தமிழ் பேசும் மக்கள் எளிதில் மறந்துவிட முடியுமா? பின்னரும் அவர்களையே தேர்ந்தனுப்பாமல் பிறிதொருவருக்கு வாக்குப் போடுவது சாத்தியமா? நன்றி கொன்றறியாத தமிழினம் என்ன செய்யும் என்பதை அறிய முடியாதவர்களே தமிழரசு அபேட்சகர்களை எதிர்க்கத் துணிவர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில்தேர்தலுக்கு நிற்கும் அபேட்சகர்களுக்கும் ஏனைய அபேட்சகர்களுக்கும் மற்றுமொரு பெரும் வித்தியாசம் உண்டு. ஏனைய அபேட்சகர்கள் தம்மைத் தேர்ந்தனுப்பும் மக்களின் பிரதிநிதிகளாக மட்டும் பாராளுமன்றத்துக்குச் செல்ல விரும்புகிறார்கள்.

தமிழரசுக்கட்சி அபேட்சகர்கள் வெறும் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றத்துக்குச் செல்பவர்கள் அல்லர். அவர்கள் தமிழ் பேசும் இனத்தின் இழந்த உரிமைகளை மீட்டுக் கொடுப்பதற்காக, தமிழ் பேசும் மக்களுக்கு சுதந்திரத்தையும் சுயாட்சியையும் பெற்றுக்கொடுப்பதற்காக, போராடும் அறப்போர் வீரர்களாகப் பாராளுமன்றம் செல்ல விழைகின்றார்கள். எனவே போர் வீரர்களைத் தக்கபடி போஷித்து, ஆதரித்து, உற்சாகப்படுத்திக் களத்துக்கு அனுப்பி வைக்க வேண்டியது தமிழ் பொதுமக்கள் கடமை அல்லவா?

இலங்கையில் ஒருவர் அரசியல்வாதியாக விளங்க வேண்டுமெனின் அவருக்கு நல்ல ஓய்வும் சொந்த வருமானமும் வேண்டும். இலங்கைவாழ் தமிழ் பேசும் இனத்தை ஒரு சாபக்கேடு பிடித்திருக்கிறது. ஓய்வும் சொந்த வருமானமும் உள்ளவர்களிடம் உணர்ச்சியில்லை. இலங்கையில் தமிழ்ப் பேரினம் தனது தனித் தன்மையை இழந்து அழிந்துபோகாது பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம், அபிமானம், உணர்வு அவர்களிடம் மருந்துக்கும் கிடையாது.

அதேவேளையில் தமிழ் பேசும் இனத்தின் நலனிலும் நல்வாழ்விலும் நாட்டம் கொண்டுள்ளவர்களிடம் தேர்தலில் போட்டியிட்டுத் தம் இனத்துக்காகத் தமது முழு நேரத்தையும், முழுத்திறமையையும் செலவு செய்யப் போதிய பணப் பலம் இல்லை. தக்க வருமானம் இல்லை.

இத்தகையோர் பலர் தாம் இன்று தமிழரசுக் கட்சியின் அபேட்சகர்களாக நிற்கிறார்கள். இவர்கள் பொருளாதாரத் தாக்கத்தால் வதங்கி வாடி விடாவண்ணம் இவர்களுக்கு பக்கபலமாக நின்று பொருளுதவி முதற்கொண்டு சகல உதவிகளும் புரிந்து இவர்களுடைய தேர்தலை நடத்தி வைக்க வேண்டியது தமிழ்ப் பொதுமக்களின் பொறுப்பும் பாரமுமாகும்.

அந்தந்தத் தொகுதியில் உள்ள பொதுமக்கள் இந்தப் பொறுப்பையும் பாரத்தையும் விருப்புடன் ஏற்று எதிர் வரும் பொதுத் தேர்தலை நடத்தி வைக்காவிட்டால் தமிழினம் தன்னல மறுப்பும் தியாகசிந்தையும் உள்ள தக்க பிரதிநிதிகளை—உறுதிவாய்ந்த போர் வீரர்களை—பெற முடியாது போகும்.

அப்படியான நிலையேற்பட்டால் அதனால் ஏற்படக் கூடிய பலாபலன் பாரதூரமானது என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டிய அவசியம் இல்லையென்றே நம்புகிறோம்.

# விஷம் கக்குகிறது ஏரிக்கரை சிங்கள 'சிளுமினு' பத்திரிகை

## தமிழரசு கோரிக்கைகளுக்கு தப்பும் தவறுமான விளக்கம்

'சிளுமின' என்பது தமிழ் விழா நடத்தும் தினகரன் பத்திரிகையை வெளியிடும் "லேக் ஹவுஸ்" என்ற ஏரிக்கரை ஸ்தாபனத்திலிருந்து வெளிவரும் சிங்கள வாரப் பத்திரிகையாகும்.

இப்பத்திரிகை 8-5 1960 ஞாயிறு இதழில் தீட்டியுள்ள ஆசிரியத் தலையங்கத்தின் தமிழ் மொழிபெயர்ப்பை இங்கு வெளியிடுகிறோம்.

எத்தகைய பொய்ப் பிரசாரங்களைச் சிங்களப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன என்பதைத் தமிழ் மக்கள் படித்து உணர்வார்களாக.

● தமிழரசுக் கட்சி வடக்கு கிழக்கு மாகாணங்களின் பரிபாலனத்துக்காக பாராளுமன்றம்போன்ற சபையைக் கோருகின்றதாம்!

● தமிழ் சிங்களப் பிரதேசங்களாகிய இரண்டு பிரதேசங்களிலும் தமிழ்ப் பாஷையே அரசாங்க பாஷையாக இருக்க வேண்டும் என்று கோருகின்றதாம்!

● சிங்களப்பகுதிகளில் உள்ள குடியேற்றத் திட்டங்களில் கூட 50 சிங்களவருக்கு 50 தமிழர் வீதம் குடியேற்றப்பட வேண்டும் என்று கோருகின்றதாம்!

● இலங்கையிலுள்ள இந்தியர் எல்லோருக்கும் பிரஜாஉரிமை கொடுக்கப்பட வேண்டும் என்று கோருகின்றதாம்!

தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளைச் சாதாரணச் சிங்களப் பொதுமக்கள் தப்பர்த்தம் செய்துகொள்வதற்கு ஏற்றபடி சாமர்த்தியமாகத் திரித்து ஆசிரியத் தலையங்கம் தீட்டிக் காட்டுகிறது இந்த 'சிளுமினு'!

பத்திரிகைகளின் விஷமப் பிரசாரத்தை தினம் தினம் படிக்கும் பாமர சிங்களப் பொதுமக்கள் தமிழர்மீதும், தமிழரசுக் கட்சிமீதும் துவேஷம் கொள்வதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

இத்தகைய திட்டமிட்ட துர்ப்பிரசாரத்தை முறியடிக்கத் தமிழரசுக் கட்சியார் என்ன செய்கிறார்கள்? சிங்களப் பொதுமக்களுக்குத் தங்கள் உண்மை நிலையை அவர்கள் விளக்க வேண்டாமா? தங்கள் கட்சியின் கொள்கைகளையும், உண்மையான கோரிக்கைகளையும் விளக்கி சிங்கள மொழியில் உத்தியோகபூர்வமான பிரசுரம் ஒன்றைத்தானும் இதுவரை தமிழரசுக் கட்சியார் வெளியிடாமல் இருப்பது பெரும் குறையாகும்.

"எங்கள் ஜாதியின் உரிமையை எப்படித் தாரைவார்த்துக் கொடுப்பது?" என்று கேட்கிறது 'சிளுமினு' தமிழ் பகுதிகளில் தமிழ் மக்கள் தமிழ் மொழியில் கருமமாற்ற வேண்டும் என்று கேட்பது, சிங்கள ஜாதியின் உரிமையைத் தாரைவார்த்துத் தா என்று கேட்பதாகுமா?

சரி, இதோ அந்த 'சிளுமினு' தலையங்கத்தைத் தருகிறோம், படித்துப் பாருங்கள்.

—ஆசிரியர்

## பெடரல் பயமுறுத்தலிலிருந்து இனத்தைக் காப்பாற்றுவோம்

இம்முறையும் ஜனநாயக அரசாங்கத்தை அமைக்க வேண்டியதன் அவசியத்தை பொது ஜனங்கள் அறிந்து கொண்டிருப்பார்கள் என நம்புகிறோம். இலங்கைக்குத் தேவையான தேசிய பொருளாதார பொது சகஜ நிலையையும், சமாதான நிலையையும் திரும்பவும் உண்டாக்க வல்ல ஜனநாயக கொள்கையுள்ள கட்சிக்கு தனியாக அரசாங்கத்தை நடத்த பெரும்பான்மை நிலைமை வருகிற தேர்தலில் கிடைக்காது போனால் அதனால் நாட்டுக்கும் இனத்துக்கும் பெரும் விபத்து வந்து சேரும்.

மக்கள் சபையில் இன்றுள்ள பிரதிநிதிகள் தொகை நூற்றம்பத்தொன்று. அவற்றுள் வடகீழ் மாகாணத்திலுள்ளவை 24. சென்றமுறை 15 ஆசனங்களைக் கைப்பற்றிய பெடரல் கட்சி இந்த நாட்டு அரசியலில் முக்கியத்துவம் வகித்ததை காண முடிந்தது. வடகீழ் மாகாணங்களிலிருந்து வந்த, பெடரல் கட்சிக்குச் சேராத பிரதிநிதிகளுள் மூன்று பேர் தவிர்ந்த மற்றைய பிரதிநிதிகள் சிம்மாசனப் பிரசங்க விவாதத்தில் பெடரல் கட்சியுடன் சேர்ந்து வாக்குப் பிரயோகம் செய்தனர். வருகின்ற தேர்தலில் ஒருவேளை பெடரல் கட்சிக்கு இப்போதுள்ளதிலும் பார்க்க அதிக ஸ்தானங்கள் கிடைக்க இடம் இல்லாமலுமில்லை.

இதற்கிடையில் இப்போதுள்ள நிலைமையின் படி பார்த்தால் இடதுசாரிகளுக்கு இருபத்தைந்து ஸ்தானங்கள் வரை கிடைக்கலாம். வகுப்புவாத பெடரல் கட்சிக்கும் இடதுசாரிகளுக்கும் ஐம்பது ஸ்தானங்கள் கிடைக்கலாம். அதன் பின் ஜனநாயகக் கொள்கையுடைய பொது சிங்கள சனங்களுக்கு மிச்சமாக [illegible] தால் இடதுசாரிகளுடைய அல்லது பெடரல் வாதிகளுடைய அனுசரணையை எதிர்பாராத ஜனநாயகக் கொள்கையையுடைய கட்சிக்கு நிரந்தர பெரும்பான்மை அரசாங்கத்தை அமைக்க 80 ஸ்தானங்களாவது வேண்டியிருக்கும்.

பெடரல் கட்சியினரின் கோரிக்கைகள் என்ன என்பதைப் பார்க்கும் போது எப்படித்தான் அவர்களின் கோரிக்கைகளுக்கு இணங்குவது? அவர்கள் கேட்பது என்ன?

புறம்பான பெடரல் அரசாங்கம் கேட்கிறார்கள். அப்படியானால் வடக்கு—கிழக்குப் பிரதேசங்களின் பரிபாலனத்திற்காக பாராளுமன்றம் போன்ற சபை (பிரதேச சபை) அதில் அவர்கள் அதிகாரம். இரண்டு பிரதேசங்களிலும் தமிழ்ப் பாஷையே அரசாங்க பாஷையாக இருக்க வேண்டும். குடியேற்றத் திட்டங்களில் 50 சிங்களவருக்கு 50 தமிழரும் குடியேற்றப்பட வேண்டும். இங்குள்ள இந்தியர் எல்லோருக்கும் பிரஜா உரிமை கொடுக்கப்பட வேண்டும். இவைதாம் அவர்களின் கோரிக்கைகள்.

இந்த நாட்டைப் பிரிக்கின்ற, சிங்கள நாட்டில் சிங்களவர்களின் உரிமைகளை ஒழிக்கின்ற, சிங்கள இனத்தின் எதிர்காலத்தை இருளாக்கும் இந்த மாதிரியான கோரிக்கைகளுக்கு எமது இனத்தின் இன உணர்வுள்ள யார் தான் இடம் கொடுப்பார்கள்? இம்மாதிரியான கோரிக்கைகளை விடுபவர்களுடன் அரசாங்கத்தை அமைக்கவல்ல அரசபோக மடைவதற்கு ஒன்று சேர்பவர்கள் யார்?

எங்கள் ஜாதியின் உரிமையை எப்படி தாரை வார்த்துக் கொடுக்க முடியும்? இப்படி நிலைமை இருக்கும் போது செய்ய வேண்டியதென்ன? பெடரல் வாதிகளின் அல்லது இடதுசாரிகளின் உதவி உபகாரமில்லாது சிங்களவரின் உரிமையைப் பாதுகாக்கின்ற ஜனநாயகவாதிக் கட்சிக்கு 80 ஸ்தானங்களோ, அல்லது அதிக ஸ்தானங்களோ கிடைக்கக் கூடியதாக இம்முறை வாக்குச் சீட்டை பாவிப்பது தான்.

அப்படிச் செய்வதே எங்கள் நாட்டையும் எதிர்காலப் பாரம்பரையையும் ஜாதியையும் பாதுகாப்பதாகும்.

## அபேட்சகர் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### அறுபது ஆயிரம் ரூபா கொடுங்கள்

மட்டக்களப்பிலிருந்து ஒரு வழக்கறிஞர் திரு. பொன்னம்பலத்துக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கூறியிருந்தாராம்: "தமிழ்ப் பிரதேசத்தில் தமிழரசுக் கட்சியை எதிர்த்து இந்தச் சந்தர்ப்பத்தில் போட்டியிடுவதென்பது எதிர் ஆறு நீந்தும் புத்திசாலித்தனத்தோடு ஒத்ததாகும். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் பொதுமக்கள் அபிப்பிராயம் தமிழரசுக் கட்சிக்குச் சார்பாய் சூறாவளியாக வீசிக் கொண்டிருக்கிறது. எதிர்த்துப் போட்டியிடுபவர் யாராயிருந்தாலும் ஆடிக்காற்றில் இலவம் பஞ்சைப் போல் பறக்க வேண்டியது தான். என்றாலும் தாங்கள் கேட்டுக்கொண்டதால் நான் போட்டியிடுகிறேன். சென்றமுறை திரு. இராசதுரையை எதிர்த்துப் போட்டியிட்ட ஒருவர் நாற்பதாயிரம் ரூபா செலவிட்டிருக்கிறார். தாங்கள் இம்முறை அறுபதாயிரம் ரூபாவாவது தர முடியுமானால் நான் போட்டியிடுகிறேன். வெற்றி பெற முடியாவிட்டாலும் நான் பணத்தைச் செலவிட்டு ஒரு நல்ல போட்டியை ஏற்படுத்துகிறேன்."

மேற்படி கடிதத்துக்கு திரு. பொன்னம்பலம் பதில் கடிதம் கூட எழுத மறந்துவிட்டாராம்.

கவலை

யாழ்ப்பாணப் பகுதிகளில்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எஸ். ஜே. வியின் வேண்டுகோள்

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி வெற்றி ஈட்ட பொருள் உதவி தந்து துணைபுரிந்த தமிழ் பேசும் மக்களாகிய உங்களிடம் தான் மீண்டும் பணம் தந்து உதவுங்கள் எனக் கேட்க வேண்டிய நிர்ப்பந்த நிலையில் இருக்கிறேன்,

எடுத்த எடுப்பில் தமிழ் பேசும் இனம் தனது இழந்த உரிமைகள் அனைத்தையும் பெற்றுவிட முடியாது. நிலையான கொள்கையோடு தொடர்ச்சியாகப் பல காலத்திற்கு நாம் உரிமைக்குரல் எழுப்பினால்தான் உரிமை வாழ்வு பெற முடியும். உலகில் உள்ள விடுதலை பெற்ற பல் வேறு நாடுகள்-தேசிய இனங்கள் இந்தப் பேருண்மையையே உணர்த்தி நிற்கின்றன. ஆதலால் தமிழ் அரசுக்கட்சியை ஒருகுறிப்பிட்ட குழுவின் கட்சியெனக் கருதாது ஒவ்வொரு தமிழ் மகனும்-மகளும் தாம் அங்கம் வகிக்கும் ''மக்கள் விடுதலை இயக்கம் (*Peoples, Freedom Movement*) அது எனக்கருதி நிறைந்த தமிழ் உணர்ச்சியோடு பணியாற்ற வேண்டும்.

இம்முறைத் தேர்தலில் நாம் போட்டியிடும் எல்லாத் தொகுதிகளிலும் வெற்றியீட்டி தமிழ் பேசும் இனம் தனது "சுயநிர்ணய உரிமையை" நிலைநாட்ட உறுதிபூண்டுவிட்டதை சிங்கள அரசாங்கத்திற்கும் உலகத்திற்கும் எடுத்துக்காட்ட வேண்டும். இந்நிலையை உருவாக்க ஓர் அரிய வாய்ப்பாகவே இத்தேர்தலை நாம் பயன்படுத்த வேண்டும். ஆதலால் இம் முக்கியத்துவத்தை உணர்ந்து இயன்றளவு பணம் தந்து உதவுங்கள் என மீண்டும் பணிவன்புடன் வேண்டுகிறேன்,

எஸ். ஜே. வி. செல்வநாயகம்

16, அல்பிறட் ஹவுஸ் கார்டின்ஸ்
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3.

# றோயல் ஆரம்ப பாடசாலை தமிழ் வகுப்பு காலி இடங்கள்

## இன்னும் சரியாக நிரப்பப்படவில்லை நிர்வாகிகளின் விசித்திரப் போக்கு

## இடம் கேட்ட பெற்றோர் கவலை

றோயல் ஆரம்ப பாடசாலையில் பாலர் வகுப்புக்கு மேலுள்ள வகுப்புகளிலுள்ள சில இடங்கள் இன்னும் நிரப்பப்படாமலிருக்கின்றன. கொழும்பிலே வேறு பாடசாலைகளில் இடம் எடுக்க முடியாத பெற்றோர் சிலர் இந்த இடங்களில் தங்கள் பிள்ளைகளைச் சேர்க்கும்படி சென்ற ஆண்டுக் கடைசியிலேயே றோயல் ஆரம்ப பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கு விண்ணப்பித்தும் பயனில்லாமல் போயிற்று.

வகுப்புகளில் இடம் ஏற்பட்டால் இடையிடையே அவற்றை நிரப்புவது வழக்கம். எனினும் தம் பிள்ளைகளுக்கு இடம் கேட்டு விண்ணப்பித்த பெற்றோர் சிலருக்கு இடம் இல்லை என்று அறிவிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இடம் இருப்பதாக அறிந்து கேட்ட பெற்றோருக்கு இந்த ஆண்டுத் தொடக்கத்திலே தேர்வு நடத்தி அந்த இடங்களை நிரப்புவோம் என்று தலைமை ஆசிரியர் கூறினாராம். சென்ற ஆண்டு முடிவிலே தேர்வு நடத்தப்படாமை கண்டு ஏமாற்றமடைந்த பெற்றோர் சிலர் தொலைபேசி வாயிலாகவும் நேரிற் சென்றும் விசாரித்த பொழுது தலைமை ஆசிரியர் இந்தியாவுக்குப் போய்விட்டார். அவர் வந்தவுடன் இடங்கள் நிரப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

### ஓய்வில்லையாம்

தலைமை ஆசிரியர் திரும்பி வந்து மாதங்கள் பலவாகியும் இன்னும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. சில பெற்றோர் தலைமை ஆசிரியரைக் கேட்டதற்கு இதைக் கவனிக்கவே தமக்கு ஓய்வில்லை என்று அவர் கூறி வருவதாக அறியப்படுகிறது. இதனால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் தமிழ் மாணவர்களே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### குறை தீர வழி

"கல்வி நிலையங்களிலுள்ள இடங்களை ஆண்டுத் தொடக்கத்திலே நிரப்ப முயற்சியாதது பெரும் குற்றமாகும், சாக்குப்போக்குச் சொல்லிப் பெற்றோரை அலைய வைப்பது நீதியாகாது. விஷயத்தை தீர விசாரித்தால் இப்பாடசாலையிலுள்ள பல ஊழல்கள் வெளியாகும்.

'றோயல் ஆரம்ப பாடசாலையின் தமிழ்ப் பகுதியை முன்னிருந்ததுபோல ஓர் உதவித் தலைமை ஆசிரியரின் பொறுப்பில் விட்டால் இத்தகைய அனர்த்தங்கள் உண்டாவதற்கு இடமில்லை'' என்று றோயல் ஆரம்பப் பாடசாலையில் தமது பிள்ளைக்கு இடம் பெற அலைந்த பிரமுகர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் கூறினர்.

## அபேட்சகர்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற பொதுத் தேர்தலின் போது தமிழரசுக் கட்சியை எதிர்த்துப் போட்டியிட்ட தமிழ் காங்கிரஸ் அபேட்சகர்களில் பலர் தாம் இம்முறை தமிழரசுக் கட்சியை எதிர்த்துப் போட்டி யிடத் தயாராய் இல்லை என்று அறிவித்து விட்டதால் தலைவர் திரு பொன்னம்பலம் மிகுந்த கவலைக்குள்ளானவராகக் காணப்படுகிறார்.

### இரு தகவல்கள்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று திரு. பொன்னம்பலத்தின் நெருங்கிய உறவினர்கள் அவரை வற்புறுத்துவதாகவும் அதனால், அவர் போட்டியிடாமல் விடக்கூடும் என்றும் பேசிக் கொள்ளப்படுகிறது அதே சமயத்தில் அவர் யாழ்ப்பாணம் பட்டணத்தில் போட்டியிடாமல் பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிடுவார் என்றும் வதந்திகள் அடிபடுகின்றன.

# டட்லி யு. என். பி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### பணம் கிடைக்கிறது

அவர் பின்வருமாறு கூறியதாகத் தெரிகிறது! "யு. என். பி.க்கு நிதி உதவி புரிய பெரியபெரிய வர்த்தக ஸ்தாபனங்களும், முதலாளிகளும், வெளிநாட்டு ஸ்தானிகர்களும் முன்வருகிறார்கள். ஆனால் அவர்கள் பணம் தருவது எக்காரணம் கொண்டும் வெளியில் தெரிந்து விடக்கூடாது என்று கண்டிப்பாகக் கேட்டிருக்கிறார்கள்.

### தமிழ்ப் பகுதிகளில் போட்டி

"தமிழ்ப் பகுதிகளில் பலர் யு என். பியின் ஆதரவோடு போட்டியிட விரும்புகிறார்கள். அவர்கள் கோருவது எல்லாம் பணம் மட்டுந்தான் நாம் பண உதவி செய்தால் தேர்தலில் வென்று வந்ததும் நமது கட்சியை ஆதரிப்பதாகச் சொல்கிறார்கள். சமீபத்தில் நான் சில தமிழ்த் தலைவர்களுடன் பேசசுவார்த்தைகள நடத்தினேன். பணம் செலவிட்டால் தமிழ்ப் பகுதிகளில் ஆசனங்களைக் கைப்பற்றலாம் என்று அவர்கள் உறுதி கூறினார்கள். யு என். பி. பணம் கொடுப்பதானல் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் பணம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிந்தால் தமிழ் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்றும் அவர்கள் கருத்துரைத்தார்கள்.

### சர்வாதிகாரம் வேண்டும்

"எனவே, பல வழியில் நிதியைப் பெறவும் அந்த நிதியை எல்லாத் தொகுதிகளுக்கும்—விசேஷமாகத் தமிழ் தொகுதிகளுக்கும்—பகிர்ந்தளிக்கவும் எனக்கு தனிப்பட்ட முறையில் சர்வாதிகாரம் அளிக்கப்பட வேண்டும். இன்னும் யாராவது என்னோடு சம்பந்தப்பட்டால் இரகசிய விவரங்கள் வெளியாகி விட இடமுண்டு. இதை நான் விரும்பவில்லை. தேர்தல் முடியும் வரைதான் நான் இந்த அதிகாரத்தைக் கோருகிறேன். தேர்தல் முடியும் வரைதான் இந்த இரகசியங்களை நாம் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. தேர்தல் முடிந்ததும் சகல வரவு செலவுக் கணக்கு விவரங்களையும் நான் உங்களிடம் சமர்ப்பிப்பேன். அது வரை எனக்கு சர்வாதிகாரம் தந்தால் தான் நான் தலைமை வகித்துக் காரியங்களைச் செய்ய முடியும்."

மேற்கண்டவாறு திரு டட்லி சேனநாயகா கூறியதாகத் தெரிய வருகிறது.

### செயற்குழு இணங்கியது

அத்தோடு, அபேட்சகர்களை நியமிக்கும் விஷயத்திலும் தமக்கு சர்வாதிகாரம் வழங்க வேண்டும் என்று திரு. டட்லி சேனநாயகா கண்டிப்பாகக் கேட்டுக் கொண்டார்.

திரு. டட்லியின் இந்த எதேச்சாதிகாரமான கோரிக்கையை மாற்றவோ மறுக்கவோ திராணியற்ற நிலையிலிருந்த யு என். பி. செயற்குழு எதிர்வரும் பொதுத் தேர்தல் சம்பந்தமான சகல விஷயங்களையும் கவனிக்க திரு டட்லியை [illegible] மனிதர் உப குழு [illegible] தில் நியமித்தது.

# அமெரிக்க விமானம்

## ருஷ்யாவில் சுடப்பட்ட சம்பவம்

## இருநாடுகளிலும் அதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள பரபரப்பு

அமெரிக்க விமானம் ஒன்று சோவியத் ருஷ்யாவின் எல்லைக்குள் வைத்து கடந்த 1ந் தேதி சுடப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து அமெரிக்காவிலும் ருஷ்யாவிலும் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. விமானத்திலிருந்து கைப்பற்றப்பட்ட புகைப் படங்களும் விமானியும் இப்போது சோவியத் அரசாங்கத்தின் கையில் இருப்பதால் அடுத்து என்ன நடக்கும் என்ற அங்கலாய்ப்பு உலகெங்கும் தலைதூக்கியுள்ளது.

கடந்த 1ந் தேதி சோவியத் எல்லைக்குள் பறந்து சென்ற அமெரிக்க விமானம் ஒன்றை ருஷ்யா சுட்டது. விமானி பிரான்சிஸ் பவரையும் அவர் வைத்திருந்த புகைப் படங்கள் முதலான பொருட்களையும் சோவியத் அரசாங்கம் கைப்பற்றிக் கொண்டது. விமானி சோவியத் விவகாரங்களை வேவு பார்க்க அனுப்பப்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இதை மெய்ப்பிப்பது போன்று அமெரிக்காவில் வேறு விஷயம் நடந்தது. அதாவது ஜனாதிபதி ஐசன்ஹோவரின் ஆக்ஞைப்படி அமெரிக்காவில் நடத்தப்பட்ட விசாரணையில் குறிப்பிட்ட விமானி தன் இஷ்டப்படி சோவியத் யூனியனில் வேவு பார்க்கச் சென்றிருக்கலாம் என்று தெரிய வருவதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

ருஷ்யா பிடிபட்ட விமானியை விசாரித்ததில் அவர் தாம் குற்றவாளி என்பதை ஒப்புக்கொண்டிருப்பதாக அறிவித்திருக்கிறது. தாம் முக்கிய புகைப் படங்கள் எடுத்ததையும் அவர் ஒப்புக்கொண்டதாகவும் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

"சோவியத் யூனியன் இந்த விமானம் சுடப்பட்ட சம்ப[illegible] ஜனாதிபதிக்கும் இதற்

கும் 'தொடர்பு' இருப்பதாக இதுவரை நேரடிக் குற்றச்சாட்டு எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## சோவியத் 'வேவுகாரருக்கு' நாடுகடத்தல்

சுவிட்சர்லாந்தில், அந்நாட்டு ருஷ்ய ஸ்தானிகர் அலுவலகத்தைச் சேர்ந்த இருவர் வேவுபார்த்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று சுவிட்சர்லாந்து அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.


## ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினால் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
723, மருதானை ரோடு,
கொழும்பு-10.
த. பெட்டி 649.



சி. சி. சி. நெற்பயிர்

உரக்

கலவைகள்

உலகிலேயே மிகச்சிறந்தவை



கொழும்பு
கொமேர்ஷல்
கொம்பனி லிமிடெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

தபால் பெட்டி 33, கொழும்பு.

CCC 521


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தக் காரணம்!

சிறுகதை — எழுதியவர்: எஸ். எல். சவுந்தரநாயகம்

என் வயதொத்த பலர் திருமணம் புரிந்து மக்கட் பேறடைந்து தந்தை யென்கிற மகத்தான தலைமைப் பதவியைத் தாங்குகிறார்கள்! 'நான் மட்டும் பிரம்மச்சரிய வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்த காரணமென்ன?' என்பதைத் தான் நீரும் பிடிவாதமாக அறிய விரும்புகிறீர்!

எனது வாழ்க்கையென்கிற தொடர் கதையிலேயே 'அந்தக் காரணம்' பற்றி விளக்கும் கட்டந் தான் சோகரசம் ததும்பும் அத்தியாயம், நண்பரே!

என்றாலும்... நாமிருவரும் நட்புக்கொண்ட இந்தக் குறுகிய காலத்திலே பல விஷயங்களை மனந்திறந்து பேசியிருக்கிறோம்.

எனவே... (நான் திருமணம் செய்ய விரும்பாத, அந்தக் காரணத்தை உமக்குச் சொல்லுவதில் தவறில்லை. சொல்லுகிறேன் கேளும்!

சில வருடங்களுக்கு முன்பு ஒரு நாள்—

"உம்மைச் சுவர்ணபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மருதமடுப் பாடசாலைக்குத் தலைமையாசிரியராக நியமனஞ் செய்துள்ளோம். ......வேலையை ஒப்புக்கொள்ளவும்." —இவ்வாறு மேலதிகாரியிடமிருந்து கடிதம் வந்தது.

உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய எனக்கு தலைமையாசிரியராகப் பதவி உயர்வு கிடைத்தது குறித்து மகிழ்ச்சியடைவதற்குப் பதிலாக துக்கப்பட்டேன்.

மருதமடு நான் பிறந்த கிராமமென்றாலும் அங்கு போவதற்குக் கிஞ்சிற்றும் நான் விரும்பவில்லை.

சுவர்ணபுர மாவட்டத்தைச் சேர்ந்த மருதமடு வென்னும் வளமிகு கிராமத்திலே, வறிய வாழ்க்கை நடத்திய பெற்றோருக்கு ஒரேயொரு மகனாகத் தான் நான் இவ்வுலகிலவதரித்தேன்.

இளமையிலேயே சுவர்ணபுரப் பட்டினஞ் சென்று படிக்கத் தொடங்கினேன். பத்து வயதில் தாயையும், எஸ். எஸ். ஸி. வகுப்பு சித்தியடைந்த சில நாட்களில் தந்தையையும் பறிகொடுத்த என்னால் தொடர்ந்து படிக்க முடியவில்லை.

பூர்வீகச் சொத்துகளுமில்லை; பண உதவி புரிவதற்கு நெருங்கிய இனபந்துக்களுமில்லை. எனக்கு உதவி செய்யக்கூடிய மனமுடையவர்கள் மிகவும் வறியவர்களாயிருந்தனர்.

ஆகவே, 'பயிற்றப்பட்ட ஆசிரியர் ஆவது' என்ற எனது இலட்சியத்துக்கு அநுதாபந் தெரிவித்து விட்டு சொந்த ஊரோடு நின்று விட்டேன்.

இனம் பிரிந்த குரங்கு போல் சொந்தவூரில் தனிமையாக வாழ்வு நடத்தினேன். தகப்பனாரின் தொழிலாகிய விவசாயத் தொழிலை இலேசாகச் செய்தும் வேறு கூலி வேலைகள் செய்தும் வயிற்றைக் கழுவினேன்.

'கஸட்' பத்திரிகையில் காணப்பட்ட உத்தியோகத் தேர்வுப் பரீட்சைகளுக்கெல்லாம் விண்ணப்பம் போட்டுப் பார்த்தேன். லேவாதேவியின் மகளைப் பிறக்காத இலஞ்சப் பெருமாளின் திருவருள் கிட்டாத—என்னைப் பார்த்து, எட்டாக் கனிகளாகத் தொங்கிய வண்ணம் உத்தியோகங்கள் கைகொட்டிச் சிரித்தன.

விவசாயத்தை முறையாகச் செய்து வாழ்வதற்கும் குமாஸ்தாக் கல்வித் திட்டத்தினால் வளர்க்கப்பட்ட உடம்பு ஒற்றுழைக்க மறுத்தது. வறுமை, பசி, மனக்கவலைகள் வாட்டிப் பிழிய தாமரையிலையின் மேல் தண்ணீர்த் திவலையாக செய்வதறியாது தத்தளித்தேன்.

கரடி, புலி வாழும் கானகத்திலுள்ள அந்தர வழியிலகப்பட்டுத் தனிமையாகப் பரதவிக்குமொரு சிறு குழந்தைக்கு, அகஸ்மாத்தாக இன்னொரு குழந்தை துணையாகக் கிடைத்த தொப்ப எனக்கும் ஒரேயொரு துணையாக வாய்த்தவள் சுசீலா தான்

சுசீலா யாரென்றால்?—

மருதமடு வைதீகராக மாகக் கொண்ட மாஜி உடையார் மங்களநாதர் என்பவரின் புதல்வியும் எனது ஆருயிர்க் காதலியுந்தான், சுசீலா!

சுசீலாவும் நானும் ஒருவரையொருவர் மனப்பூர்வமாகக் காதலித்தோம். படமாளிகை, கடற்கரை, காணிவல், பஸ், புகையிரதங்களில் சந்தித்த பொழுது உணர்ச்சிப் போதை தலைக்கேறி முளைத்த திடீர்க் காதலல்ல, எங்கள் காதல்!

மண் விளையாட்டுக் காலந்தொட்டு ஒருவரையொருவர் நன்கறிந்து, பரஸ்பரம் அன்பு பரிமாறி, உள்ளங்களொன்றிப் பிறந்து வளர்ந்து பண்பொளி வீசிய வைரக் காதல் தான், எங்கள் காதல்!

காதல் உண்மையானதாயிருந்தென்ன? நான் வறுமையின் அதல பாதாளத்தில் கிடந்தேன். சுசீலா செல்வத்தின் கொடுமுடியில் வீற்றிருந்தாள்...

எங்கள் காதல் விவகாரம் என்றேவொரு நாள் வெளிவருமென்பதையும், அப்பொழுது கடுமெதிர்ப்பு உண்டாகுமென்பதையும் நாங்கள் உணராமலிருக்க வில்லை. பண்டைக்காலத் தமிழர் திருமண முறை வழக்கங்களிலொன்றான 'உடன்போக்கு' முறைப்படி எங்காவது போய் வாழ்ந்தாலென்ன வென்றும் திட்டம் போட்டுப் பார்த்தோம்.

"அப்படிப் போய் வாழ்வதற்குத் தொழில்?"—பூதாகரமாக விஸ்வரூபமெடுத்த இந்தக் கேள்வி, 'ஹிரோஷிமா'வில் வாழ்ந்த பச்சிளம் பாலகர் மேல் வீசிய அணுகுண்டாக எங்களின் திட்டத்தைச் சுட்டுத் தீய்த்தது.

மெல்ல மெல்ல எங்கள் காதல் பற்றிய தகவல்கள், மலைமேல் வைத்துப் பிய்த்தெறியப்பட்ட வெண்பஞ்சின் பஞ்சணைய இறகுகளாக நாலுதிக்கிலும் பறந்து எல்லோரின் மனக்கண்களுக்கும் தெளிவாய்த் தெரிந்தன.

சுசீலாவுக்குப் போடப்பட்ட கடுங்காவல் முறை எங்கள் சந்திப்புக்கு இரும்புத் திரையிட்டது. சுசீலாவுக்குத் திருமண ஏற்பாடுகள் துரித கதியில் நடைபெறுவதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து எனக்குச் செய்திகள் கிடைத்தன.

அப்பொழுதுங்கூட— சுசீலாவிடமிருந்து எவ்வித உறுதிமொழியுங் கிடைக்காததினால் அவள் மனம் மாறிவிட்டாளென்ற முடிவுக்கு வந்தேன்.

"காதல்! ஆமாம், மாளிகை வாசிகளைப் பொறுத்த வரையில்; பாட்மின்டன், டென்னிஸ், கிரிக்கெட் போன்றவொருவகை விளையாட்டு. மனக்குடிசை வாசிகளைப் பொறுத்த வரையில்: கானல் நீர்மேலெழுத்து; ஊமை கண்ட சுகப்பனவு. எண்ணெயுந் தண்ணீரும் கலந்தாலுங் கலக்கலாம்; பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டினாலும் ஒட்டலாம்; சுசீலா வும் நானும் சேர முடியுமா? ஏழையைத் தொடர்ந்து வறுமைப் பெட்டிக்குள் இதயத்தை வைத்துப் பூட்டும் பரம்பரையிற் பிறந்த அவளா, காதலின் மகத்துவத்தை உணரப் போகிறாள்?" என்று மனம் வெதும்பினேன்.

பொன்னுக்கும் மேலான மதிப்புடைய பிறந்த மண்ணை வாழ்நாளிலே என்றென்றும் மதிப்பில்லை யென்று சபதம் பூண்டேன். ஒருவருமறியாமல் ஊரை விட்டுக் கிளம்பினேன்...

எதிலும் பற்றற்ற விரக்தி மனப்பான்மையுடன் பறக்கும் பட்சி இருக்கும் கொம்பறியாதென்ற விதத்தில் ஊநக்கூர் சுற்றியலைந்து திரிந்தேன்.

சில நாட்களின் பின்—

சுந்தராபுரிப் பட்டினத்தில் தங்கினேன். தண்ணீருக்குப் பதிலாகப் 'பினேண்டீ' கிடைத்ததுபோல கம்பெனியொன்றில் ஒரு சிறு வேலை கிடைத்தது.

மூன்று வருடங்கள் அந்தக் கம்பெனியிலே நேர்மையுடன் ஒழுங்காக வேலை செய்தேன். எனது மதிநுட்பத்தினாலும் தொழிற் திறமையினாலும் சிப்பந்தி, குமாஸ்தா, மனேஜர் என்கிற மூன்று பதவிகளையும் வகித்தேன். நான் மனேஜராகவிருந்த ஒரு வருடகாலத்திலும் கம்பெனிக்கு நல்ல லாபம் கிடைத்தது.

சுகமும் துக்கமும் நிலையில்லாதனதானே! காலச் சக்கரஞ் சுழன்றது. என்னுடைய நேர்மை, திறமை, உழைப்புகளை மெச்சிய கம்பெனி முதலாளி முத்துச் செல்வர் கம்பெனிக்குக் கிடைத்த அதிக ஆதாயத்திலே எனக்கு மொரு பங்காக ஆயிரத்தைஞ்ஞூறு ரூபா பரிசளித்தார். சம்பளப் பணத்தில் செலவு போக மீதப்படுத்தி வைத்திருந்த பணம் ஆயிரம் ரூபாவும் கைவசமிருந்தது.

பண வசதியைக் கண்டதும் பயிற்றப்பட்ட ஆசிரியராக வேண்டுமென்ற என் இலட்சியம் மீண்டும் மனவரங்கில் தோன்றிப் பளிச்சிட்டது.

கம்பெனி முதலாளி முத்துச் செல்வர், பணமும்-பண்பும் கல்வியும்-அறிவும் அநுபவமும் மிக்க மனவளர்ச்சியடைந்த சிறந்த மனிதர். அவரிடம் எனது இலட்சியத்தை எடுத்துக் கூறினேன்.

அவர் மனமகிழ்ச்சியுடன் விடைதந்தார். கையிலுள்ள பணம் போக, பயிற்சி முடிந்து வெளியேறும் வரைக்கும் வரக்கூடிய மிகுதிச் செலவையும் கடனாகத் தந்து உதவிபுரிவதாகவும் பொறுப்பேற்று உற்சாகமளித்தார்.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து கண்ணுங் கருத்துமாகப் பயிற்சிபெற்று வெளியேறினேன். சுந்தராபுரியிலுள்ள 'கலைமகள்' பாடசாலையிலே ஒரு உதவி ஆசிரியர் வேலையும் கிடைத்தது.

இலட்சிய வீரனாக நிரந்தரமான வேலையும் கிடைத்து நிம்மதியுடன் வாழ்க்கை வண்டியையோட்டிக்கொண்டிருந்தேன்.

சொந்த ஊரைத் துறந்து சென்ற காலத்திற்கு ஊர்பற்றிய தகவல்களை அறியவுமில்லை; அறிய விரும்பவுமில்லை. ஊரைப்பற்றிய விசேஷங்களை நானறிய விரும்பாததைப்போலவே, என்னைப்பற்றிய விபரங்களையும் எனது ஊரவர்கள் யாரும் அறிந்துகொள்ள முடியாதவண்ணம் சர்வஜாக்கிரதையாக நடந்துகொண்டேன்...

அப்பொழுதுதான்—

அந்தக் கடிதம் வந்து மீண்டும் மருதமடுவுக்குப் போகும்படி உத்தரவுபோட்டது. போகாமல் இருந்துவிடலாந்தான். தலைமையாசிரியர் பதவி?

போனால்—.

எனக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு வேறொருவனின் உடைமையாக வாழும் அந்த ஏமாற்றுக்காரி சுசீலாவைச் சந்தித்து தென்றல் தவழும் வாழ்க்கையில் வலிதில் புயலைக் கிளப்பிச் சங்கடப்பட வேண்டும்.

ஒரு வாரகால ஓய்வொழிவில்லாத மனச் சச்சரவுக்குப் பின் மருதமடுவுக்குப் போவதென்று முடிவுக்கு வந்தேன்.

எந்த ஊருக்கு என் வாழ்நாளில் போவதில்லையென்று சபதம் செய்திருந்தேனோ—அந்த ஊருக்கு—என் சொந்த ஊருக்கு—போனேன். ஏழு வருடங்களுக்குப் பிறகு: அன்று, பிறந்த மண்ணை மிதித்ததும் உள்ளம் உவகைப் பெருக்கால் துள்ளிக் குதித்தது.

பிறந்த ஊரில் எந்தச் சுகத்தையுமே நான் அடைந்ததில்லை. எடுத்த காரியம் எல்லாவற்றிலும் தோல்வியே கண்டேன். அப்படியிருந்தும் அந்த மண்ணை மிதித்தவுடன் கற்பனைக்கெட்டாத பெருமகிழ்ச்சி கரைபுரண்டெழுக் காரணம்?

வறுமையுடன் வேலையற்ற வனாக—அனாதையாக—வாடிய காலத்தில் நையாண்டி செய்தவர்கள் கூட அன்புடன் வரவேற்று மனமகிழ்ந்தனர்; ஆச்சரியமடைந்தனர்; பாராட்டிப் பேசினர்.

யார் யார் புகழ்ந்தாலும் வரவேற்றாலும் அவைகளைவிட சுசீலாவைப்பற்றியறிய வேண்டுமென்ற அவாதான் எனக்கு மேலோங்கி நின்றது.

"நீர் இங்கிருந்து போன இரண்டொரு தினங்களுக்குள் சுசீலாவுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. சில நாட்களுக்குப் பின் சுகமாகியது. திரும்பவும் பைத்தியக் குணம் வந்தது...சுகமாகியது. டாக்டர்மார் 'ஹிஸ்டீரியா'வென்றும் திருமணம் செய்தால் சிலபோது சுகமாகக்கூடுமென்றும் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

ஆனால்...பைத்தியக்காரியைத் திருமணம்புரிய எந்த இளைஞனும் துணிந்து முன்வரவில்லை. சுசீலா திருமணமென்ற பேச்சையே எடுக்க வேண்டாமென்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள். மங்களநாதர் மகளின் பிடிவாதத்துக்கு விட்டுக்கொடுக்கூடியவரா? அறம்புறமாகச் சீதனத் தொகையை ஏற்றிப் பார்த்தார்! அப்பொழுதுங்கூட பயன் கிட்டவில்லை.

"பணத்தை மட்டும் திருமணம் செய்யக்கூடிய மாப்பிள்ளைகள் யாருமே கிட்டவில்லை. அப்பொழுதும் மங்களநாதர் சோர்ந்துவிடவில்லை. ஆங்கில வைத்தியமும் சுதேச வைத்தியமும் மந்திர சிகிச்சைகளும் செய்வித்துப் பார்த்தார்...அதன் பயனாக சுசீலா ஓயாத நோயாளியாக மாறிவிட்டாள்...மங்களநாதருக்கும் மகளின்மேல் மனக்கசப்பேற்பட்டுவிட்டது...பிற்பாடு, அவள் பாரிசவாத நோயால் பீடிக்கப்பட்டாள். தற்பொழுது படுக்கையிற்றான் கிடக்கிறாள். இடுப்புக்கு முற்றாக வழங்கமாட்டாது. நோயின் தன்மையினால் நாவும் திமிர்த்த காரணத்தினால் பேசும் சக்தியை

(12-ம் பக்கம் பார்க்க)

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுண், பாவாடை, கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்!

குண்டன்மால்ஸ்

26, கெய்ஸர் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கஷ்டப்பட்டால் நாள் ஒன்றுக்கு 2 ரூபா கிடைக்கும்

## போதாது - ஆனாலும் இதனால்தான் எங்கள் வாழ்க்கை ஓடுகிறது

## கிடுகு பின்னும் பெண் தொழிலாளி பேட்டி

[ பேட்டி கண்டவர்: "மாலதி" ]



ஒரு கிடுகு இழைக்கக் கூலி ஒன்றரைச் சதம் தருகிறார்கள்.

அந்த வீட்டையண்மியதும் எனது நடை தளர்ந்தது. காரணம்? படலை ஓரமாகக் குவிந்து கிடந்த ஊறவைத்த ஓலைகளும், பெருந் தலை மட்டைகளால் பாரமேற்றப்பட்ட கிடுகுக் குவியிலும் தான். உள்ளே நோக்கினேன். ஒரு பெண் கிடுகு பின்னிக்கொண்டிருந்தாள்.

மட்டு நகருக்கு அயல் கிராமம் "ஊரணி". அங்கு தான் அவர் வசிக்கிறார். பெயர் மு. அழகம்மா. ஓர் விதவைப் பெண். கணவன் இறந்து பதிநான்கு வருடங்களாகின்றன. நான்கு பிள்ளைகளுக்குத் தாய் அவர். இத்தனை வருடங்களாக குடும்பத்தைக் காப்பாற்றிய பெருமை கிடுகுபின்னும் அந்தத் தொழிலையே சாரும். ஆபாம் பெருமைபபட வேண்டிய விஷயம் தானே.

இதோ கிடுகு பின்னிக்கொண்டே அழகம்மா பேசுகிறார் கேளுங்கள்.

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?... வாய் பேசிக்கொண்டிருந்தாலும் கை காரியத்திலே கண்ணாயிருக்கிறதே என்றா? எங்களுக்குப் பழக்கம் அது. நான் ஒரு நாளைக்கு முப்பது தொடக்கம் ஐம்பது கிடுகு வரை பின்னுகிறேன். இடையிடையே வீட்டு வேலைகளும் செய்ய வேண்டியிருக்கிறதே. நானும் பிள்ளைகளும் பின்னினோமானால் நூறு தொடக்கம் நூற்றைமபது கிடுகு வரை இழைத்து முடிப்போம். இரண்டு பாதி மட்டைகள் சேர்ந்தது தான் ஒரு கிடுகு என்பது உங்களுக்குத் தெரியாதா? இப்போது நூறு கிடுகுகளின் விலை சுமார் இருபது ரூபாய் தொடக்கம், இருபத்தைந்து வரை செல்கிறது.

"ஓ! அப்படியென்றால் உங்கள் பாடு கொண்டாட்டம் தான். நூறு கிடுகு இழைத்தாலே போதுமே!' என்று வாயிலே கையை வைக்கிறீர்களா?... நான் சொல்வதை நீங்கள் நம்புவீர்களோ என்னவோ! நூறு கிடுகுகளுக்கு நாங்கள் பெறுவது ஒன்றரை அல்லது இரண்டு ரூபாய் தான்.

"இங்கேகிடுகுவிற்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தோட்டங்களில் முற்பணம் கொடுத்து பழுத்த மட்டைகளைப் பெறுகிறார்கள். நூறு

> **வாசகர்களுக்கு**
>
> சிறு தொழில்செய்து வயிறு வளர்க்கும் கிராமவாசிகள் நாட்டின் பொருள் வளம் பெருக்கும் பெருந்தகையாளர்களும் ஆவர். அவர்களைப் பேட்டி கண்டு விவரங்களைப் பிரசுரிப்பதில் சுதந்திரனுக்கு மிக்க மகிழ்ச்சி.
>
> மட்டக்களப்பு பேட்டிகள் இதுவரை வெளியிடப்பட்டன. இதர பாகங்களிலிருந்தும் வாசக நேயர்கள் புகைப்படம் சகிதம் எடுத்து அனுப்பும் பேட்டி விவரங்கள் வரவேற்கப்படும். தகுதியானவை பிரசுரிக்கப்படும். சரி வாசகநேயர்கள் இனி கைவரிசையைக் காட்டலாம்.
>
> —ஆசிரியர்.

மட்டைகளுக்கு அவர்கள் கொடுப்பது ஐந்து ரூபாய். மாலையிலே நீரிலே போட்டு அடுத்த நாள் காலையிலே வண்டியிலேற்றி எங்களிடம் கொணர்ந்து தருவர். அதை இழைத்துக் கொடுப்பது மாத்திரம் தான் எங்களது வேலை. ஒரு மட்டை இழைக்க ஒன்றரைச் சதம் எங்களுக்குக் கூலி இழைத்து முடிந்ததும் வண்டியிலேற்றி விற்கக் கொண்டு செல்வார்கள். எல்லாச் செலவும் போக நூறு கிடுகுகளுக்கு பதினைந்து ரூபாவாவது நயம் பெறுகிறார்கள்.

"நான் எப்படிக் கஷ்டப்பட்டாலும் நாளொன்றுக்கு இரண்டு ரூபாவுக்கு மேல் உழைக்க முடிவதேயில்லை. ஒரு குடும்பத்துக்கு இது போதுமா? ஆனாலும் எங்களது வாழ்க்கை இதனாலே தான் ஓடுகிறது. அன்றாட ஜீவனம் எப்படியோ கழிகிறது.



வாய் பேசிக் கொண்டிருந்தாலும் கை காரியத்திலே கண்ணாகத்தான் இருக்கும்.

"நாமே முதல் போட்டு இழைத்து விற்பதனால் நல்ல நயமுள்ள தொழில் இது. என்ன செய்யலாம். கையில் இல்லையே!"

"கிடுகு இழைப்போருக்கு இங்கு சங்கம் ஏதாவது இல்லையா? கைத்தொழில் என்ற வகையிலே அரசாங்கத்தில் கடன் பெறலாமே!" என்று நான் குறுக்கிட்டேன்.

"அதைப் பற்றிக் கவனிக்கவே ஆட்களில்லையே! சங்கத்தை எப்படி ஆக்குவது என்பது கூட எங்களுக்குத் தெரியாது. அதை முன்னின்று நடத்துபவர்களும் இல்லை. அப்படி நடத்த யாராவது முன்வந்தாலும் ஒற்றுமையாக உழைக்க ஆட்களில்லை. சங்கமூலம் கடனெடுத்தால் நாங்களும் மட்டை வாங்கி இழைக்கலாம். அப்படி நாங்கள் தொடங்கினால் இப்போது வியாபாரம் செய்பவர்களுக்கு நயம் குறைந்து விடுமே!"

"ஆமாம். அதை எண்ணிப் பார்த்துத் தான் சும்மா [illegible] கிடுகு இவ்வளவு [illegible] ஓலை வேய்வதைப் பார்க்கிலும் ஓடு போட்டு விடுவது இலகு போலிருக்கிறதல்லவா?"

"ஓடு மாத்திரமா? எல்லாம் விலையாகத் தானே இருக்கின்றன. 'அன்னம் ஒறுத்தால் ஐந்தும் ஒறுக்குமாம்'. அதையும் விட 'லொறி'களிலேற்றி வேறிடங்களுக்கெல்லாம் கொண்டு செல்கிறார்கள். அதனால் கிடுகுத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. அதுவும் மழை காலம் வந்தால் விலை விஷம்போல ஏறிவிடும். வீடு ஒழுகுவதைப் பற்றி வெயிற் காலத்தில் எவருமே கவனிப்பதில்லை. மழை பெய்த பிறகுதான் அவர்களுக்கு விழிப்பு வரும். கிடுகு விலை ஏறாமல் என்ன செய்யும்? நாலைந்து தடவைகள் கிடுகு வேயும் பணத்தை ஒன்று சேர்த்தால் ஓடு போட்டு விடலாம்தான். அது எல்லோருக்கும் சாத்தியமாகுமா? ஓட்டு வீட்டிலே வசிப்பதை விட ஓலை வீடுதான் சுகத்துக்கு நல்லதென்று சொல்லுகிறார்கள். கோடை காலத்தில் ஓட்டு வீடு ஒரே புழுக்கமாயிருக்கும். அந்தக் காலத்திலே களிமண்ணால் சுவர் வைத்த ஓலை வீடொன்றிலே நீங்கள் இருந்து பார்த்தால் தான் இது தெரியும்."

"ஊறணிக் கிடுகுகள் நல்லவையல்ல என்று கூறுகிறார்களே! காரணமென்ன?"

"ஏன் நல்லவையில்லையாம்? இப்போது இங்கே மட்டை எடுக்கவே முடியாதே! தோட்டங்களிருந்து எடுக்கும் மட்டைகள் சிறியனவாகத்தானிருக்கும். ஏனென்றால் தென்னைகள் முதிர்ந்த மரங்களல்லவா? இளங்கன்று மட்டைகள் பெரிதாகவேயிருக்கும். அதனால் கூடாதென்று சொல்லிவிடமுடியுமா? ஏன் பொய்யைச் சொல்ல. பெரிய மட்டைகளாயிருந்தால் வாங்குபவர்களுக்கு நயம். நூறு கட்டும் வீட்டுக்கு எழுபத்தைந்தே போதுமானது. ஆனால் கூடிய காலப் பாவிப்புக்கு முதிர்ந்த மரத்து மட்டைகள் தான் சிறந்தவை."

"இனிமேல் பிள்ளைகள் உத்தியோகத்துக்காகப் படிப்பிப்பதைக் காட்டிலும், இப்படியான கைத்தொழில்களில் ஈடுபடுத்துவது நல்லதல்லவா?"

"ஏன் அப்படி? உத்தியோகத்துக்காகப் படிப்பவர்கள் படிக்கத்தான் வேண்டும். நமது குழந்தைகள் வசிக்க வேண்டிய இடத்தை மற்றவர்கள் தட்டிக்கொண்டு போக விடலாமா? அதைப் பார்க்கிலும் பாடசாலைகளில் இப்படியான கிராமியக் கைத்தொழில்களுக்கு இடம் கொடுத்துக் கற்பிப்பதில் நன்மையுண்டு."

"நாகரிகம் முதிர்ந்துவிட்ட இந்தக் காலத்திலும் பெண்கள் எதற்கும் தயங்கி நிற்கிறார்களே; ஏன் அது?

"ஆமாம். அது தமிழ்ப் பெண்களின் அணிகலன் ஆனாலும் அளவுக்கு மிஞ்சிப் போகக்கூடாதல்லவா?"

"அதிலேஇன்னொன்றுமிருக்கிறது. சில பணக்கார வீட்டுப் பாட்டிகளும் பணம் தேடக் கிடுகு இழைத்து விற்கிறார்கள். அதை அவர்கள் வெளியில் சொல்ல வெட்கப்படுவார்கள். ஏன்? கௌரவம் காற்றில் பறந்து விடுமாம். அவர்கள் பணம் தேடச் செய்கிறார்கள். நாங்கள் ஜீவனத்துக்காகச் செய்கிறோம். அதுதான் வித்தியாசம்."

"ஓ! என்னுடன் பேசிக்கொண்டே கிடுகை இழைத்து முடித்து விட்டீர்களே! இந்த விபரங்களையெல்லாம் சொன்னதற்காக அனேக நன்றிகள்...."

"பத்திரிகைக் காரர்களெல்லாம் பெரிய கைகளைத்தான் பேட்டி காண்பார்களாம். நீங்கள் அதற்கு எதிர்மாறாக இருக்கிறீர்கள். அதற்காக நன்றி கூற வேண்டியவள் நான்தான்."



ஓலை மட்டையைப் பிளக்க வேண்டியதும் ஒரு முக்கிய வேலை

## பலே ஐக்கிய . . .

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

துவம் தமிழர்களுக்கோ, முஸ்லிம்களுக்கோ அல்ல. பிரதிநிதித்துவம் "சிங்களம் மாத்திரம்" தான். (சபையில் ஆரவாரம்) மனித உரிமைகள் சூறையாடப் படுவது பற்றியும் ஐக்கிய நாடுகள் சாசனம் மீறப் படுவது பற்றியும் கரகோஷம் செய்கிறார்கள் எனது நண்பர்கள்!

இதுதான் ஐக்கிய தேசிய கட்சி!

—(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்டல் நடிப்பில் மீண்டும் எம். ஆர். ராதா

## பட்டணத்தார் படத்தில் கிட்டணத்தாராக வருவார்?

நடிகவேள் எம். ஆர். ராதா பட்டணத்தாருக்குப் போட்டியாக கிட்டணத்தாராக நடிப்பார் என்று ஒரு செய்தி வருகிறது!

ஜே. ஆர். புரொடக்ஷன்ஸார் 'பட்டணத்தார்' என்ற படத்தைத் தயாரித்து வருகிறார்கள் அல்லவா?

அந்தப் படத்தில் பட்டணத்தார் குணம், ஒழுக்கம், வாய்மை ஆகியவைகளுக்கு நேர் எதிரிபோன்ற ஒரு பாகத்தில் (கிட்டணத்தார்) நடிகவேள் ராதா நடிக்க இருக்கிறார் என்று தெரிய வருகிறது.

பட்டணத்தாராக பிரபல பின்னணிப் பாடகர் டி. எம். சௌந்திரராஜன் சிறப்பாகப் பாடி நடித்து வருகிறார் என்ற செய்தி தெரிந்ததே!

பட்டணத்தடிகளின் பாடல்களையும் வாழ்க்கைச் சுவைப் பகுதிகளையும் கொண்ட இந்தக் கதையை இசை அமைப்பாளர் ஜி. இராமநாதன் தயாரித்து வருகிறார்.


உங்கள் நீடித்த எழிலுக்கு

'எலைட்'

சுப்பர்லோன் ஜோர்ஜட்

என்னும் அழகின் அணிகலனை அணியுங்கள்.

பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.

இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது

'எலைட்'

சுப்பர்லோன் ஜோர்ஜட்

அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.

குண்டன்மால்ஸ், லிமிட்டெட், கொழும்பு.


# தமிழரசு....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு மகஜர்கள் சமர்ப்பித்துள்ளனர்.

சிங்களத் தொழிலாளர்கள் கொடுக்கும் தொல்லையால் மேற்படி குடியேற்றத் திட்டத்தில் தொடர்ந்து தங்களால் வசிக்க முடியாமல் இருப்பதாகவும் தமிழ் பேசும் மக்கள் வதியும் மூள்ளிப் பொத்தானைப் பகுதியில் தங்களுக்கு இடம் ஒதுக்கித் தருமாறும் பிரஸ்தாப குடியேற்றவாசிகள் கேட்டிருப்பதாகத் தெரிகின்றது.

பிரஸ்தாப குடியேற்றத் திட்டத்தில் வதியும் இளம் விதவை ஒருவருடைய குடியேற்ற வீட்டை மேற்படி தொழிலாளர்கள் பலவந்தமாக நான்குமுறை ஆக்கிரமித்துக்கொண்டதாகவும் ஒருமுறை திருமலை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தும் மற்ற மூன்று முறைகளிலும் பொலீஸாரின் ஒத்தாசையுடனும் அவர்களை அப்புடிப்படுத்த நேர்ந்ததென்றும் அறியப்படுகின்றது.




படம்: பாகப் பிரிவினை

## பாகப் பிரிவினை கலைஞர்களுக்கு பாராட்டு

பாகப் பிரிவினைப் படத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் நடிகவேள் எம். ஆர். ராதாவும் சேர்ந்து நடித்திருப்பதும் இப்படத்துக்கு இந்தியக் குடியரசுத் தலைவரால் வெள்ளிப் பதக்கம் பரிசளிக்கப் பட்டது என்பதும் தெரிந்ததே.

இந்த வெற்றிப் படத்தில் சம்பந்தப்பட்ட கலைஞர்கள் எல்லோரையும் பாராட்டுமுகமாக அண்மையில் சென்னையில் ஒரு விழா நடந்தது. அமைச்சர் திருமதி லூர்த்தம்மாள் தலைமை தாங்கினார். எல்லாக் கலைஞர்களுக்கும் அங்கவஸ்திரம் பரிசளிக்கப்பட்டது

"பாகப் பிரிவினை" படம் சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் தியேட்டர்களில் விரைவில் காட்டப்படவிருக்கிறது.

# அந்தக் காரணம்!

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

இழந்துவிட்டாள். தன் தேவைகளை எழுத்தில்தான் எழுதிக் காட்டுகிறாள்.

ஒரு மாதமாக டாக்டர்களெல்லோரும் கைவிட்டு விட்டனர். இன்றைக்கோ—நாளைக்கோ, இப்பொழுதோ-சற்று நேரம் சென்றோ உயிர் பிரியுமென்று சொல்ல முடியாத நிலையிற் கிடக்கிறாள். உயிர் பிரியு முன்பு உம்மை ஒருதடவை பார்க்க வேண்டுமென்கிற ஒரேயொரு ஆசைதான் தனக்குண்டென்று தாய் தந்தை பந்து மித்திரர்களுக்குச் சொன்னதாகக் கேள்விப்பட்டோம். ஆனால், மங்களநாதர் தன் மகளின் கடைசி ஆசையை அனுமதிக்கவில்லையென்றும், அந்த விசயத்தையே வெளியில் வராமல் முளையிலேயே கிள்ளியெறிந்துவிட்டதாகவும் கதை அடிபடுகிறது.

"இலவேளை! தற்பொழுது நீர் அந்தஸ்தில் ஓரளவு உயர்ந்திருப்பதாலும், இங்கு வந்திருப்பதாலும் சுசீலாவின் கடைசி ஆசையை அநுமதித்து நிறைவேற்றுகிறாரோ-என்னவோ எப்படிச் சொல்ல முடியும்? எப்படியாவது தெண்டித்து நீர் ஒரு முறை சுசிலாவைப் போய்ப் பார்ப்பதுதான் நல்லது."

—இவ்வாறு, சுசிலாவைப் பற்றி பலர் சொன்னார்கள். சுசிலாவைப்பற்றி நான் கற்பனை பண்ணி வைத்திருந்தது வேறு! அவள் இருக்கும் உண்மை நிலை வேறு. அவள் பரிதாபகரமான நிலையில் மரணவஸ்தையில் கிடக்கிறாளென்பதைக் கேள்வியுற்றதும் தீயில் விழுந்த புழுப்போல என் மனம் துடிதுடித்தது. அவளைப் பார்க்க வேண்டுமென்கிற ஆவல் அதிகரித்தது. ஆனால் மங்களநாதர்?

மறுநாள்: நான் மருதமடுவுக்குப் போயிருப்பதைக் கேள்விப்பட்ட சுசிலா என்னை நிச்சயமாகச் சந்திக்க வேண்டுமென்று பெற்றோரை மிக மிகக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதாகவும், மங்களநாதரும் அரை மனதுடன் சம்மதித்ததாகவும் அறிந்தேன்.

மூன்றாவது நாள்! வீட்டுக்கு வரும்படி மங்களநா[illegible]தார்...போனேன். என்னைக் கண்டதும் எல்லோரும் அழுதனர்.

சுசிலாவின் பக்கலிற் சென்று உட்கார்ந்தேன். என்னைக் கண்ட சுசிலா தேம்பித் தேம்பி அழுதாள். வளங்காத கையை வளங்கும் கையால் நெஞ்சில் தூக்கி வைத்து, அந்தக்கையுடன் வளங்கும் கையைப் பொருத்தி வணங்கினாள்... எங்கிருந்தோ வந்ததுபோல் அவளுடைய வதனத்தில் ஒரு புத்தொளி படர்ந்தது... சுமார் அரைமணி நேரம் வரையில் இருந்தேன்,

ஆட்கள் விலகிய நேரம் பார்த்து என் கையால் தண்ணீர் தரும்படி சைகை செய்தாள். பக்கத்திலிருந்த தண்ணீரில் இரண்டுகரண்டி பருக்கினேன். அன்புடன் என்னைத் தடவினாள் ... முத்தமிடும்படி வேண்டினாள்!

எங்கள் காதல் வாழ்க்கையில் சுசிலா என்னைத் தீண்டியதும், நானவளைத் தொட்டதும் முத்தமிட்டதும் அதுவே முதற் தடவையும் கடைசித் தடவையுமாகும். தலையணைக்குக் கீழிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துத் தந்து மறைத்து வைக்கும்படி சைகை செய்தாள். இவ்வளவும் நடந்தேறிய சில நிமிஷங்களில் மீண்டும் ஆட்கள் கூடிவிட்டனர்...பச்சைக் குழந்தை தாயின் முகத்தைப் பார்ப்பதுபோல் வாஞ்சையுடன் என்னைப் பார்த்துக் கொண்டே கிடந்தாள், சுசிலா.

செம்பாட்டு மண்ணில் முற்றி விளைந்த இராசவள்ளிக் கிழங்கு போற் கொழுகொழு வென்றிருந்த அவளின் சிவந்த பட்டு மேனி திப்பட்ட மாந்தளிராகக் கருகி வாடியிருந்தது. ஆப்பிளைப் பழிக்கும் அழகுக் கண்ணங்களிரண்டும் கருவாடு போற் சுருங்கிக் காய்ந்து தோற்றமளித்தன. கதை பேசும் கயல் விழிகள் குழி விழுந்து விகாரமாயிருந்தன. குமுதமலர் போன்ற வாய் நோயின் தன்மையினால் ஒரு பக்கம் கோணலாக இழுபட்டும், அன்றலர்ந்த ரோஜா இதழ்களுக்குச் சவால் விடும் அதரங்கள் காய்ந்து வெடித்தும், முத்துச் சரத்தையும் முல்லை அரும்பையும் தோற்கடிக்கும் மோகனப் பற்கள் நீலம் பாரித்தும் காணப்பட்டன.

## சண்முகம் என்றால் எனக்கு பயம்

ஏ பி நாகராஜன் சொன்னது

சென்னை ராஜ்ய சங்கீத நாடக அகடாமியினர் அண்மையில் நாடக, சினிமா, நடிகர் நடிகைகளை, டைரக்டர்களைத் தேர்ந்தெடுத்து, கௌரவித்து, பரிசளித்தார்கள் அல்லவா?

அப்போது பரிசு பெற்ற டி. கே. சண்முகத்தைப் பாராட்டிப் பேசுகையில் திரைக்கதை வசனகர்த்தா ஏ. பி நாகராஜன் "ஔவை சண்முகத்தைக் கண்டால் எனக்கு ஒரே பயம்" என்று கூறினார்.

அவர் மேலும் இது பற்றி விவரிக்கையில், "டி. கே. சண்முகம் அவர்களின் நாடகக் கம்பெனியில் நான் இருக்கும்பொழுது நடிப்பு இன்னதென்று கற்றுக் கொடுத்ததுமின்றி நான் இவ்வளவுக்குப் புகழ் பெறுவதற்கான வழிகளைச் சொல்லிக்கொடுத்த ஆசான் ஔவை சண்முகம் அவர்கள் தான். மேலும் நாடகங்களில் சண்முகம் அவர்களுக்குக் கதாநாயகியாக நான் தான் பெண் வேடம் தாங்கி நடிப்பது வழக்கம். (சிரிப்பு) அவருக்கு மனைவியாகப் பயந்து, பயந்து நடித்து இன்றும் அவரைக் கண்டால் அந்தப் பயம் தீரவில்லை" என்று கூறினார்.

சுருக்கமாகச் சொல்வதானால் 'புற அழகின் முடிவே இதுதான்' என்பதை சுசீலா என்கிற அந்தப் பெண்ணுருவம் கூறாமற் கூறிற்று...

பக்கத்தில் இருக்க இருக்க மன வேதனை அத்துமீறிச் சென்றதினால் விடை பெற்றுக் கொண்டு பாடசாலைக்குச் சென்றேன்.


பாடசாலையில் அறைக் கதவைப் பூட்டிவிட்டு தனிமையில் கடிதத்தைப் பார்வையிட்டேன்.

ஆருயிர்க் காதலர்

அன்பழகன் அவர்களுக்கு!

நமது காதல் உண்மையானது. மகா சக்திவாய்ந்தது.

(13-ம் பக்கம் பார்க்க)

திறமாக நீர்ப்பாய்ச்சுவதற்குகந்த நம்பிக்கைவாய்ந்த பம்ப்.

விங்கெட்

நிர்மாண இயந்திரங்கள் உற்பத்திசெய்யும் உலகப்பிரசித்திபெற்ற மேஸ்லேர்ஸ் விங்கெட் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட இந்த அடக்கமான, உறுதிவாய்ந்த தண்ணீர் பம்ப்கள், அநேககாலம் மிகத்திறமான சேவையைத் தருகின்றன.

இவற்றின் பராமரிப்புச் செலவு மிக மிகக் குறைவு, மிகப் போட்டா போட்டி விலைகளில் கிடைக்கும். வில்லியர்ஸ் 4 ஸ்ரோக் பெற்றோல்/மண்ணெண்ணெய் என்ஜின்கள் பாவனைக்கு சிக்கனமானவை. எம்மிடம் அவற்றில் பலரக உடக்குப்புகள் உள்ளன. ஹோஸ் குழாய்களும், கை உருளைகளும் கிடைக்கும்.

உப விநியோகஸ்தர்கள்:

ராஜரத்னம் அன் கம்பெனி,
244, கே. கே. எஸ். ரோடு,
யாழ்ப்பாணம்.

முழு விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்:

கொழும்பு கொமர்ஷியல் கம்பெனி லிமிட்

(பெரிய பிரித்தானியாவில் [illegible] பட்டது. அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

தபாற்பெட்டி 88, கொழும்பு

வாட் அறை: ஜெனரல் லேக்ஸ்ரோட்

போன்: 7861.

**உயர்ந்த சேவை**

$1\frac{1}{2}$" மொடல்-மணித்தியாலம் 1500-6000 கலன் இறைக்கிறது.

2" மொடல்-மணித்தியாலம் 1680-11000 கலன் இறைக்கிறது.

3" மொடல்-மணித்தியாலம் 4800-16800 கலன் இறைக்கிறது.

டிலிவரிக்கேற்ப ஹெட் இன், சக்ஷன் லிவ்ட்டும் தேவையாகக் கூடுதல் முழு ஹெட் 70 அடி.

ஆகக் கூடுதல் சக்ஷன் லிவ்ட் 25 அடி.

எமது பிரதிநிதியை விசாரியுங்கள்:
எம். பூபாலசிங்கம்,
244, கே. கே. எஸ். [illegible]
யாழ்ப்பாணம். போன்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அந்தக் காரணம்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தச் சக்தி எனது உயிர் போகுமுன்பு உங்களையும் மென்னையும் சந்திக்க வைக்குமென்று உறுதியாக நம்பினேன், என் நம்பிக்கை வீண் போகவில்லை. தங்களைக் கண்டுவிட்டேன். இனி மேல் எனது ஆத்மா நிச்சயமாக சாந்தியடையும்!

நீங்கள் வந்திருப்பதைக் கேள்விப்பட்டுத்தான் இரவோடிரவாக இந்தக் கடிதத்தைத் மிகுந்த சிரமப்பட்டு எழுதினேன்.

அன்பின் பிறப்பிடமே!

எனக்குப் பைத்தியம் பிடித்திருந்ததாகக் கேள்விப்பட்டிருப்பீர்கள்! ஊரவர்களும் உற்ருரும் பெற்ருரும் அப்படித்தான் இன்றுவரை நினைத்திருக்கிருர்கள். ஆனல் உண்மையை உங்களுக்கு உணர்த்த விரும்பித்தான். இந்த மடலை வரைகிறேன்.

உள்ளத்தை உங்களுக்கு அர்ப்பணித்த நான் உடலை வேருெருவருக்குக் கையளித்து நம் தமிழ்ப் பண்புக்கு இழுக்குண்டாக்க விரும்பவில்லை. வாழ்ந்தால் உங்களுக்கு இல்லாளாக வாழ்வது—அன்றேல் கன்னியாக வாழ்ந்து கன்னியாக இறப்பதுதான் எனது தளராத உறுதி.

அதற்காக—

எனக்கு ஆயத்தம் செய்யப்பட்ட திருமணங்களைத் தட்டிக் கழிப்பதற்காகத்தான் மூன்று வருடங்களாக அவ்வப்பொழுது பைத்தியகாரியாக நடித்தேன். என்றைக்காவது நீங்கள் திரும்பி வருவீர்கள். நம் வாழ்வு மறுமலர்ச்சி பெறுமென்ற நம்பிக்கைதான் என்னைப் பைத்தியமாக நடிக்க வைத்தது. எனது நடிப்புக்கு ஆரம்பத்திலிருந்தே ஒரு லேடி டாக்டரம்மா மிக மிக ஒத்துழைப்புத் தந்தார். எப்படி நடித்தும் பயன்கிட்டவில்லை.

'இறந்த துக்கத்திற்கு எல்லையுண்டு; பிரிந்த துக்கத்திற்கு எல்லையில்லைத்தானே!'

மூன்று வருடங்களாக எதிர்பார்த்தும் தங்கள் முடிவு எதுவும் தெரியாமல் ஏமாற்றமடைந்தேன். மனம் விரக்தியுற்றது கவலை குடிகொண்டது. ஓயாத கவலையினுல் உடம்பு உப்பிட்ட மண்பாண்டமாகி தீராத நோயும் பிடித்தது இனிமேல் நான் உயிர் வாழ மாட்டேனென்பது நிச்சயம்.

நீங்கள் உங்கள் மனதுக்கேற்றவொரு மங்கையை மணந்து சேமமே வாழுங்கள்! தொழில் வளம் பெருகி, பொருளாதாரச் சமத்துவம் ஏற்பட்டு, எல்லாவற்றிற்கும், மேலாக மனித மனம் வளர்ச்சி பெற்ருல்தான் நம் நாட்டில் மெய்க் காதல் வாழும். தங்களுக்கேதும் குற்றம் புரிந்திருப்பின் மனப்பூர்வமாக மன்னித்துக் கொள்ளுங்கள். அடியாளின் இறுதி வணக்கங்கள்.

இவ்வண்ணம்
அன்புக் காதலி,
சுசிலா.

கடிதத்தை எத்தனை தடவைகள் படித்தேனென்பது தெரியாது...

சில தினங்களுக்குள்—

சுசீலா வென்கிற மாதர்குல மாணிக்கம் மங்கி மறைந்து விட்டது. வெளியழகு சிதைந்து ஊனக் கண்களுக்கு மறைந்துவிட்ட அந்தப் பெண் குலத்துப் பொன் விளக்கின் அக அழகு மாத்திரம், என் அகக் கண்ணிலே என்றும மறையாத ஓவியமாகக் காட்சி தருகின்றது.

என் காதல் ஜோதி சுசீலாவின் நிரந்தர மறைவுடன் திருமணம் என்ற எண்ணமும் மறைந்து விட்டது. நான் பிரம்மச் சரிய வாழ்க்கை நடதுவதற்குக் காரணம் இதுதான் நண்பரே!

## 'செந்தமிழ் நாடு'

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

படைத்தொழில் என்பன சீனம் முதல் யவனம் வரை செழித்து வளர்ந்தது ஆம்! இன்று ஏன் நமக்கு இந்த நிலை? நமது ஈழகம் சிங்களரின் தாயகமாக எப்படி மாறியது? இதற்கெல்லாம் காரணம் நமது நாட்டுப் பற்றின்மையே! எனவே வருங்கால மாணவர்களே! துடித்தெழுங்கள் நாடு காப்போம். பாரதியின் பட்டொலியே எமது பன்னுகப்—போர்ப் பரணியாக ஒலிக்கட்டும்! விரைந்து வாருங்கள்!

—சித்தாண்டிச்சபா.

## ஜூன் 8-ல்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று திருக்குறளைப் போற்றும் ஒவ்வொரு தமிழனுக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேம்.

சென்ற ஆண்டுகளிற் போல இவ்வாண்டும் திருவள்ளுவர் திருநாளுக்காக சிறப்பு மலர்கள் வெளியிடுமாறு தமிழ் பேசும் மக்கள் நடத்தும் எல்லாப் பத்திரிகைகளையும் வேட்டுக் கொள்கிறேம்.

திருவள்ளுவர் தொடர் ஆண்டை இப்பொழுது பலர் வழங்குகிருர்கள். எல்லோரையும் வழங்குமாறும் கேட்டுக்கொள்ளுகிறேம்.

## உத்தியோக....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றியதேன்? அவர் செய்துவந்த வேலையை வேறு ஒரு மொழிபெயர்ப்பாளர் செய்வதன் காரணம் யாது? இவற்றை எல்லாம் விசாரிக்க ஒரு விசாரணைக் குழுவைப் பிரதமர் நியமித்தால் திரு கணபதிப்பிள்ளையின் மாற்றத்துக்குக் காரணமான சூழ்ச்சிகள் யாவும் வெளிப்பட வாய்ப்புண்டாகும் என்று கருத்து நிலவுகிறது. தமிழ்ப் பகுதி முழுவதும் தகுதி வாய்ந்த ஒரு தமிழ் அதிகாரியின் கீழ்த் தனித்துத் தொழிற் பட்டாலன்றித் தமிழுக்கு வேண்டிய ஆக்க வேலைகள் செம்மையாக நடைபெரு என்றே கருதப்படுகிறது.

## வளர்மதி புதிய மருமக்கள்

2877 ச. ஜெயரத்தினம், யாழ்ப்பாணம்.

2878 சு. சிறீஸ்கந்தராசா, தெல்லிப்பழை.

2879 ஏ. பாரூக், லுணுகலை.

2880 எஸ். ஜயசூரியர், இளவாலை.

2881 சி. க. மகாத்மசீலன், சாவகச்சேரி.

2782 ந- இளங்கோவன்,

2783 இரா. க. இராமையா, நெல்லியடி. பருத்தித்துறை.

2884 எஸ் ஜி கணேசன், யாழ்ப்பாணம்.

2885 வே. குலசிங்கம், கோண்டாவில்.

2886 ம தமிழ்த்தூதன், மாச்சம்பாளையம், சுந்தரபுரம் அஞ்சல், கோவை மாவட்டம, (தமிழ்நாடு.)

2887 செல்வி மேபல் நேசராணி நவரட்னம், சிலாபம்:

2888 த. ஸ்ரீநிவாசன், ஏருவூர்.

2889 த. ஸ்ரீ மகேசன், ஏருவூர்.

2890 த. ஸ்ரீ சுந்தரேசன், ஏருவூர்.

## துவேஷப் பிராது

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பிக்கலாம்; இல்லையேல் தனக்கு இக்குற்றத்தால் ஏதேனும் விசேஷ நஷ்டங்கள் ஏற்பட்டதென ஸ்தாபிக்க வேண்டும்.

மேற் கூறிய அம்சங்கள் ஐந்தையும் ஒரு வழக்காளி நிருபித்தால் தமக்கு நேரும் நஷ்டங்கள் யாவையும் துவேஷப் பிராது நஷ்ட ஈட்டுக் குற்றமாகப் பிரதிவாதியிடம் அறவிடலாம்.

— —

## பெண் சமுதாயம்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

டிப்பார், அவற்றைப் பின்னணியாகக் கொண்டு உன் ஒவ்வொரு சமூகச் செயலும், வாழ்வும் பின்னப்படட்டும். அப்போது உன் சமுதாயம் முன்னையிலும் முன்னேறும்.

—செல்வி. ஏ. அருளம்மா ஓமந்தை.


கொழும்பில் 7-வது வாரம்!

● கூனன் நிமிர வேண்டும்!
● குருடன் பார்வை பெறவேண்டும்!
● கோழை வீரனுக வேண்டும்!

இந்தக் கொள்கை முழங்க

முருகன் (ஜிந்துப்பிட்டி) ராணி (யாழ்ப்பாணம்)

ஆகிய தியேட்டர்களில் காண்பிக்கப்படுகிறது!

நடிப்புக்கோர் திகலமெனத் திகழ்கின்ற செம்மல் நாடெங்கும் கலைத்திறந்தால் புகழ் மணக்கும் பொற்பாவையுடனே போற்றல் காட்டுகின்ற பெரு நடிகர் குழுவும் பாராட்டு பெறுகின்ற பான்மையிலே நடித்து.........தமிழ் கொழிக்கும் எழுத்தாலே தன் மானம் செழிக்கின்ற கருத்தாலே பட அமைப்பு முறை—படைப்பு முறை நனிசிறக்க மேன்மைமிகு, மேகலா தருகின்ற திரை விருந்து

சிவாஜி கணேசன்
சாவித்திரி மைனுவதி
ஓ. ஏ. கே. தேவர்
நடித்த




இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

எல்பின்ஸ்டன் ரெக்ஸி மற்றும் 4 திரைகளில்

ஏ. நாகேஸ்வரராவ்—பத்மினி—ராகினி நடிக்கும்

தெய்வமே துணை

செல்லமஹால் 8-வது வாரம்!!

சிவாஜி கணேசன்-வைஜயந்தி மாலா - சரோஜாதேவி நடிக்கும்

இரும்புத் திரை

கெயிட்டி 8-வது வாரம்! எஸ். எஸ். ராஜேந்திரன்—மைனுவதி—பிரேம்நசீர் நடிக்கும்

கல்யாணிக்குக் கல்யாணம்

றீகல் 5-வது வாரம்!! ஹெர்குலிஸ்

அ... திருமண வைபவ நிகழ்ச்சிப் படமும் காண்பிக்கப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வள்ளுவர் குரல்: 23

# அறம் பூண்டார்

"தமக்குரிய ஒழுக்கத்தில் வழுவாது பற்றுக்களை நீத்தவர் பெருமையை நூல்கள் போற்றும்' என்று கூறிய வள்ளுவர், 'அவர்கள் பெருமை அளவிடற்கரியது; அதன் அளவு, இவ்வுலகில் பிறந்திறந்தவரின் எண்ணிக்கையின் அளவாகும்' என்றும் கூறியிருப்பதைப் பார்த்தோம். அத்துடன் அமையாது, அவர் பெருமையை மேலும் பேசுவதற்கு ஆசைப் பட்டுள்ளார் அவர்.

"இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார்
பெருமைபிறங்கிற்று உலகு."

பிறப்பு இறப்பு, அறிவு அறியாமை, உயர்வு தாழ்வு, நன்மை தீமை, கல்வி கல்லாமை, பொறுமை பொருமை வாழ்க்கைக் கூறுகள் பல, இரண்டிரண்டாக அமைந்துள்ளன. வாழ்க்கையின் பலதரப்பட்ட இக்கூறுகளை எல்லாம் ஆராய்ந்து கொண்டு, இல்வாழ்க்கையிலேயே பற்றுக்களைத் துறந்து அறம் மேற்கொண்டு ஒழுகும் நீத்தாரை, 'அறம் பூண்டார்' என்று அழைக்கின்றார் வள்ளுவர்.

அறத்தையே அணியாகப் பூண்டு ஒழுகும் திறத்தினரான இவர்கள், பிறப்பு வீடு என்னும் இரண்டானது துன்ப இன்பங்களையும் ஆராய்ந்து அறிந்தவர்கள்; பற்றுக்கள் பிறவிக்குக் காலாகவும் வீட்டுக்குத் தடையாகவும் இருப்பதை உணர்ந்து, வீட்டையும் விருப்பத்தினாலே, அப்பற்றுக்களை விட்ட ஒழுக்கமுடையவர்கள். அவர்களுடைய பெருமை, நூல்களாற், சிறப்பித்துப் போற்றப்படும் பெற்றி வாய்ந்தது; அளவிடற்கரியது; இந்த உலகத்திலேயே பிறங்கிய—உயர்ந்த—பெருமையே அது தான்.

—பா. ஆறுமுகம்

# எது வீரம்?

ஒரு நாள் வீரன், வேலன் என்னுமிருவர் வேட்டைக்குப் புறப்பட்டனர். வீரன் அம்பும், வில்லும் கொண்டு சென்றான். வேலன் வேல் ஒன்று கொண்டு போனான். கொஞ்சத்தூரம் இருவரும் ஒன்றாகவே சென்றனர். விலங்குகள் எவையும் அகப்படவில்லை. பிறகு இருவரும் தனித்தனியே பிரிந்து செல்லலாயினர். வீரன் தன் முன் எதிர்ப்பட்ட பெரிய விலங்குகளையெல்லாம் செல்லவிட்டு ஏதும் சிறியவை தென்படமாட்டாவா? என பார்த்துக்கொண்டு போகையில் ஒரு சிறு முயல் தென்பட்டது.

வில்லிலே அம்பைப்பூட்டி எய்தான். அம்பு பட்டு முயல் வீழ்ந்துவிட்டது. வெற்றி பெற்றேன் என்னும் மனமகிழ்ச்சியோடு அவ்வம்பு வில்லுடன் முயலையும் தூக்கிக்கொண்டு ஊர் திரும்பினான். வேலன், தன் முன் எதிர்ப்பட்ட சிறிய விலங்குகளையெல்லாம் போகவிட்டு ஏதும் பெரியவை வரமாட்டாவா? என எண்ணிக் கொண்டு செல்கையில் ஒரு பெரிய யானை எதிர்ப்பட்டது.

கையிலிருந்த வேலினால் யானையின் மெய்யிலே எறிந்தான் அது தவறிவிட்டதால் யானை ஓடிவிட்டது. வேலையும் எடுத்துக்கொண்டு சோர்வுடன் ஊர் திரும்பினான்.

பல பெருமக்கள் முன்னிலையில் வீரனும், வேலனும் காட்சியளித்தனர். இருவரும் தத்தம் செய்கைகளைப் பற்றிக் கூறினர். இருவர் கூற்றையும் கேட்ட மக்களிற் சிலர் "வேலனைவிட வீரனே வெற்றிபெற்றவன் இதுவே வீரம்'' என புகன்று போற்றினர்.

உடனே அக்கூட்டத்தில் இருந்த வள்ளுவர் எழுந்தார். "நீங்கள் கூறியது தவறு. வேலனே வெற்றி பெற்றவன் அதுவே வீரம்'' என்றார். ஏனையோர் அஃதெப்படி? என வினவினர். அது கேட்ட வள்ளுவர் "சிறிய செயலுக்குப் போய் அதில் வெற்றி எடுப்பதைவிட பெரிய செயலில் இறங்கித் தோல்வியடைந்தாலும் இதுவல்லவோ வீரம்? சிறிய காட்டு முயலுடன் மோதுவதைவிட-மோதி வெற்றி பெறுவதைவிட, பெரிய யானையுடன் மோதுவது-மோதித் தோல்வியடைவது வீரந்தானே? முயலைக் கொன்ற அம்பைக் கையில் தூக்கி வைத்திருப்பதைவிட, யானையைத் தப்பவிட்ட வேலைக் கையில் தூக்கிப் பிடிப்பது உயர்வானதல்லவா? நீங்களே சொல்லுங்கள்.

சிறிதில் வந்த வெற்றியைவிடப் பெரிதில் கிடைத்த தோல்வி நன்றன்றோ? இறங்கினால் பெரிய காரியத்தில் இறங்க வேண்டும் அது தானே வீரம் என்பது. எண்ணிப் பாருங்கள்" என்றார்;

சிந்தித்த மக்களும் "ஆமாம் அதுவே வீரம். வேலனே வெற்றிபெற்றவன்'' என்றனர். எல்லோர் மனதிலும் வள்ளுவர் சொல்லிய "கான முயல் எய்த அம்பினில் யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது'' என்றபொன்னுரையே மின்னிக்கொண்டிருந்தது. வாழ்க வீரம்! வாழ்க வள்ளுவர்! வாழிய வண்டமிழ்!

—"தாமரைத்திவான்"
ஈச்சந்தீவு

பாரதியின் பாட்டொலி!

# "செந்தமிழ் நாடு"

நாம் வருங்கால வளர்பயிர்கள். எமது உள்ளங்களிலே முதன்மையான இடம் பெறவேண்டிய பற்று நாட்டுப் பற்று. நாடு இல்லாவிட்டால் நமக்கு ஏது வாழ்வு? தாயை விட நாடு முதன்மையானது. நாம் வாழ வீடு வேண்டும். தமிழன்னை வாழ-வளம் பெற நாடு-தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கென வேண்டும். அப்பொழுது தான் நமது பழம் பெருமை வாய்ந்த கலைப் பொருட்களையும், தெய்வ மொழியாம்—தேன் தமிழையும் பேணிப் பாதுகாக்க முடியும். பாரதி கூட செந்தமிழ் நாட்டையே முதலிற் கூறினார். இதைத்தான் இன்று நாம் ஈழத்தில் இன்னல் பல அடைந்தும் பாதுகாக்க முயற்சிக்கிறோம்.

தமிழ் நாடு—ஈழகம் எமது தந்தையர் நாடு. தமிழ் நாடு என்றால், தேன்பாய்கிறது காதிலே. சக்தி பிறக்குது மூச்சிலே. வேதம், வீரம் செறிகிறது நெஞ்சிலே. காவிரி, வைகை நினைத்தவுடன் எத்தனை செல்வமுண்டென உணர்ச்சி வருகிறது. கல்வியிலே சிறந்த கம்பன் பிறந்த நாடு. வான் புகழ் வள்ளுவனை வழங்கிய நாடு நெஞ்சைக் கொஞ்சும் சிலப்பதிகாரத்தை சிந்திய செந்தமிழ் நாடு, எங்கள் நாடு

ஈழத்தில் மட்டுமல்ல; புட்பகம், சாவகம், ஆகிய தீவுகளிலெல்லாம் தமிழன் கொடி பறந்தது. புலியும் கயலும் கொடிகளிலே பொறிக்கப்பட்டுப் பட்டொளி வீசிப் பறந்தது. கலிங்கத்திலே எம் கொடி வலிமையுடன் பறந்தது. [illegible]

(13-ம் பக்கம் பார்க்க)

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யின் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி'' C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

வளர்மதி
சுதந்திரன் மாணவர் மன்றம்
அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 2.

பெயர்.............................................................

பாடசாலை.......................................................

விலாசம்..........................................................

.......................................................

............................................ ............................................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

# தொழில் புரிவோம்

[ஆ. சிவநேசச்செல்வன்]

தோழர்கள் யாமொன்று கூடிடுவோம்-தொழில்
ஓங்கிட நாமிங்கு பாடிடுவோம்.
நாணயம் மிக்க நல்வாழ்வு முன்னேறிட
நாமும் பல தொழில் செய்திடுவோம்.

உண்ண உடுக்கக் குடியிருக்க நல்ல
ஊதியம் தேடிட வேண்டுமன்றோ-இதை
எண்ணி மனதினில் ஊக்கம் கொண்டாலென்றும்
இன்பம் மிகுந்திட வாழ்ந்திடலாம்.

மற்றவர் செய் தொழில் ஊதியம் கொண்டிங்கு
மானமில்லாமலே வாழ்பவனை.
இச்சகம் தன்னிலே பிச்சை எடுப்பவன்
என்று துணிந்தே யிகழ்ந்திடுவோம்.

ஈழத்துணவினை ஏற்றுமதி செய்து
இன்பமுடன் முன்னோர் வாழ்ந்திருந்தார்.
தாளைக் கொடுத்துணவைத் தருவித்திடல்
சங்கையோ நாட்டிற்குப் பங்கமன்றோ.

ஓலையிற் பன்னங்கள் செய்திடுவோம்-சுவை
ஊறும் பனங்கட்டி காய்ச்சி விற்போம்
பாணிப் பனாட்டுடன் வெல்லமும் சீனியும்
பானமும் செய்து பணம் குவிப்போம்.

நூலினில் ஆடையும் நூதனத் தையலும்
நுட்பமுடன் சுவைப் பட்சணமும்.
சாலவும் செய்து விற்றால் வறுமைத்தனை
சாடிடலாமென்று சாற்றிடுவோம்.

கோழிவளர்த்தலும் எண்ணெய்வடித்தலும்
கொப்பறாவாக்கி நெய்காய்ச்சுதலும்
நீளுந் தென்னந் தும்பினிற் கயிறுக்கலும்
நீடிய செல்வத்தைத் தந்திடுமே.

பூமிதிருத்திநெல் காய்கறிகீரை
கிழங்குபழவகை செய்து விற்றால்
நாமுயர் செல்வத்தைப் பெற்றிடலாம் என்றும்
நம்பனருள் பெற்று வாழ்ந்திடலாம்.

தனியொருவனுக் குணவில்லையெனில்
சகத்தினையழிப் போமெனவே.
கனிவுளங் கொண்டு பாரதிபாடிய
கவிதையை மனங் கொண்டிடுவோம்.

புத்தகக் கல்வியைமாத்திரம் கற்றிடில்
பூமிவளம் தந்து காத்திடுமோ
புல்லுருவிப்பட்டம் கட்டிக் கொண்டாலெங்கள்
புன்மை தவிர்ந்திட மார்க்கமுண்டோ?

# பெண் சமுதாயம்

பெண் சமுதாயமே! இன்னுமா நீ விழிப்புணர்ச்சியைப் பெறவில்லை? நீ விழித்தெழுந்து, உறக்கத்தைக் கலைத்துக் கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டதை அறிந்துகொள்ளவில்லையா? தூக்கத்தினின்றும் எழுந்திரு. முதலில் ஒரு ஆலோசனை. ஒரே ஒரு வார்த்தை. என்ன என்று கேட்கிறாய்?

சிந்தி! நன்றாகச் சிந்தி, ஆழ்ந்துசிந்தி. ஆராய்ச்சியின் ஆதரவுடன் சிந்தி. எதைப் பற்றி?

உன் சமுதாயத்தைப் பற்றியேதான். சிறிது காலத்திற்கு முன்னிருந்த தமிழ்ப் பெண் சமுதாயத்தைப் பற்றியேதான். அன்றைய சமுதாயத்துடன் உன் இன்றைய சமுதாயத்தையும், சேர்த்துச் சிந்தி, ஒப்பிட்டுப்பார்.

அன்றைய பெண் தன் மொழி, இனம் முதலியவற்றுக்கு ஏதாவது இன்னல் ஏற்பட்டால் அவ்வின்னல் தன்னுயிர்க்கு ஏற்படும் இன்னல் போல் வருந்தினாள். அந்த இன்னலைக் களைய நாட்டினர் செல்லும் வழியில், எடுக்கும் முயற்சியில் தன் கணவனையும், மக்களையும், செல்லத் தூண்டினாள்; போர் தொடுத்தால். போருக்கேவினாள். போரில் 'கணவனும், மக்களும் எதிர்த்துப் போரிட்டதனால் இறந்தனர்' என்ற வார்த்தைகளைச் செவி வழியாக நுகர்ந்ததும் சந்தோஷப்பட்டாள். அதே நேரத்தில் 'புறங்காட்டியோடினர்' என்றால் உடனே உயிரைத் தானும் மாய்த்துக் கொள்வாள்.

ஆனால் இன்றைய பெண்களோ......அவர்களைப் பற்றி நினைக்கும் போதே வெட்கமும், துக்கமும் புடைசூழ்கின்றனவே!

தனது மொழி, இனம் முதலியனவற்றுக்குத் துன்பம் ஏற்பட்டால் அத்துன்பத்தைத் துடைக்கும் பாதையில் செல்ல அஞ்சுவாள். அதுதான் தன்னுடன் நிற்கட்டுமே! அதுதானில்லை!! அவ்வழிச் செல்லும் தன் கணவன், மைந்தன் யாவரையும் இடைமறிப்பாள். தன் தாயினும் இனிய தமிழ் மொழி படும் இன்னலைக் கண்டு கலங்குபவளாகக் காட்சி தென்படவில்லை. வடக்கிலும், கிழக்கிலும், மூலைமுடுக்குகளிலுமிருந்து பார்க்கப்பார்க்க விழிப்பாள். இதுதான் நாகரிக உலகில் பெண்கள் கற்றுத் தேறுவதின் பயன்!

பெண் சமுதாயமே! பெற்றுவிட்டாயா விழிப்புணர்ச்சியை? கண்டு கொண்டாயா உன் சமுதாய இடைவெளிகளுக்குள்ள வேற்றுமையை? அறிந்து கொண்டாயா உன் சமுதாயத்தைப் பற்றி? வழி வகுத்துவிட்டாயா வேற்றுமையை வேரோடொழிக்க?

சரி! இத்துடன் உன் இச்சிந்தனைக்கு முற்றுப்புள்ளியிடு. நடந்தவை கடந்தவையாகட்டும். இனியாவது சிந்தித்துச் செயலாற்று. முன்னோர் ஏட்டைப் புரட்

(1?-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## இளம் விவசாயிகள் விவசாய விழா

இணுவிலில் கடந்த 30-4-60 ல் இளம் விவசாயிகள் விவசாய விழா கொண்டாடினர்கள். இளம் விவசாயிகளை அங்கத்தவர்களாகக் கொண்ட ஜோதி விவசாயக் கழகத்தின் முதலாவது ஆண்டு விழா ஆசிரியர் திரு. வ. நடராசாவின் தலைமையில் நடைபெற்றது.

விழாவையும், விவசாயப் பொருட்காட்சியையும் வட மாகாண அதிபர் திரு. ஸ்ரீகாந்தா ஆரம்பித்து வைத்தார். அவர் பேசுகையில், "தமிழர்களுக்கு இது ஒரு சோதனைக்காலம், இந்த நிலை மாற மந்தம் பிடித்த பொருளாதார நிலை மாற வேண்டும். அதற்காக இளைஞர்கள் உழைக்க வேண்டும்" என்ருர்.

விழாவுக்கு தலைமை வகித்த, இணுவை சைவ மகாஜன வித்தியாசாலை அதிபர் திரு. வ. நடராசா, கிராமியப் பொருளாதார நிலை பற்றியும், அதன் அபிவிருத்திக்கான வழி முறைகள் பற்றியும் அழகாகச் சொன்ஞர். மற்றும், திரு. சோதிப்பெருமான், திருமதி மோஸஸ், திரு. கதிரவேல் ஆகியோரும் பேசிஞர்கள்.

விழாவைச் சிறப்பித்தது கலை நிகழ்ச்சிகள். பெண்களின் நடனங்களும், ஆண்களின் அபிநய நடனங்களும் இடம் பெற்றன. முடிவில் கலைஞர்களில் நாடகம் ஒன்றும் இடம் பெற்றது. விழா ஆரம்பத்தில், ஜோதி விவசாயக் கழகம் நடத்திய சில கைப்பணிப் போட்டிகளில் பரிசு பெற்றோருக்கு டாக்டர் திருமதி மோஸஸ் பரிசில்கள் வளங்கிஞர்.

சித்திரம், கைப்பணி, சமயம் ஆகிய போட்டிகளில் முதற் பரிசைப் பெற்றவர் செல்வி பொ திரௌபதி தேவி. ஏனைய போட்டிகளில் இளைஞர்கள் சி. கண்முகலிங்கம், இ. இலகுநாதன், செல்வி ப. கமலாதேவி ஆகியோரும் பரிசைப் பெற்ருர்கள். செல்வி திரௌபதி தேவியும், அவரது ஆசிரியைகளும் பழரசம் செய்யும் முறை பற்றி விளக்கி, பழரசம் தயார் செய்து பார்வைக்கு வைத்தார்கள். விழா முடிவில் அதைச் சில இளைஞர்கள் பரிமாறிக் கொண்டார்கள்.

விழாவை வெற்றிகரமா நடத்த உழைத்தவர்கள், இளைஞர்கள் சி. கண்முகலிங்கம், பெ. கனகசபாபதி, ந. குமாரசாமி, பெ. வேலாயுத பிள்ளை இ. குலேந்திரன் ஆகியோரே.

—

## இளைஞர் எழுச்சி மன்றம்

"இன்று பெரிய நீலாவளையில் எத்தனையோ சங்கங்கள் உருவாகி செயலாற்றல் இன்றிச் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன! அவ்விதமே இந்த இளைஞர் எழுச்சி மன்றமும் மங்கி மறைந்து போகாமல் இக்கிராம வளர்ச்சிக்காக சிறந்த முறையில் ஆக்க வேலைகள் செய்து முன்னேற்றப்பாதையில் விரைய வேண்டும்."

சமீபத்தில் பெரிய நீலாவளை "இளைஞர் எழுச்சி மன்றத்தினை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசிய கரவாகு வடக்கு கிராமச்சங்க அக்கிராசனர் திரு. ஏ. பொன்னையா குறிப்பிட்டார்.

அடுத்து மன்றத்தின் நோக்கம் செயல் திட்டங்கள் பற்றி திரு. நீலாவணன் விரிவாக எடுத்துக் கூறிஞர். மன்றம் வளர்ந்து இக்கிராமத்தின் எதிர்காலம் நன்ருக அமைய வேண்டும் என வாழ்த்தி ஆசிரியர் திரு. சி. சபாரத்தினம் உரையாற்றிய பின்னர், பின் வருவோர் மன்றத்தின் உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக திரு இ. செல்லையாவும் உப தலைவராக திரு. சி. வன்னியசிங்கமும் இணைச் செயலாளர்களாக திரு எச். இரத்தினசிங்கம், செ. வீரசிங்கம் ஆகியோரையும் பொருளாளராக திரு. பெ. தங்கராசாவையும் சபையோர் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்.

திருவாளர்களான அ. கோவிந்தன், சி. குலசேகரம், வ. செல்லையா, அ. இராசமாணிக்கம், கு. துரைராசா, க கந்தையா, வ. சிவராசா ஆகியோரைக் கொண்ட செயற் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

செயலாளர் எச். இரத்தினசிங்கத்தின் நன்றி உரையோடு கூட்டம் இனிது முடிவுற்றது.

—

## மூதூரில் இக்பால் விழா

கவிஞர் அல்லாமா இக்பால் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு ஒரு பொதுக் கூட்டம் மூதூர் அக்கரைச்சேனை அரசினர் முஸ்லிம் பாடசாலையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தலைமை ஆசிரியர் ஜனுப். எஸ். எம். அபூபக்கர் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் ஜனுப்களான யூ எல் தாவூத் ஏ. எம். இப்ருகிம் ஏ. ஸி. கே. முகம்மது, ஏ. எம். ஹனிபா, எம். வாஹித், செல்விகளான ஏ. ஜெஸீமா, எம். பயக்கூன் ஆகியோர் பேசிஞர்கள்.

மாணவர்களின் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

—

## மாபோலை ஜும்ஆ மஸ்ஜித் பரிபாலன சபை

கொழும்புப் பெரும்பகுதியின் அழுத்குறு கோறளை தெற்குப் பிரிவுக்கு ஜனுப் எம். ஐ. முகமது தாஜுத்தீன் முஸ்லிம் விவாகப் பதிவுகாரராக நியமிக்கப்பட்டுள்ளார். அன்ஞர் மாபோலை ஜும்ஆ மஜ்ஜித் பரிபாலன சபை, மாபோலை மீலாத் ஷரீப் மஜ்லிஸ் ஆகியவற்றின் கௌரவ செயலாளருமாவார். மாபோலை முஸ்லிம் வாலிபர்களிடையே முஸ்லிம் வாலிப சங்கத்தையும் உருவாக்கிஞர். மேற்படி பிரிவுக்கு நாற்பது ஆண்டுகள் முஸ்லிம் விவாகப் பதிவுகாரராகக் கடமையாற்றி அண்மையில் மறைந்த எஸ். எம். முகம்மது இபுருகீம் லெப்பை அவர்களின் புதல்வராவர். இவர் மாபோலை அரசினர் முஸ்லிம் வித்தியாலயத்தின் பழைய மாணவராவர்.

—

## தமிழ் வளர்ச்சி மன்றம்

நீர்கொழும்பு வாழ் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தமிழை வளர்க்க வேண்டும் என்ற பெரு நோக்கோடு நீர்கொழும்பில் வாழும் தமிழ் இளைஞர்களின் முயற்சியில் கடந்த 17-4-60-ல் தமிழ் வளர்ச்சி மன்றம் என்ற பெயரில் ஒரு மன்றம் நிறுவப்பட்டது.

மன்றத்தின் முதற் கூட்டம் கடந்த 17-4-60-ல் நடைபெற்றபோது கீழ் கண்டவர்கள் அதன் நிருவாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: குமுதன்: துணைத் தலைவர்: இளந்தென்றல், செயலாளர்: முல்லை [illegible] துணைச் செயலாளர்: இளங்கோ, பொருளாளர்: [illegible]கன், துணைப் பொருளாளர்; சேவியர். செயற்குழுவினர் பின்னர் தெரிவு செய்வதென்று முடிவு செய்யப்பட்டது.

—

## "சாதித் துவேசம் ஒழிக்கப்படவேண்டும்"

"ஆதியில் எல்லா இன மக்களும், சுயநலமில்லா சமத்துவப் பிரியர்களாக வாழ்ந்தார்கள். கேவலம் திமிர் பிடித்த ஒரு கூட்டம் சாதீய மனப்பான்மையை வளரவிட்டதிஞல், தமிழினம் சின்னுபின்னமாகி சிதருண்டு தம் உயிரினும் மேலான மொழியை இழந்து, நாட்டின் அரசியலில் கூட திரிசங்கு சுவர்க்கத்தில் தள்ளப்பட்டிருக்கின்றது. இவ்வவல நிலை மாறுவதற்கு சாதித் துவேசம் ஒழிக்கப் பட்டால் தான் சமத்துவமும், சகோதரத்துவமும் ஐக்கியமும் எல்லா மக்களிடையும் வளரும்" மேற்கண்டவாறு அகில இலங்கை அருந்ததிய சங்கத்தின் சார்பில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு பதிலளிக்கையில் "தமிழன் குரல்" ஆசிரியர் திரு. எஸ். கே. டி. சௌந்திரபாண்டியன் கூறிஞர்.

இக் கூட்டம் சங்கத் தலைவர் திரு. மூ. வேலாயுதம், தலைமையில், சங்கப் பணிமனையில் கடந்த 30-4-60-ல் நடைபெற்றது.

அதுபோது திருவாளர்களான, மா. சே. அருள், அ. பொன்னையா, குருசாமி, முத்தையா, வா. மு. முனிசாமி ஆகியோர் திரு. சௌந்திரபாண்டியனின் பொது நலப்பண்பையும், குணுதிசயங்களையும் பாராட்டிப் பேசிய பின், சங்கப் பொதுச் செயலாளரின் நன்றியுரையோடு கூட்டம் முடிவடைந்தது.

—

## நீர்வேலி ஸ்ரீகணேச சனசமூக நிலையம்

நீர்வேலி ஸ்ரீகணேச சனசமூக நிலையத்தின் 10-வது ஆண்டு நிறைவு விழா நிலைய மைதானத்தில் கடந்த 30-4-60-ல் திரு. ஜே டி. சபாபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. வட பகுதி உள்ளூராட்சி உதவி அதிபர் திரு. ஏ. ஏ. யோசேப் விழாவை ஆரம்பித்து வைத்துச் சொற்பெருக்காற்றிஞர். கோப்பாய் முன்னுள் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. பாலசுந்தரமும், திரு. அ. சிவசுந்தரமும் விழாவில் கலந்து கொண்டனர்.

திருவாளர்கள் உ. ந. தேவ கடாட்சம், ஆசிரியர் சி சுப்ரமன்யம், ச முத்துவேலு, செல்வி ந முருகேசபிள்ளை முதலியவர்கள் விழாவில் சொற்பெருக்காற்றினர்.

"சிறப்பாக வேண்டும் வேளையெல்லாம் நல்லுதவி அளித்த கோப்பாய்க் கோமகன் திரு. கு. வன்னியசிங்கத்தின் மறைவு குறித்து மேற்படி மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறது" என்று மேற்படி நிலையத்தின் ஆண்டு அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

—

## சிலாபம் தமிழ் இளைஞர் மன்றம்

சிலாபம் தமிழ் இளைஞர் மன்ற நான்காவது ஆண்டு நிறைவு விழா கடந்த 30-4-60-ல் சிலாபம் சென் மேறிஸ் கல்லூரி மண்டபத்தில் வட மேல் மாகாணத் தமிழாசிரியர் சங்கச் செயலாளர் திரு.வி.எஸ். பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

விழாவில் திரு. எச். எம். பி. மொஹிதீன் சொற்பொழிவாற்றுகையில் "இலங்கை வாழ் முஸ்லிம்களின் தாய் மொழி தமிழ் தான். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. சில 'முஸ்லிம் தலைவர்கள்" தங்களுடைய சுயநலத்திற்காகவும், பதவி வேட்கைக்காகவும் முஸ்லிம் இனத்தையே காட்டிக் கொடுக்கின்றனர். இது பெரிதும் வருந்தத்தக்கது. இத்தகைய புல்லுருவிகள் ஒழிய வேண்டும். உரிமைக் குரல் எழுப்பும் தமிழர்களுடன் முஸ்லிம்களும் சேர்ந்து போராட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். "இலக்கியமும் வாழ்வும்" என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் மேலும் அவர் கூறியதாவது: "வாழ்வு இன்றேல் இலக்கியம் இல்லை. இலக்கியம்தான் வாழ்க்கையின் வழி காட்டி. மனிதனின் சீரான வாழ்வுக்கு வழி காட்டுவது, இலக்கியம்" என்ருர்.

திரு. வி. எஸ். பிள்ளை தமது தலைமையுரையை நிகழ்த்துகையில் "சிலாபத்திலும் தமிழ் வாழ்கிறது என்பதை வட மேல் மாகாணத்துக்கு மட்டுமல்லாமல் முழு இலங்கைக்குமே எடுத்துக் காட்டிய தமிழ் இளைஞர் மன்றத்தினருக்கு நாம் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம். எம்மில் பிரிவினை கூடாது: யாழ்ப்பாணத் தமிழன், மட்டக்களப்புத் தமிழன், சிலாபத் தமிழன், சைவத் தமிழன், கிறிஸ்த்தவத் தமிழன், இஸ்லாமியத் தமிழன் என்றும், எம்மில் நாமே பிரிவினையை ஏற்படுத்திக் கொள்ளாமல் ஒன்று பட வேண்டும். அப்பொழுது தான் எமது இலட்சியங்கள் நிறைவேறும். இழந்த உரிமைகளை மீண்டும் பெறலாம் என்று கூறிஞர்.

வித்துவான் க. ந. வேலன் பேசுகையில் "எந்த ஒரு விஷயத்தையும் அன்பான முறையில் கூறவேண்டும். அதுவே இலக்கியப் பண்பு. எமது உணர்ச்சிகளை மீட்டி எம்மை மகிழ்ச்சியடையச் செய்வது தான் இலக்கியம். எதைக் கூறினும் பண்புடன் கூற வேண்டும்". என்ருர்.

திரு. க. கைலாசபதி பேசுகையில் "இத்தகைய விழாக்கள் மொழி வளர்ச்சிக்கு அவசியம். தமிழ் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த உதவுவதும் இத்தகைய விழாக்களே. அந்நியருக்கு அடிமைப் பட்டுக் கிடக்கும் மக்களுக்கு உணர்ச்சி யூட்டித் தட்டியெழுப்ப இத்தகைய விழாக்கள் தேவைப்படுகின்றன" என்ருர்.

மன்றத் தலைவர் திரு. வி. எம். ஏ. முகம்மது வரவேற்புரை நிகழ்த்திஞர். சென். மேறிஸ் கல்லூரி மாணவர்கள் தமிழ்த் தாய்க்கு வணக்கம் செலுத்திக் குத்துவிளக்கேற்றி வைத்து விழாவை ஆரம்பித்து வைத்தனர். இறுதியில் சிலாபம் கலா சங்கத்தினரின் 'சோக்கிரட்டீஸ்' நாடகமும் புத்தளம் அரச் அன்னம்மாள் கல்லூரி மாணவிகளினது நாட்டிய நிகழ்ச்சியும் இடம்பெற்றன.


## சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவருமல் பெற்றுக்கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

**வருடச் சந்தா ரூபா. 10-00**

(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சர்குலேஷன் மனேஜர்
சுதந்திரன்.

தபால் பெட்டி 1188,
கொழும்பு.

பணம்! சேமியுங்கள்!! பணம்!!!

இன்றே **நாஷனல்** பாட்டரிகளைப்




பாவிக்க ஆரம்பித்து அதிக லாபம் பெற்று ஆனந்தியுங்கள்.

நீடியகாலம் பாவிக்கிறது



விலேயோ மிகக் குறைவு

இறக்குமதியாளர்கள்!

**எஸ். யூ. முகம்மது ஹாஜியார்,**

70, டாம் வீதி, கொழும்பு. போன்: 7653 ★ 143, மெயின்வீதி, காலி, போன்:525


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தாய்நாட்டு ரசிகர்களின் இதயங்களைக் கவர்ந்த
# இன்பத் தமிழ்த் தாரகை

சேய்நாட்டு ரசிகர்களையும் எல்லையற்ற மகிழ்ச்சியில் ஆழ்த்த

# 20-ம் திகதி வெள்ளி முதல்

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **நவா** (கொம்பனித்தெரு)

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **மனோகரா** (யாழ்ப்பாணம்)

**விஜயா** (மட்டக்களப்பு) **வெம்பிளி** (கண்டி) **விஜயா** (அம்பாறை)

**விஜிதா** (மஸ்கெலியா) **மொடர்ன்** (பதுளை) **ஸ்ரீகிருஷ்ணு** (திருகோணமலை)






## நடிகர்கள்

சிவாஜி கணேசன்-எம். ஆர். ராதா-
பி. சரோஜாதேவி - பத்மினி பிரியதரிசினி
டி. எஸ். பாலையா-எஸ். வி. சுப்பையா
எம். வி. ராசம்மா-சி. கே. சரஸ்வதி
எம். என். நம்பியார்-என். லலிதா
கே. எம். நம்பிராஜன்-சி. டி. ராஜகாந்தம்

## ஆகியோர் நடித்த

சரவணு பிலிம்ஸ்

# பாகப் பிரிவினை

கதை வசனம்: **எம். எஸ். சோலைமலை**

பின்னணி: **சவுந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், பி. லீலா, சுசீலா' ஜமுனுராணி, ராஜேஸ்வரி**

இசை | திரைக்கதை—டைரக்ஷன்
**விஸ்வநாதனும் மூர்த்தியும்.** | **ஏ. பீம்சிங்**

இப் பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை 194-ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்க மாவத்தை சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 மே 15-ம்தேதி பிரசுரிக்கப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org